வாரப் பதிப்பு விலை சதம் 23

தலைமைத் தபால்நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்

SUTANTIRAN

194 A, BANDARANAIKE STREET, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.




புத்தகம் 18 | திருவள்ளுவர் ஆண்டு 1995 ஆனி திங்கள் 8-ம் நாள் (21—6—1964) ஞாயிற்றுக்கிழமை ஸபர் 10 | இதழ் 4

# மொழிப் பிரச்னையில் என். எம். தலையிட முடியாது

## நிதி அமைச்சின் மீதும் பிரதமரின் கண்காணிப்பு இருக்குமாம்

கூட்டரசாங்கம் மொழிப் பிரச்சினையையும் தமிழ்ப் பேசும் மக்களின் இதர பிரச்சினைகளையும் தீர்ப்பதில் தீவிர கவனம் செலுத்தக் கூடுமென்று கூட்டரசாங்கம் ஆட்சிக்கு வந்தபோது சிலருக்கு ஏற்பட்ட திடீர் நம்பிக்கை இப்பொழுது மறையத் தொடங்கிவிட்டது.

டாக்டர் என். எம். பெரேராவுக்கு பொருளாதாரம் சம்பந்தப்பட்ட விஷயங்களைத் தவிர வேறு விஷயங்களில் தலையிடுவதற்கு அரசாங்கத்தினுள் இடமில்லையென்றும், மொழி, குடியுரிமைப் பிரச்சினைகளில் அதன் பழைய கொள்கையையே அரசாங்கம் தொடர்ந்து கடைப் பிடிக்கலாமென்றும், டாக்டர் பெரேரா அதற்குப் பணிந்து போவதைத் தவிர தனது கொள்கையை நிலைநாட்டுவதற்கு அரசாங்கத்துள் அவருக்கு இடம் கிடைக்காது என்றும் அரசியல் அவதானிகள் கருத்து தெரிவிக்கின்றனர்.

சுதந்திரக்கட்சி முகாமில் டாக்டர் பெரேரா "சிறைப்" படுத்தப் பட்டுள்ளாரென்பதும் அரசாங்கத்தின் மீதுள்ள சிங்கள தீவிர வகுப்புவாதிகளின் ஆதிக்கம் இன்னும் தளரவில்லையென்பதும் அவர்களின் அபிப்பிராயம்.

அது மட்டுமல்ல, நிதி அமைச்சின் பொறுப்பிலுள்ள பொதுச் சேவை நிர்வாகத்தில் பிரதமரின் கண்காணிப்பு வேறு இருக்குமென்றும் கூறப்படுகிறது. டாக்டர் பெரேரா மீது ஆட்சியாளர் ஒரு கண் வைத்திருக்கிறார்களென்ற ஐயம் ஏற்பட இது ஏதுவாகியுள்ளது.

சிறுபான்மையோர் விடயத்தில் அரசாங்கம் இன்று கடைப் பிடித்து வரும் கொள்கையில் சடுகளவேனும் மாற்றம் ஏற்படும் பட்சத்தில் மந்திரி சபையிலிருந்து தாமும், தம்முடன் ஆளும் கட்சியிலிருந்து பலரும் வெளியேறிவிடப்போவதாக, கூட்டு மந்திரிசபையை எதிர்த்த ஒரு 'பழம் பெரும்' மந்திரி 17ம் திகதி இரவு திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவிடம் கூறியதாக நம்பகமான தகவல் கிடைத்துள்ளது. இந்த மந்திரியுடன் அரசியலில் இன்று பிரபலமடைந்து வருபவரும் வகுப்புவாதக் கிளர்ச்சியில் முன்னணியிலிருப்பவருமான ஒரு பௌத்த பிக்குவும் காணப்பட்டாராம்.

டாக்டர் என். எம். பெரேரா மந்திரி சபையில் சேர்ந்தமையினால் சிறுபான்மையினரின் பிரச்சினைகளைச் சுமுகமாகத் தீர்க்க இடம் ஏற்படலாம் என்று பலரும் நம்பினர். ஆனால் நமக்குக் கிடைத்துள்ள செய்திகளிலிருந்து அவர்களின் நம்பிக்கை நிறைவேறாதென்றே தெரிகிறது.

அரசாங்க ஊழியர் நிர்வாகவிவகாரத்தில் டாக்டர் என். எம். பெரேராவுக்கு வழங்கியுள்ள பொறுப்புகள் அனைத்தையும் பிரதமர் சிறிமாவோ கண்காணிக்கவேண்டும் என்றும் சுதந்திரக் கட்சியின் மொழிக் கொள்கைக்கு முரணாக டாக்டர் பெரேரா நடந்து கொண்டால் தாமும் தமது சகாக்களும் கண்டிப்பாக ஆளும் கட்சியிலிருந்து வெளியேறி விடுவார்கள் என்று மந்திரியும், புத்த பிக்குவும் கூறியதைத் தொடர்ந்து அலறி மாளிகைக்கு திரு. இலங்கரத்தின அழைக்கப்பட்டாராம்.

கூட்டு மந்திரி சபை அமைப்புக்காக திரு. இலங்கரத்தின பெரும் பாடுபட்டவர் என்பது தெரிந்ததே. கூட்டு அரசாங்கம் பற்றித் தாம் ஆளும் கட்சிக்கு அளித்த வாக்குறுதி எந்த வகையிலும் எச்சந்தர்ப்பத்திலும் மீறப்படமாட்டாது என்று திரு. இலங்கரத்தின கூறினாராம். தமது கூற்றை மெய்ப்பிக்க, தொலைபேசி மூலம் டாக்டர் என். எம். பெரேராவை திரு. இலங்கரத்தின அலறி மாளிகைக்கு அழைத்தாராம்.

டாக்டர் பெரேரா அலறி மாளிகையில் வைத்து, 'தாம்

(8-ம் பக்கம் பார்க்க)

## வெளி நடப்பு......!

புதிய வரவு செலவுத் திட்டத்தை தயாரிக்க சகல தொழிற் சங்கங்களிடமிருந்தும் நிதி மந்திரி அபிப்பிராயம் கோரியிருப்பது அறிந்ததே. இதுசம்பந்தமாக துறைமுக அதிகார சபையிலுள்ள சகல தொழிற்சங்கங்களின் கூட்டம் கடந்த வாரம் பிரதம பொறியியலாளர் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு அரசாங்க எழுது வினைஞர் சங்கப் பிரதிநிதிகளும் அழைக்கப்பட்டிருந்தார்கள்.

கூட்டம் ஆரம்பம் முதல் அரசகரும மொழியிலேயே நடைபெற்றது. ஆகவே அ. எ. வி. சங்கப் பிரதிநிதிகளால் கூட்ட நிகழ்ச்சிகளைப் புரிந்துகொள்ளமுடியவில்லை. இந்த நிலையில் அ. எ. ச. பிரதிநிதி ஒருவர் கூட்டம் சிங்கள மொழியில் நடப்பதால் தங்களால் எதுவும் புரிய முடியவில்லையென்றும், தாங்களும் புரிந்துகொள்ளக்கூடியதாக கூட்டத்தை நடாத்தினுற்றான் தாங்களும் ஆலோசனைகளைக் கூற முடியுமென்றும் தலைவரிடம் வேண்டுகோள் விடுத்தார்கள்.

வேண்டுகோளைக் கவனிப்பதாகக் கூறிய தலைவர், தொடர்ந்து கூட்டத்தை சிங்களத்திலேயே நடாத்தினுர். நிலைமையை மீண்டும் அ. எ. வி. சங்கப் பிரதிநிதிகள் எடுத்துக் காட்டினர். ஆனால் தலைவர், அவர்களின் வேண்டுகோளை ஏற்க மறுத்துவிட்டார். இந்த நிலையில் அ. எ. வி. சங்கப் பிரதிநிதிகள் கூட்டத்திலிருந்து வெளிநடப்புச் செய்தார்கள்.

## காஷ்மீர் சிங்கத்துக்கு சீனப் பிரதமர் கடிதம்

### அரசியல் வட்டாரங்களில் சந்தேகம்

சீனப் பிரதமர் சூ யென் லாய் காஷ்மீர் சிங்கம் ஷேக் அப்துல்லாவுக்கு ஒரு கடிதம் எழுதியிருப்பதாகவும், அக் கடிதத்தை ரகசியமாக ஷேக் அப்துல்லாவிடம் கொடுக்கும்படி இந்தியாவிலுள்ள சீனத் தூதரகத்திற்கு தெரிவித்திருப்பதாகவும் நம்பகமான வட்டாரங்களிலிருந்து அறியவருகிறது. இதுவரை அக் கடிதம் ஷேக் அப்துல்லா வசம் கொடுபடவில்லை என்றும் அவ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சீன எதிர்ப்புப் பிரசாரத்தில் ஷேக் அப்துல்லா தீவிரம்காட்டி வருவது அறிந்ததே. அதே நேரத்தில் இந்திய பாகிஸ்தானிய உறவுக்கும் அவர் பல முயற்சிகளையும் புதிய வழிகளையும் கையாண்டு வருகிறார். பாகிஸ்தான்-இந்திய உறவு வலுவடைந்தால் சீனவுக்குப் பெரும் நஷ்டம். அதே நேரத்தில் ஷேக் அப்துல்லாவின் கருத்துக்கு, பாகிஸ்தானிடம் ஓரளவு செல்வாக்குண்டு, எனவே ஷேக் அப்துல்லாவின் முயற்சியை திசைதிருப்பும் பணியில் சீனத்தலைவர்கள் இறங்கலாமென்று அரசியல்வட்டாரங்கள் அபிப்பிராயப்படுகின்றன. அதன் முதற்படியாக சூ யென் லாயின் கடிதம் இருக்கலாம் என்று பலர் கருதுகிறார்கள்.

### கொடி படம் பிடிக்கப்படுகிறது

இந்தியாவில் உள்ள சீனத் தூதரகம்பற்றி மேலும் ஒரு செய்தி வெளியாகியுள்ளது. பாரதநாட்டில் எங்கெல்லாம் கொம்யூஸ்டுக் கொடிகள் பறக்கின்றனவோ, அந்தக் கொடிகளையெல்லாம் படமெடுக்கிறார்களாம். இப் படங்களையும் அத்துடன் அக் கொடிகள் பறக்கும் பிரதேசங்கள் பற்றிய விபரங்களையும் சேகரித்து சீனவுக்கு அனுப்புவதாகவும் அறியப்படுகிறது.

## சிங்களவரல்லாதார் வெளிநாடு செல்வது தடைசெய்யப்படலாம்

இலங்கையிலுள்ள சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த எவரும் வெளிநாடுகளுக்குச் செல்லுவது தீவிரமாகக்கட்டுப் படுத்தப்படும். உபகாரச் சம்பளம் பெற்றோ, வெளிநாட்டு அழைப்புகளை ஏற்றோ இனிமேல் எந்த சிறுபன்மை இனத்தவரும் வெளியே செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள் எனத் தெரியவருகிறது.

வெளிநாடுகளுக்குச் செல்லும் சிறுபான்மை இனத்தவர்கள் இங்குள்ள அரசியல் சூழ்நிலைகளைப் பற்றி மோசமாகப் பிரசாரம் செய்து வருவதாகவும், சிறுபான்மை இனத்தவர்கள் துன்புறுத்தப்படுவதாகக் கூறி வருவதாகவும் அரசுக்கு தொடர்ந்து புகார் செய்யப்பட்டு வருவதாக அறிகிறோம். இக்கூற்றினால் இலங்கையைப் பற்றிய தப்பபிப்பிராயம் வெளிநாடுகளில் வெகுவாகப் பரவி வருகிறதாம்.

ஆகவே வெளிநாடுகளுக்கு எந்தக் காரணங்களையிட்டும் செல்லும் சிறுபான்மை இனத்தவர்களைக் கட்டுப்படுத்த வெளிநாட்டு விவகார இலாகா ஆலோசித்து வருவதாகத் தெரியவருகிறது.

வெளிநாட்டு அரசாங்கங்களின் அழைப்பின்பேரிலோ, வெளி நாட்டு உபகாரச் சம்பளப் படிப்பு பெறுவதன் மூலமோ, சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த எவரும்

(9-ம் பக்கம் பார்க்க)

## நிதி மந்திரிக்கு கறுப்புக் கொடி

### இ. த. அ. வா. மு. தீர்மானம்

சிங்களம் மட்டும் சட்டத்தினால் தமிழ் பேசுமினத்தின் தன்மானமும் சுதந்திரமும் பறிக்கப்பட்டிருக்கும் நிலையில், அரசாங்கத்தின் எந்த மந்திரியாவது உத்தியோகபூர்வமாக தமிழ்ப் பிரதேசத்திற்கு விஜயம் செய்தால் கறுப்புக் கொடி பிடித்து எதிர்ப்புத் தெரிவிப்பதென நிதி மந்திரி திரு. டாக்டர் பெரேராவின் வருகையையிட்டு, இலங்கைத் தமிழரசு வாலிப முன்னணி ஓர் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

வாலிப முன்னணித் தலைவர் திரு. நா. செல்லையா

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமுதாய மாற்றத்திற்கு எனது எழுத்துக்கள் உதவ வேண்டும்

பேச்சுக் கலையைக் கலையாகக் கைவரப் பெற்ற ஒருவர் திரு. புதுமை லோலன் அவர்கள். அவ்ரைத் தலைசிறந்த பேச்சாளன் என்ற அளவில்தான் பலர் அறிந்திருக்கிறார்கள். அவர் ஒரு பழம் பெரும் எழுத்தாளர் என்ற வகையில் இன்றைய எழுத்தாளர்களோ, இளைஞர் சமூகமோ அறிந்திருக்கவில்லை. அவர் சிறுகதைத் துறையில் மட்டுமல்ல நாவல் துறையிலும் தனக்கென தனியான முத்திரையைப் பொறித்துள்ளார். அவற்றுள் 'காணிவல் காதலி', 'தாலி' என்பன குறிப்பிடத்தக்கவை. கட்டுரையாசிரியர் என்ற வகையிலும் அவருக்குத் தனியிடமுண்டு 'ஆனந்தன்' என்ற இலக்கிய திங்கள் ஏட்டின் இணை ஆசிரியர்களில் ஒருவராகவும், 'தமிழரசு' என்ற மாத மிருமுறை வெளிவந்த அரசியல் ஏட்டின் ஆசிரியராகவும் இருந்திருக்கிறார். 'சுதந்திரன்' வாசகர்களுக்குக் கதைகளாகவும் கட்டுரைகளாகவும் நிறைய வழங்கிவந்துள்ள திரு. புதுமைலோலன் எழுத்துலகிலிருந்து ஒதுங்கியிருப்பது விசனிக்கத்தக்கதாகும்.



கட்டுரையாசிரியர்

## எப்படி எழுத ஆரம்பித்தேன்

## புதுமைலோலன்

1946ம் ஆண்டு என எண்ணுகின்றேன், எஸ். எஸ். சி. சித்தி பெற்றுவிட்டு வாசிப்பதைத் தொழிலாகவும், உயிர் மூச்சாகவும் கொண்டிருந்த நேரம்.

மாலையாகும். எங்கள் வீட்டு முற்பக்கத்தில் மாதர் மகாநாடு ஆரம்பமாகும். எனது உறவினர், அயலவர் பலரும் அம் மகாநாட்டின் உறுப்பினர்கள். 'கதைக் கச்சேரி' யும் கிண்டலும் சிரிப்பொலியும் என் வாசிப்பைக் குழப்பும். இவர்களது பேச்சில் அயற்பெண் ஒருத்தி பற்றிய விமர்சனம் அடிக்கடி நிகழும்.

### கரு

அந்த அவள் ஏழை. அவளின் கணவன் கொழும்பில் கடை. வருடமொரு முறையோ இரு முறையோ கணவன் வருவான். மூன்று நான்கு நாட்கள் தங்குவான். பின்பு போய் விடுவான். அவன் ஒரு 'பணம் பண்ணும்' யந்திரம். ஒரு பெண் பணத்தை மட்டுமா வாழ்வில் கேட்கிறாள்...? அதனால், இளமையுடன் கூடிய அப் பெண் இன்னொருவனின் ஆசைநாயகியதாகப் பேச்சு. கணவன் என்னதான் வெளிநாட்டில் பணம் 'பண்ணும்' யந்திரமாகவிருந்தும், அவர்கள் ஏழைகளாகவே வாழ்ந்தனர். அந்த அவள் ஒரு குழந்தையைச் சொந்தக் கணவனுக்கு உரித்தாக்கவில்லை எனவும் பேசினர்.

தாசி...என்று இந்த மகாநாடு அந்த ஏழைப் பெண்ணைப் பற்றிப் பேசிப் பேசித் தீர்த்தது, என் காதிலும் இது அடிக்கடி கேட்டது.

### உரு

இக்காலத்தில் அகிலனின் 'சிநேகிதி', 'துணைவி' என்ற நாவல்களை ஒரு முறைக்கு இரு முறை வாசித்துவிட்டேன். அற்புதப் படைப்பாகவும், அரிய நாவலாவும் அகிலனின் இந்நாவல்கள் எனக்குப்பட்டன. அகிலனது கதைகள் கதைகளாகத் தெரியவில்லை. ஏதோ நேரே நடப்பது போன்ற பிரமையை எனக்களித்தன. தொடர்ந்து கு. ப. ரா. வின் கதைகளைப் படித்தேன். யாழ்ப்பாணத்திலிருந்து 'மறுமலர்ச்சி' இடைக்கிடை வரும். அதை ஆவலுடன் வாங்கி வந்து படிப்பேன். வரதர் 'வென்றுவிட்டாயடி ரத்தினா...' என்று ஓர் தொடர்கதையை மறுமலர்ச்சியில் எழுதிவந்தார். அதுவும் என்னை ஆட்கொண்ட கதை.

இந்நிலையில்......

நானும் எழுதினால் என்ன —இந்த சமுதாயத்தில் பல கதைகள் உண்டாக்கும் கருக்கள் உருண்டு புரள்கின்றனவே......!

### பிரசவம்

ஓரிரவு. நீண்ட கடதாசிகள் முன் உட்கார்ந்து. ...ம்ம்! தொடங்கிவிட்டேன்.

என் வீட்டில் பல பெண்களும் பேசிய — விமர்சித்த— அந்தப் பெண் கதாநாயகியானாள். ஏழை என்ற காரணத்தால் அவள் தாசி எனப் பேசிக்கொள்ளப்படும் அதேவேளை, பணக்கார வீடுகளில் நாகரிக மோஸ்தருடன் நடைபெறும் விபச்சாரங்களை நாமறியாதிருக்கிறோம்.

கதை பின்னிவிட்டேன். 'ஏழை தாசியா' என்ற பெயரைக் கதைக்கிட்டேன்.

ஏழ்மை காரணமாக மட்டும், உண்மையறியாது தாசியாக்கி எந்தப் பெண்ணையும் பேசக் கூடாது. அப்படிப் பேசியதால், ஒரு பெண் கடலை அடைக்கலமடைகின்ற கோரத்தை என்கதை புலப்படுத்தியது.

திரும்பவும் யான் எழுதிய கதையைப் படித்தேன். மனம் பெரிய ஆனந்தமடைந்து, துள்ளியது. ஆமாம்! கதாசிரியனாகி விட்டேன். ஒரு கதையைப் பிரசவித்துவிட்டேன். என் முதற் பிரசவம்.....இக் குழந்தையை யாவரும் அள்ளி அணைத்து, உச்சிமோந்து புகழ வேண்டும். அல்லாவிடில்......!

### பிரசுரம்

அவ்வமயம் 'சுதந்திரன்' பெரிய அளவில் (முழு அளவு) வெளிவந்துகொண்டிருந்தது. சுதந்திரனுக்கு இக் கதையை அனுப்பி வைத்தேன், எனது சொந்தப் பெயரில் அக் கதை யான் எழுதி இரண்டு கிழமைகளால் வெளிவந்தது. அதுவும் ஆசிரியர் குறிப்புடன்...... 'இன்றைய சமுதாயக் கண்ணாடி' எனக் கதைக்குப் புகழ் கூறியபடி வெளியாகியது.

எத்தனை முறை சுதந்திரனைப் படித்தேன்...பலமுறை; பத்திரிகை நைந்து போகுமளவுக்குப் படித்தேன். மனதிலே இன்ப மயக்கம்...என்னாலும் எழுத முடியும் என்ற ஒரு திடநம்பிக்கை குடிகொண்டது.

### சாதனை

எனது முதல் கதையே பிரசுரம் பெற்றது என்பது, சில எழுத்தாளருக்கு ஆச்சரியமாகலாம், கதையை எழுதி வேறு பலருக்குக் காட்டி, திருத்துவித்து எழுத்தாளராகிக் கொண்டு பலர் நடமாடிய நேரம், ஆனால், நான் கதையை எனது பெயரில்

(13-ம் பக்கம் பார்க்க)

ஆனந்தா லேகியம்
இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கைகளுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து நெஞ்சடைப்பு, சகல வித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை;
பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3-00.

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனாமாக அனுப்புவோம்.
பெரியது ரூபா 5-50. சிறியது ரூபா 3,00.
வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:
ஆனந்தா வைத்தியசாலை,
நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு—11.

## கவிதைப் பூங்கா

## தமிழைக் காப்பாய்

—'வெண்சங்குவேள்'—

விழிதிறந்து உணவென்று, உறக்க மென்றோம்
வேறென்ன உலகமதில் தமிழா, கண்டோம்?
பழுத்தமரம் நோக்கியங்கு வெளவால் சென்று
பகையின்றி அவையினமாய் வாழும் போது
அழிந்தொழியும் சதையோடு ஆண்மை பேசி
அறையினிலே உணர்வற்று வாடு கின்றாய்;
சுழிக்கின்ற குணமதனின் சுருதி சேர்த்து
சூனியமாய் வாழ்கின்ற வாழ் வெதற்கோ?

மொழிஉணர்வை இரத்தத்தின் முறுக்கி லேற்றி
முடிபுனைந்து உன்ஆட்சி மலரச் செய்ய
வழியென்ன கண்டாய்நீ, தமிழா இன்றே
வாழ்வாங்கு எம்மொழியை வாழவைக்க
வழிபெற்று நீயெழுக, வியன் உலகில்
வீரநடை போட்டமொழி வாழ வைப்பாய்
பழியுனக்கு வேண்டாமிச் சிங்களத்தை
படிக்காதே, பதவிக்காய், தமிழைக் காப்பாய்!

## உனை மறவேன் எனை நம்பு

—சி. கனகசூரியம்—

நிலையில் உலகில் எனதின் உயிரின்
நினைவை விடுதல் இலகாமோ,
விலையில் அழகும், குழைவும் தெளிவும்
விடுமோ பிரிய? முடியாதே;
உலையில் பெருகும் எரியாய்க் குறைகள்
எரிசெய் உனையே இனிவிட்டு
விலைமா தினையே மணமா புரிவேன்
விடுந் துயரம் எனதன்பே.

அவளை மணவென் றுரைசெய் திடுவோர்
அடடா முரடர், விழியற்றோர்
துவளும் இடையாம் துயர்கொல் நடையாம்
அவளின் எழிலை உரைசெய்தார்
பவளம் மணிகள் எழில்மா ளிகைகள்
தருவோம் எனவும் அவர்சொன்னார்
கவளம் உணவே கிடையா விடினும்
கணமும் மறவேன் உனையுண்மை.

சதியே புரிவோர் "சலுகை தருவோம்"
எனவே மொழியும் இழிசொல்லார்;
அதனில் உளமே விழவும் உனையே
நினையேன் எனவா துயர்கொண்டாய்?
விதியே யெனினும் உயிர்போ யிடினும்
முடியா முடியா திதுவுண்மை,
மதியின் ஒளியே,தமிழே அயலாள்
தனையே நினையேன் எனைநம்பு.

## வேற்று மொழியை ஏற்பதோ?

—பா. சிவகடாட்சம்—

உலகம்யாவும் உணர்ந்து போற்றும்
உயர்வு தந்த வாசகம்
ஊர்கள்தோறும் உணர்வு ஊட்டும்
சீர்மை பெற்ற நற்குறள்
கலகநெஞ்சும் கனிந்து கொஞ்சும்
கனிவு மிக்க திருப்புகழ்
காட்டுமின்பத் தமிழ் இருக்க
வேற்று மொழியை ஏற்பதோ?

அழகுக்குள்ள முனிவன் தந்த
பழகு நூலைக் கொண்டவள்
அழியாச் செல்வம் அனைத்தும் கொண்டு
மேதினியை ஆண்டவள்
பழகு கம்பன் காதலித்த
அழகுமேன்மை கொண்டவள்
அன்னை தமிழ் மொழியிருக்க
அயல்மொழியை அணைப்பதோ?

சங்கம் போற்றும் தரணி போற்றும்
சால்பு குன்றாத்தாயவள்
திங்கள் போற்றும் திசைகள் போற்றும்
இமை யற்ற மேலவள்
பொங்குமின்பப் புதையல் போலும்
போதையேற்றும் புதியவள்
எங்கள் இன்பத் தமிழிருக்கச்
சிங்களத்தை ஏற்பதோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எஸ். ஆர். திருநாவுக்கரசு,
கொழும்பு—6.

கே: கொழும்பில் சில பகுதிகளில் வாலிபர்கள் சிலர் சாப்பாட்டுக் கடைகளில் சுதந்திரன் எதிர்ப்புப் பிரசாரம் தொடங்கியிருக்கிறார்களே, உங்கள் காதுக்கு எட்டவில்லையா?

ப: அந்தக் கும்பல் யார் என்பது எனக்குத் தெரியும். சீனர்கள் நடத்தும் ஓட்டல்களில் 'ஓசி'ச் சாப்பாடு அடித்துவிட்டு மாசேதுங்கின் புரட்சித் தத்துவத்தைத் தலைகால் புரியாமல் சண்டப் பிரசண்டம் செய்துகொண்டு திரியும் இந்தச் சீனச் சார்புக் குஞ்சுகள் சிறுவைப் பற்றிய செய்திகள் சுதந்திரனில் வெளிவருவதால் ஆத்திரம் கொண்டு எதிர்ப்பிரசாரத்தில் இறங்கியுள்ளனர். ஓட்டல்களைச் சுற்றிக் கொண்டு திரியும் பழக்கத்துக்கேற்ப, சாப்பாட்டுக் கடைகளிலேயே கைவரிசையைக் காட்டுகின்றனர்.

ஃ

வி. ஆர். வேலு,
தலவாகொல்லை.

கே: குயுக்தியாரே, தொழிற் சங்கங்களின் 21 கோரிக்கைகளில் தோட்டத் தொழிலாளர்களுக்கு குடியுரிமை வழங்கப்பட வேண்டும் என்ற அடிப்படைக் கோரிக்கை ஏன் சேர்க்கப்படவில்லை?

ப: அந்தக் கோரிக்கை மொழி வழித் தொழிற்சங்கங்களிடமிருந்தே வர முடியும். அந்தக் கூட்டில் மொழி வழித் தொழிற்சங்கம் ஒன்று கூட சேரவில்லை.

ஃ

சி. விஜயசிங்கம்,
இளவாலை

கே: மந்திரிசபை மாற்றத்தினால் தமிழ் மக்களுக்கு விமோசனம் உண்டா?

ப: நிலைமை குழப்பமாயிருக்கிறது. கொஞ்சம் பொறுங்கள்! சில தினங்களில் நிலைமை தெளிவாகிவிடும்.

கே: டாக்டர் என். எம். பெரேரா நிதி மந்திரியாய் வந்தபடியால் நாட்டில் ஏழை மக்களின் மேல் சுமத்தியிருக்கும் வரிப் பளு குறைய இடமுண்டா?

ப: புதிய வரிப்பளு கிடையாது என்று கூறிவிட்டார் புதிய நிதி மந்திரி. பழைய பளுவைச் சுமந்து தானாக வேண்டும் போலிருக்கிறது.

ஃ

இ. செல்வரதி,
கோப்பாய்,

கே: இலங்கையில் 'சிங்களத் திணிப்பு' அதி தீவிரமாக அமுலாக்கப்பட்டு வருவதினால் பொதுநலம் விரும்புவோர் யாது செய்ய வேண்டும்?

ப: சிங்களத் திணிப்பை இடையறாது எதிர்க்க வேண்டும். இந்த எதிர்ப்பின் தன்மை பல கட்டங்களில் பல விதமாக மாறலாம்.

ஃ

உதயவன்
வெள்ளவத்தை

கே: வெள்ளையர் இலங்கைக்கு சுதந்திரம் கொடுத்த போது—பாகிஸ்தானைப் போல—சமஷ்டி அரசை விரும்பும் சமஷ்டிக் கட்சியினர் தமிழர்க்குத் தனிப் பிரதேசம் பிரித்துத் தரும்படி கேட்டிருக்கலாமே.

ப: பாகிஸ்தான் தனி ஆட்சியே தவிர சமஷ்டி ஆட்சியன்று. வெள்ளையர் ஆட்சிப் பொறுப்பை சிங்களவர் கையில் கொடுக்கும் போது சமஷ்டிக் கட்சி இருக்கவில்லை. பிற்காலத்தில்தான் கட்சி, அரசியல் அரங்கில் தோன்றியது. சுதந்திரம் கொடுக்கப்படும்போது முன்னணியில் நின்ற தலைவர்கள் கோட்டை விட்டுவிட்டார்கள்.

ஃ

எஸ். கே. சூரியம்,
வீரமுனை

கே: எனது திருமணத்திற்குத் தங்களுக்கும் அழைப்பிதழ் அனுப்பினால் வருவீர்களா?

ப: இப்படியும் கேட்பதுண்டா? திருமணத்துக்கு வருவீர்களா என்று கேட்டுத் தெரிந்துகொண்டு அழைப்பிதழ் அனுப்புவதானால், யாருமே வரமாட்டார்கள்.

ஃ

வை.ச. ஆனந்,
சான்ரநகர்

கே: பொருளாதாரம் வளர்ந்தால்தான் மொழிப் பிரச்சினை தீரும். வயிற்றுக்கு உணவற்ற போது பாஷையைப் பற்றிக் கவலைப்படுகிறவர் யார் என்று கேட்கிறான் என் நண்பன். நீர் என்ன சொல்லுகிறீர்?

ப: ஆனால் பைத்தியம் தீர்ந்தாலன்றோ கலியாணம் செய்ய முடியும்? மொழிப் பிரச்சினை தீராமல் மக்கள் ஒத்துழைப்பு கிடைக்காது. ஒத்துழைப்பின்றி பொருளாதாரம் வளராது. மொழிக்கும், பொருளாதாரத்துக்குமுள்ள தொடர்பு இப்பொழுது புரிகிறதா?

ஃ

சி. என். மகேந்திரன்,
திருகோணமலை

கே: மந்திரி ரி. பி. இலங்கரத்தின அண்மையில் இங்கு விஜயம் செய்தபோது நடந்த கூட்டத்தில் எம். பி. மஜீத் தமிழில் பேசியதன் மர்மம் என்ன?

ப: இதிலென்ன ஆச்சரியம்? மந்திரி இலங்கரத்தின தமிழில் பேசினால்தான் நீங்கள் வியப்படைய வேண்டும்.

ஃ

அ. சிவப்பிரகாசம்,
ஏழாலை மேற்கு.

கே: இடதுசாரி ஐக்கிய முன்னணி ஆரம்பிக்கப்பட்ட பொழுது அடுத்த அரசாங்கமென்று கூறிய இன்றைய நிதி மந்திரி டாக்டர் என். எம். அவர்கள் தனது கட்சி மகாநாட்டில் இடதுசாரி ஐக்கிய முன்னணி ஆரம்பத்திலேயே இறந்துவிட்டதாக [illegible] தின் அர்த்தம் என்ன?

ப: அவர் சொல்வது தவறு. அந்த முன்னணி ஆரம்பத்திலேயே இறந்திருந்தால் மந்திரிப் பதவிக்கு ஏற அவருக்கு முன்னணி என்னும் ஏணி எப்படிக் கிடைத்திருக்க முடியும்?

கே: யோவ், ரசிகர்கள் கண்ணில் மண்ணைத் தூவி விட்டு ஒருவாரம் எங்கே போய் இருந்தீர்கள்?

ப: நேருஜியின் அந்திம கிரியைக்காகத் தில்லிக்குச் சென்றிருந்தேன். கடலெனத் திரண்ட கூட்டத்தில் சிக்கிக் காயமடைந்து ஒரு வாரம் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றேன். இதனால் உங்களுக்கும் ஒரு வாரம் ஓய்வு கிடைத்தது.

ஃ

வெ. ரெங்கராஜ், ஆள்கரஞேயா.

கே: நான் சிரேஷ்ட வகுப்பு சித்தியடைந்தவுடன், உமக்கு தெரிவித்தால், எனக்கு ஏதாவது வேலை தருவீரா?

ப: அவலை நினைத்து உரலை இடிக்கிறீர். வேலை கிடைக்காது. ஆகவே சித்தியடையவும் வேண்டாம்.

ஃ

ஆர். எம். எஸ். நாதன்,
கொழும்பு—11.

கே: பருவ வயதைக் கடந்து [illegible] கிறேன். திடீரெனத் தோன்றிய ஒரு நண்பனும் அவனைக் காதலிக்கிறான், இப்பொழுது அவளுக்கு இரு காதலர்கள். இதற்கு என்ன செய்யலாம்?

ப: இதிலென்ன விந்தை இருக்கிறது? ஒரு தினசரியின் ஆசிரியர் பதவிக்கு இருவர் உரிமை கோருவதும், 'நான்தான் ஆசிரியர்' என்று ஒருவரும், 'இல்லை, நான்தான் ஆசிரியர்' என்று மற்றொருவரும் அதேபத்திரிகையில் அடிக்கடி செய்தி பிரசுரித்துக்கொள்வதும் உங்களுக்குத் தெரியுமா?

ஃ

இராசநாயகம்,
மட்டக்களப்பு.

கே: சில ஆண்டுகளாக என்னைக் காதலித்து வந்த ஒரு மாணவி இப்போது ஏமாற்றி விட்டாள். இவள் எழுதிய காதல் கடிதங்கள் என்னிடம் கணக்கிட முடியாமல் இருக்கின்றன. இவை அனைத்தையும் திருப்பித் தரும்படி வேண்டுகிறாள். என்ன செய்யலாம்?

ப: உடனே அவளிடமே அவற்றைக் கொடுத்துவிடுங்கள். காதலிக்கும் வரைதான் அவை காதற் கடிதங்கள். காதலைத் துறந்து விட்டால், கடிதங்களின் காதற் தன்மையும் மறைந்து விடுகிறது. பின்னர் அவை அவளுக்குரிய வெறும் காகிதக் குப்பைதான்.

ஃ

எம். எம். மர்ஜீனு,
கிண்ணியா—9.

கே: அண்மையில் இங்கு நடைபெற்ற ஒரு கூட்டத்தில் மூதூர் இரண்டாவது எம். பி. மஜீத்தான் இனி எம். பி. யாகப் போட்டியிடப் போவதில்லை என்றும், மாவட்ட சபைக்குத் தலைவராகவோ போக விரும்புவதாகவும் கூறினரே, இதன் மர்மம் தான் யாதோ?

ப: ஓகோ! சுதந்திரக் கட்சி உத்தேச மாவட்ட சபைகளைக் கைப்பற்றும் திட்டமும் இப்பொழுதே தயாராகி விட்டதா?

ஃ

'உயிர்ச்சாந்தி'
வாழைச்சேனை

கே: தமிழ் அரசுக் கட்சி இது வரைக்கும் சாதித்தது என்ன?

ப: சாதிக்காதது என்ன என்பதைக் கூறுவீர்களா?

ஃ

எஸ். எம். ஹனிபா,
நீர்கொழும்பு.

கே: எனது மகன் சிறுவன். நான் வெளியே சென்றால் என்னுடன் வரத் துடிக்கிறான். இதற்கு என்ன செய்யலாம்?

ப: மகனுக்கு 10 வயதாகி விட்டால், வெளியே செல்லும்போது அவனையும் உடன் அழைத்துச் செல்லுங்கள். தந்தையிடமிருந்தே அவன் தன்னம்பிக்கையைப் பெற வேண்டும்.

ஃ

பூவதி, உடுவில்.

கே: குயுக்தியாரே. நான் உம்மை 'லவ்' பண்ணுகிறேன். கண்ணாலம் கட்டிக்கொள்கிறீரா?

ப: அம்மாடியோ! எனக்கு வெட்கமாயிருக்கிறது!

ஃ

அ. அம்பிகைபாகன்,
மட்டக்களப்பு.

கே: அழகும் பண்பும் ஒருவரிடம் அமைந்திருக்குமா?

ப: இருக்கலாம். அங்கொடைப் பக்கம் போனால் அத்தகை ஆசாமிகள் பலரைப் பார்க்கலாம்.

ஃ

ப. ஜெயகுமாரன்,
பருத்தித்துறை.

கே: குயுக்தியாரே! உங்களுடைய தலைமாதிரி எனக்கொரு தலை வாங்கித் தாரீங்களா?

ப: தரமுடியும். ஆனால், என்று நீங்கள் என்னிடம் உப்புச் சப்பற்ற கேள்வி கேட்கிறீர்களோ, அன்றே அது கரைந்து விடும்—இராவணன் சீதைக்குக் காட்டிய இராமனின் மாயத் தலை கரைந்தமாதிரி.

திருவாளர்
குயுக்தியார்
மே/பா சுதந்திரன்
தபால் பெட்டி இல. 1183
கொழும்பு-12.

இம் முகவரியைக் கத்தரித்து தபால் அட்டையில் ஒட்டியனுப்பப்படும் வினாக்கள் மட்டுமே கவனத்திற்கு எடுக்கப்படும்.

## 'கூஜா தூக்கிகள்'

—"மருதூர்க்கனி"—

தெள்ளு தமிழ்மொழி யாளுக்கு—லட்சம்
பிள்ளைகளுண்டடா! ஈழத்தில்
அத்தனை பேர்களும் வீணரா—இனி
செத்தும் அவளுயிர் காப்பரே.

ஆற்றில் அமிழ்ந்திடும் ஆம்பலாய்,—அன்னை
தேற்று வாரின்றியே மூழ்கையில்
தோணிக ளோட்டியே ஆடுகிறார்!—தங்கள்
தோழிக ளோடுற வாடுகிறார்!

முல்லைச் சிரிப்பினைப் பார்த்ததும்—அவள்
பல்லைப் பிடுங்கிடப் பாய்ந்திடும்,
விந்தை மனிதர்கள் வாழ்கிறார்—எனின்
இந்தத் தீவினில் தானடா!

கன்னல் பிழிந்த,நற் சாறெனின்—அவள்
இன்னல் தவிர்த்திட ஏலுமோ?
சாதனை தானினித் தேவை—இனி
ஓதுதல் போதுமே சாட்டா!

மாடப் புறுவெண ஸாழ்ந்தவன்—இன்று
ஓட விரட்டவா பார்க்கிறார்?
கூசா மலேசில 'தாசிகள்'—வீனல்
கூஜா தூக்கியே கூனுகிறார்!

என்றோ ஒருதினம் தாய்மொழி—இங்கு
புன்னகை பூத்தாடல் பூணுவாள்!
அந்தப் பொழுதினில் 'வால்பிலர்'—நின்று
எந்தக் கண்ணினால் பார்ப்பரோ?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலை ஒத்திவைக்க சட்டம் திருத்தப்படும்?

## மூன்றில் இருபங்கு வாக்குகளை பெறுவதற்கு பெரு முயற்சி

சுதந்திரக் கட்சி—சமசமாஜக்கட்சி கூட்டு அரசாங்கம் இப்பொழுது அரசாங்கக் கட்சிக்குப் புறம்பான பிரதிநிதிகளின் ஆதரவையும் பெற்றுக்கொள்வதற்காக ஓர் இயக்கத்தை ஆரம்பித்துள்ளது.

பாராளுமன்றப் பிரதிநிதிகளில் மூன்றில் இரு பங்கு வாக்குகளைப் பெற்றுக்கொள்வதே இந்த முயற்சியின் நோக்கமாகும்.

கூட்டாட்சி ஏற்பட்டால் அரசியற் சட்டத்தைத் திருத்தி, பொதுத் தேர்தலை மூன்று ஆண்டுகளுக்கு ஒத்திப்போடக் கூடுமென்ற பயம் முன்பு அரசியல் வட்டரங்களில் இருந்து வந்தது.

இவ்வாறு 4-6-64 ந் திகதி 'ரிவிதின' ஒரு செய்தியை வெளியிட்டுள்ளது.

இச் செய்தியில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:

'ஜனப் பிரதிநிதிகள் சபையில் மூன்றில் இரு பங்கு வாக்குகளைப் பெற முடியுமானால், அரசியற் சட்டம் திருத்தப்படலாம்.

இலங்கையை ஒரு குடியரசாக்கும் சாத்தியக் கூறும் உண்டு.

டாக்டர் என். எம். தமது 14 அம்சத் திட்டத்தை இடதுசாரி ஐக்கியமுன்னணியின் திட்டமாக ஏற்றுக் கொள்ளுமாறு அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டார். அவரது இக் கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்படவில்லையெனினும் அவவாறு அவர் கேட்டுக்கொண்டதின் நோக்கம் இ. ஐ. முன்னணியைச் சேர்ந்த இதர இடதுசாரிக் கட்சிகளையும் அரசாங்கத்துள் கொண்டு வருவதே என்றும் அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

அத்துடன், சுதந்திரக் கட்சியின் கொள்கைகளுக்கு மதிப்பளிக்க விரும்பும் எந்த சோஷலிசக் கட்சியையும் ஏற்றுக் கொள்ளத் தான் தயாராயிருப்பதாக பிரதமர் சிறிமாவோ இவ்வாரம் நாவலப்பிட்டிக் கூட்டமொன்றில் கூறியுள்ளார்.

விரைவில் திரு. பிலிப்குணவர்த்தனவையும், கொம்யூனிஸ்டுக் கட்சியையும் அரசாங்கத்தில் சேர்த்துக் கொள்ளும் சாத்தியக் கூறுகள் உண்டு என அரசியல் வட்டாரங்கள் நம்புகின்றன.'

('தவஸ' பத்திரிகை பொதுத் தேர்தலை மூன்று ஆண்டுகளுக்கு ஒத்திவைக்கும் உத்தேசத்தைக் கண்டித்து இவ்வாரம் ஒரு தலையங்கம் எழுதியுள்ளது. சிங்களத் தினசரிகள் கூட்டு அரசாங்கம் செய்ய வேண்டிய வேலைகளைப் பற்றியும் புதிய நிதி மந்திரி நிறைவேற்ற வேண்டிய கடமைகள் பற்றியும் புத்திமதிகள் கூறி இவ்வாரம் தலையங்கங்கள் தீட்டியுள்ளன. இவை கூட்டு அரசாங்க முயற்சியை எதிர்த்து வன்மையான கண்டனங்கள் தெரிவித்த பத்திரிகைகள் என்பது குறிப்

### சிங்கள இதழ்களில்...

(13-ம் பக்கம் பார்க்க)

## நடுக் காட்டில் தமிழ் குடியேற்றத் திட்டம்

சேருவிலையிலிருந்து 2 மைல் தூரத்தில் வடக்கே நடுக் காட்டில் கள்ளக் குடியேற்றக்காரர்கள் ஆட்சி புரியும் குடியற்றேத் திட்டமொன்று தோன்றியுள்ளது, என்று ரிவிதின (14-6-64) கூறுகிறது.

இப்பத்திரிகை இது பற்றி மேலும் கூறுவதாவது:—

"கள்ளக் குடியேற்றக்காரர்களைக் கொண்டுவந்து நடுக்காட்டிலுள்ள இக் குடியேற்றத் திட்டத்திலுள்ள வீடுகளில் வசிக்கச் செய்து, அவர்களைக் கொண்டு காடுகளை வெற்றி, கமம் செய்வித்து, சிறிது காலம் சென்ற பின்னர், அவர்களுக்கு நல்ல வீடுகளை அமைத்துக் கொடுத்து, நாவலப்பிட்டி, கண்டி, நுரலை, அட்டன், ஆகிய தோட்டப் பகுதிகளிலிருந்து பெண்களைக் கொண்டு வந்து அவர்களுக்குக் கலியாணம் செய்து வைத்து, இச்குடியேற்றத் திட்டத்தில் நிரந்தரமாகக் குடியேற்றிவிடுகிருர்கள்.

இந்தப் புதிய குடியேற்றத் திட்டத்தில் இவ்வாறு கள்ளக் குடியேற்றக்காரர்கள் குடியேற்றிய வீடுகள் 60 க்கு மேல் உண்டு.

அண்மையில் சேருவிலையிலிருந்து வேட்டைக்குச் சென்ற சிங்களவர் கோஷ்டியொன்று நடுக்காட்டில் இக் குடியேற்றத் திட்டத்தைக் கண்டு பிடித்தனர். அங்கு வசிப்பவர்களுக்கு ஒரு வார்த்தை கூடச் சிங்களம் தெரியாது. அவர்கள் இத் தகவலை சேருவிலை விகாரையின் நாயக்கதேரோவுக்குத் தெரிவித்தனர்.

இக்குடியேற்றத்தின் தலைவர் ஓய்வு பெற்ற ஒரு தமிழ் கிராமத் தலைமைக்காரரென்றும் அவருடைய இக்குடியேற்றத் திட்டத்துக்கு திருமலை கச்சேரியிலுள்ள சில உயர்தர தமிழ் அதிகாரிகள் பூரண ஆதரவு அளிக்கின்றனரென்றும் தெரிகிறது."


### தமிழ் கிராமங்களை நசுக்க ஏற்பாடு

"வட, கிழக்கு மாகாணங்களிலும், வட மத்திய மாகாணத்திலும் அரசாங்கத்துக்குரிய காணிகளில் பலவந்தமாக நிறுவப்பட்டுள்ள தமிழ்க் கிராமங்களைப் பற்றி விசாரணை நடத்த காணி அமைச்சு செய்யும் முயற்சிகள் டி. ஆர். ஓ அலுவலகம் போதுமான ஒத்துழைப்பு அளிக்க விரும்பாததின் காரணமாக வெற்றி பெறவில்லை" என்று காணி அமைச்சு டி. ஆர். ஓ. அலுவலகத்துக்கு அறிவித்துள்ளது.

இதனுல் காணி அமைச்சு இது பற்றி புதிய நடவடிக்கைகள் எடுக்குமென்று காணி அமைச்சு அதிகாரி ஒருவர் கூறினுர்.

—ரிவிதின (14-6-64)


# கட்டுமானமும் நிர்மாணமும்



முர் - ஹில்
டம்பர்கள் 35 & 45

½ இ 1 கன யார், மணல், சரளைக்கல், கொங்கிறீட் முதலானவைகளை குறைந்தபட்ச செலவில் கொண்டு செல்ல உகந்தது.




ஸ்ரொதேர்ட் & பிட் கூட்டு இயந்திரம்

கிரியாம்சை: ஒரு மணித்தியாலத்திற்கு 15 முதல் 60 கன யார் கலந்த கொங்கிறீட், கை அல்லது வாயு இயக்கம், கூடிய அளவு வேலைக்கு சிக்கனமான, எளிதான, முறையில் நேர்த்தியான சேர்ப்புக்குகந்தது.

ஸ்ராதேர்ட் & பிட்
கொங்கிறீட் மிக்சர்கள்

3½ - 54 கன அடி கலந்த கூட்டு கொள்ளளவுகள். பதமான கலப்பு. இறுக்கமான தன்மை. 3½ வி - BSS 1305 உடைய நேர்த்த மாற்று 7 வி - ஸ்கூப் மற்றும் பூரணமான திறையுடன்



பெலாபோன்
ரம்மர்கள்

உயரம் 4 அடி 2½ அங். நிமிடத்திற்கு சராசரி 50 தடவைகள் 9,000 இறாத்தல் விசையுடன் 20 அங்குலம் பாய்ந்து விழும். இயக்குவதற்கு விசேஷ திறமை தேவையில்லை.



அல்லம் ஹைட்ரோலிக்
பார்
குரொப்பர்கள்



அதுக்கும் இலகுவா. குட்டையான பாதை. கூடிய அளவு விட்டம் 1 3/4 அங்குலம் வரை 5 குதிரை பவருடன் பூர்த்தியானது. ஸ்டார் டெல்டா ஸ்டார்ட்டர்.

மணல் மெட்டல் முதலாகியன
கொண்டு செல்லும் சாதனங்கள்



என்ஜின் அல்லது மோட்ட இயக்கம் எவ்விதமான கையாளும் தேவைகளுக்கும் விளக்கம் பெற எம்மை நாடுங்கள்.

த கொழும்பு கொமேர்ஷல் கம்பெனி லிமிட்டெட்
(பெரியபிரித்தானியாவில் இணைக்கப்பட்டது. வரையறுக்கப்பட்ட அங்கத்தவர் பொறுப்புடையது)
சேர் ஜேம்ஸ் பீரிஸ் மாவத்த, கொழும்பு - 2. டெலிபோன்: 79351


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மக்கள் குரல்

## இந்தியர் பிரச்சினை

"நீண்ட காலமாக இலங்கையிலேயேவசித்து வரும் இந்தியர்கள், இலங்கைப் பிரஜா உரிமைபெற விரும்பினுல், அவர்கள் பிரஜா உரிமை பெறுவதற்கான விசேட ஒழுங்குகள் செய்து தரப்படவேண்டும்' என்றுதான் 25 வருடங்களுக்கு முன்னர் இலங்கை வந்தபோது நேருஜி விரும்பினுர் என்றும் அதற்கமைடவே இந்தியர்—பாகிஸ்தானியர் பிரஜா உரிமைச் சட்டம் இயற்றி, அமுலுக்குக் கொண்டுவரப்பட்டதென்றும்சென்னையில்கூறிய இலங்கையின் ஸ்தானிகராக இந்தியாவிலிருக்கும் திரு. அமரசிங்கா அதே சமயம், 'அப்படி இலங்கைப் பிரஜா உரிமை பெறுதவர்கள் இந்தியர்களாகவே ஏற்றுக் கொள்ளப்படுவார்கள், என்று திரு. நேரு சொன்னதாகவும் குறிப்பிட்டதாக ஒரு செய்தி கூறுகிறது.

ஆனல், திரு. அமரசிங்கா ஒரு விஷயத்தை மறந்தோ அல்லது மறைத்தோ விட்டிருக்கிருர். அது, 'இலங்கைப் பிரஜா உரிமை கோரி மனுப் பண்ணிய ஒவ்வொருவரும் 'இலங்கைப் பிரஜா உரிமை பெற வேண்டும்' என்ற ஒரே நோக்கத்துடன்தான் இருந்தனர்' என்பதே.

பல நிராகரிக்கப்பட்ட மனுக்கள் சுப்ரீம் கோர்ட் வரை-பிரிவிக் கவுன்ஸில் வரை கொண்டு செல்லப்பட்டனவென்ருல், அதுமனுதார்கள் 'தங்களுக்கு நியாயம் வழங்கப்பட வேண்டும்' எனக் கருதியமையால்தான் என்பதைக் குறிப்பிடுவது அவசியமில்லை.

பிரஜாவுரிமைச் சட்டம் அமுலுக்கு வந்தபோது, அதைப் பகிஷ்கரித்தார்கள்-மொத்தத்தில் சட்டம் பெரும்பாலும் முட்டுக்கட்டையாகவே அமையும் என்பதை உணர்ந்ததனுல்.

ஆனுல், பிறகு அதே சட்டத்துக்கமைய இந்திய வம்சாவளியினர் மனுப் பண்ணினுர்கள் என்ருல், அதற்கு ஒரே காரணம், மனுதார்களின் சொந்த உணர்ச்சிகளுக்கு இடம் கொடுத்து, மேற்படி சட்டத்தின் அடிப்படையில் மனுக்கள் நியாயத்தின்-நேர்மையின் அடிப்படையில் எல்லாவற்றிற்கும் மேலாக மனிதாபிமானத்துடன் பரிசிலனை செய்யப்படும் என்று நம்பினதுதான்.

(9-ம் பக்கம் பார்க்க)

# பதவியின் முன் தத்துவம் மண்டியிட்டது

## இருபத்தைந்துவருட உழைப்பு காட்டு நிலவாகியது

## விரோதிகள் பட்டியலில் சிறுபான்மையினர்

**கூ**ட்டு அரசாங்கம் பதவியேற்றது. ஆளும் கட்சியுடன் இணைந்து கொண்ட சமசமாஜக் கட்சி மார்க்சிசத்தைத் துறந்து சுண்டியெடுத்த முதலாளித்துவ இயக்கமாகத் தன்னை மாற்றிக் கொண்டது. இருபத்தைந்து ஆண்டு காலமாகக் கூறிவந்த சமசமாஜ அரசியல் பாடமனைத்தும் மாற்றப்பட்டுவிட்டது. தொழிலாளரின் இரட்சகரெனக் கூறப்பட்ட டாக்டர் பெரேரா தொழிலாளரின் இன்னல் கண்டு இரங்கும் நிலையைத் துறந்துவிட்டார். சிறுபான்மையினரை அழிக்கும் சட்டங்களையும் அமுல் நடாத்த முனைந்து விட்டார். இந்த நிலையில் தமிழ் பேசும் இனம் யாரையும் நம்பிப் பலனில்லை. "எமக்கு நாமே உதவி" என்ற தாரக மந்திரத்தின் அடிப்படையில் நமது இழந்த உரிமைகளைப் பெற நாம் முயற்சி எடுக்க வேண்டும். மாற்றாரை நம்பினால் இனத்தின் அழிவைத் தடுக்க முடியாது.

பாராளுமன்றக் கூட்டத் தொடர் ஒத்திவைக்கப்பட்டதைத் தொடர்ந்து உருவான கூட்டரசாங்கப்பேச்சுவார்த்தை கடந்த வாரத்துடன் முடிவு பெற்று விட்டது. இடதுசாரி ஐக்கிய முன்னணி—சுதந்திரக் கட்சி என்ற அளவில் உருவான இப்பேச்சுவார்த்தை, சமசமாஜக் கட்சி — சுதந்திரக் கட்சி என்ற அளவில் முற்றுப் பெற்றுள்ளது. பிளவுபட்ட சமசமாஜக் கட்சியின் மூன்று உறுப்பினர்கள் கூட்டு அரசின் அமைச்சரவையில் கொலுவீற்றிருக்கிறார்கள். இந்த அளவில் கூட்டு அரசாங்க முயற்சி முற்றுப் பெற்றுள்ளது.

### கட்சி அழிந்தது

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றிய ச. ச. கட்சி கூட்டு அரசாங்கத்தில் பதவியேற்றதைத் தொடர்ந்து தன்னை முற்று முழுதாக அழித்துக் கொண்டது. அல்லது, எந்த நோக்கத்துடன் ச. ச. கட்சி ஆரம்பிக்கப்பட்டதோ அந்த நோக்கங்கள் அனைத்தையும் கட்சி கைவிட்டு விட்டது என்றே கூறவேண்டும்.

சமசமாஜக் கட்சி ஆரம்பத்திலிருந்து நீண்ட நெடுநாட்களாகக் கடைப்பிடித்து வந்த கொள்கைகளில் பலவற்றைக் கடந்த ஐந்து ஆண்டுகளாகப் படிப்படியாகக் கைவிட்டுக் கொண்டே வந்துள்ளது. இதை எந்த சமசமாஜவாதியும் மறைக்கவோ அல்லது மறுக்கவோ முடியாது. சமசமாஜக் கட்சியின் வரலாற்றை உன்னிப்பாகக் கவனித்து வரும் எவரும் இதை ஏற்றுக் கொள்வார்கள்.

### அரசியல் மயக்கம்

மார்க்சிச சித்தாந்தத்தை ஏற்று டிராட்ஸ்கிய வாதத்தை அடிப்படை நோக்கமாகக் கொண்டு அமைக்கப்பட்ட ஒரு இயக்கம் லங்கா சமசமாஜக் கட்சி. இந்த அடிப்படை நோக்கத்தை நீண்ட நெடுங்காலமாக இயக்கமும், இயக்கத்தைச் சார்ந்த தலைவர்களும் பின்பற்றி வந்தனர். ஆனால் 1956ம் ஆண்டு நாட்டின் ஆட்சி அமைப்பில் ஏற்பட்ட சிறு மாற்றம் ச. ச. கட்சியிலும் ஏனைய இடதுசாரி இயக்கங்கள் மத்தியிலும் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது.

நாடு சுதந்திரம் பெற்ற நாள் முதல் 56ம் ஆண்டு வரை முதலாளித்துவ அடிப்படையில் அமைந்த வகுப்புவாத ஐக்கிய தேசியக் கட்சியின் கையில் ஆட்சிப் பொறுப்பு சிக்கியிருந்தது. 56ம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தல் வகுப்புவாத சீர்திருத்த முதலாளித்துவ அடிப்படையில் அமைந்த சுதந்திரக் கட்சியிடம் நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்தது. அத்துடன் இந்நாட்டின் மார்க்சிச சித்தாந்தத்தின் தந்தை என்று ஒரு காலத்தில் வர்ணிக்கப்பட்ட திரு. பிலிப் குணவர்த்தனவையும் இணைத்து அமைச்சரவை உருவாகியது. இதனால் சுதந்திரக் கட்சி ஆட்சிக்கு இடதுசாரி முத்திரை பொறிக்கப்பட்டது. ஆனால் சுதந்திரக் கட்சியின் உண்மை உருவம்

## பூங்குன்றன்

இரண்டு ஆண்டுகளுக்குள் வெளியாகியது. என்றாலும் இடதுசாரி இயக்கங்கள் மத்தியில் ஏற்பட்ட அரசியல் மயக்கம் மட்டும் நீண்ட காலமாகத் தெளியவில்லை.

### கொள்கை மாற்றம்

இந்த அரசியல் மயக்கம் இடதுசாரி இயக்கங்கள் அனைத்தையும் நிலை குலைய வைத்தது. இலங்கைக் கொம்யூனிஸ்டுக் கட்சி மொழிக் கொள்கையில் தனது நிலையை மாற்றியது. மொழிச் சமத்துவம் என்று கூறி வந்த அவர்கள் சிங்களத்தை ஆட்சி மொழியாக ஏற்றுக் கொண்டனர். போராட்டம், புரட்சி என்ற அவர்களின் வழமையான கோஷத்தைச் சற்று மெதுவாக ஒலித்தனர். காலப்போக்கில், சிறுபான்மை மக்களின் பிரச்சினையைப் பொறுத்த வரையில் சுதந்திரக் கட்சியின் வழியை வலிந்து கைப்பற்றிக் கொண்டது கொம்யூனிஸ்டுக் கட்சி.

தோழர் பிலிப் குணவர்த்தன சுண்டியெடுத்த தீவிர வகுப்புவாதியாக சுதந்திரக் கட்சியிலிருந்து வெளியேறினார். பௌத்த மதத்தையும், பௌத்த பலவேகயாக்களையும் தமது அரசியல் முன்னேற்றத்திற்கு ஆயுதமாகக் கொண்டார். மார்க்சிசத்தை மறந்தார். ஆனால் எதிர்பார்த்த அரசியல் முன்னேற்றம், அவரை அணுகவில்லை. ஏமாற்றத்தின் மேல் ஏமாற்றமே அவரை அரவணைத்தது.

### இ. ஐ. மு. உருவாகியது

லங்கா சமசமாஜக் கட்சி 58ம் ஆண்டுவரை அனுஷ்டித்து வந்த இலட்சியங்களைப் படிப்படியாகத் துறந்தது. அறுபதாம் ஆண்டின் ஆரம்பத்தில் தனிச் சிங்களத்தை மறைமுகமாக ஏற்றுக்கொண்டது. அவர்களிடம் காணப்பட்ட அரசியல் வேகம், அதே ஆண்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலுடன் மந்த நிலையை அடைந்தது. ச. ச. கட்சியின் ஆதிக்கத்தின் கீழ் இயங்கிய தொழிற்சங்க இயக்கங்கள் மத்தியில் வகுப்புவாதம் தலைவிரித்தாடத் தொடங்கியது. மொழிவழித் தொழிற்சங்கங்கள் தோன்றின. ச. ச. கட்சியினரின் 'தேசியம்' என்ற நிலை மாறியது.

இந்த நிலையில் இடதுசாரி இயக்கங்கள் எதுவுமே தனித்து நாட்டின் ஆட்சிப் பொறுப்பில் பங்குகொள்ளவோ, அல்லது ஆட்சிப் பொறுப்பைக் கைப்பற்றவோ முடியாது என்ற நிலை தெளிவாகியது. இடதுசாரித் தலைவர்கள் மத்தியில் இணக்கம் தென்பட்டது. இடதுசாரி ஐக்கிய முன்னணி கடந்த ஆண்டு உருவாகியது.

### பதவிபெற முயற்சி

இடதுசாரி ஐக்கிய முன்னணியின் தோற்றம், இடதுசாரிக் கட்சிகளின் இலட்சியத்தையும் வேலைத் திட்டத்தையும் தெளிவுபடுத்தியது. சிறுபான்மையினர் பிரச்சினைகளைப் பொறுத்த வரையில் முதலாளித்துவக் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சி, சுதந்திரக்கட்சி ஆகியன அனுசரித்த வேலைத்திட்டத்தையே இ. ஐ. முன்னணியும் மக்கள் முன் சமர்ப்பித்தது. என்றாலும் ச. ச. கட்சியினரும், கொம்யூனிஸ்டுக் கட்சியினரும் வட கிழக்கு மாகாணங்களில் ஒரு தொனியிலும், ஏனைய மாகாணங்களில் வேறு தொனியிலுமே கொள்கை விளக்கம் கொடுத்து வந்தார்கள். என்றாலும் அவர்களின் தோழரான திரு. பிலிப் குணவர்த்தனவை மட்டும் வட கிழக்கு மாகாணங்களுக்கு அழைத்துச் செல்லவில்லை. அவரை அழைத்துச் செல்லும் முயற்சிகள் நடைபெற்ற ஒவ்வொரு தடவையும் கறுப்புக்கொடி காட்டப்படும் என்ற செய்தி, அவர்களின் முயற்சியை முளையிலேயே கிள்ளியது.

இடதுசாரி ஐக்கிய முன்னணியின் தோற்றம் சிங்கள மக்களைக் கவரத்தவறியதை முன்னணித் தலைவர்கள் ஒரு சில மாதங்களிலேயே உணர்ந்தனர். இ. ஐ. முன்னணியும் பலன்கொடுக்காது என்பதை உணர்ந்த அவர்கள், முன்னணியைக் கொண்டே அரசியல் ஆதிக்கம்பெற தனி முயற்சியில் மறைமுகமாக ஈடுபட்டனர்.

### இயக்கம் ஏணியாகியது

[illegible] சித்தாந்தப் பிளவு என்ற பெய ரில் கொம்யூனிஸ்டுகள் மத்தியில் பிளவை ஏற்படுத்தியது. சமசமாஜக்கட்சியிலும் இப்பிளவு சிறிதளவில் தலைகாட்டவே செய்தது. சித்தாந்தப் பிளவுப் பிரச்சினை ஒரு புறமிருக்க, பதவிவேட்டை மறுபுறம் திரைமறைவில் நடைபெற்றது. பதவி வேட்டைமுயற்சியில் கொம்யூனிஸ்டுகளின் முயற்சி முக்கியம் பெறவில்லை. அதுபற்றி அவர்களும் அதிக தூரம் கவனம் செலுத்தவில்லை. அவர்களைப் பற்றிப் பதவி கொடுக்க விருந்தவர்களும் கவலைப்படவில்லை.

பாராளுமன்றம் கலைக்கப்பட்டது. மக்களின் கவனம் கூட்டரசாங்கப் பேச்சுவார்த்தையின் பின் சென்றது. இ. ஐ. முன்னணியுடன் ஆரம்பமாகிய பேச்சுவார்த்தை சமசமாஜக் கட்சியுடன் முடிந்தது. சமசமாஜக் கட்சியின் உயர்வுக்கு இ. ஐ. முன்னணி ஏணியாக உதவியது. இதே ஏணியை தோழர் பிலிப் குணவர்த்தனவும் பயன்படுத்த முற்பட்டார். ஆனால். ச. ச. கட்சித் தலைவர் முந்திக்கொண்டார். ஏறிய ஏணியை உதைத்துவிட்டார்கள் ச. ச. கட்சியினர். மேலும் அவர்களை வளர்த்த ச. ச. கட்சி பிளவுபடுவதையே பொருட்படுத்த மறுத்துவிட்டார்கள். அரசியல் வாழ்நாள்முழுவதும் கண்ணெனப் போற்றிய மார்க்சிச தத்துவத்தையே தறை விட்டுவிட்டார்கள். சிறுபான்மை மக்களை அன்று ஏமாற்றினார்கள், இன்று தொழிலாளர் வர்க்கத்தை நட்டாற்றில் கைவிட்டுவிட்டார்கள்.

### துரோக படலம்

கூட்டரசாங்க அமைப்பில் தோன்றிய 14 அம்சத் திட்டம்தானும் தொழிலாளருக்கோ, சிறுபான்மையினருக்கோ விமோசனம் கொடுக்குமா என்றால் இல்லை. இதுவரை தமிழ் பேசும் மக்கள் அனுபவித்து வரும் இன்னலும் இடர்ப்பாடும் மேலும் புதிய பல உருவத்தில் செயல்படும் என்று தெரிகிறது. தொழிற்சங்க இயக்கங்கள் சில ஒன்று கூடிச் சமர்ப்பித்த 21 கோரிக்கைகள் பற்றி இன்று வரை புதிய கூட்ட அரசாங்கம் எதுவுமே கூறவில்லை.

இந்த நிலையில் ச. ச. கட்சியினரும் டாக்டர் பெரேரா

(9-ம் பக்கம் பார்க்க)


உத்தரவாதம்

பின்வரும் தேர்வுகளுக்கு இக்கலாசாலை அளிக்கும் திறமை வாய்ந்த பாடங்களை அஞ்சற் கல்வி மூலம் பயில்வோர் சித்தியெய்வது திண்ணம். அவ்வண்ணம் தவறும் மாணவர்களுக்குத் திரும்பவும் இலவசமாகக் கல்வி கற்பிக்கப்படும்.

நீங்களும் சித்தியெய்த விரும்பின் இன்றே சேருங்கள்.

- இலங்கைப் பல்கலைக் கழகப் புகுமுகத் தேர்வும் ஜி. சி. ஈ. உயர்தரத் தேர்வும்— கலை, விஞ்ஞானம்.
- கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) தேர்வு— கலை, விஞ்ஞானம், வாணிபம்.
- அரசினர் ஆசிரிய பயிற்சிக் கல்லூரிப் புகுமுகத் தேர்வு— விஞ்ஞானம்.

யுனைட்டெட் இன்ஸ்டிடியூட்ஸ்,
நெல்லியடி — கரவெட்டி
கிளைகள்:
107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
13, முதலாவது சப்பல் ஒழுங்கை, வெள்ளவத்தை, கொழும்பு-6.




புதுவருடப் பண்டிகையில் பூவையர்க் கேற்ற

மினேர்வா

சிறப்பும் வனப்புமிக்க தையல் மெஷின்

இப்பொழுது வெகு சுலபமான மாதாந்த கட்டுப் பணத்திற்கு உங்களுக்குக் கிடைக்கும்



126

நுணணிய தயாரிப்பு, நாசூக்காக எவ்வித தையலையும் சுலபமாகவும் அழகாகவும் தைத்துக் கொள்ளலாம்.

3 லாச்சிகள் கொண்ட கெபினட்
வழக்கமான விலை ரூபா 540/-

புதிய வரி விகிதத்தின் பின் எதுவித விலை உயர்வும் சுமத்தப்படவில்லை.

இப்பொழுது விற்கப்படும் விலை ரூபா 420/-

சோல் ஏஜெண்டுகள்:

செண்ற். அந்தனீஸ் ஹார்ட்வெயர் ஸ்டோர்ஸ் லிமிட்டெட்,
516, ஸ்கின்னர்ஸ் ரோட் தெற்கு, கொழும்பு-10.
டெலிபோன்: 4261-2, 3.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தோட்டப் பாடசாலை ஆசிரியர்களே!

# இனத் துரோகம் புரியாதீர்

## பின்தங்கிய மாணவர்க்கு கல்வி புகட்டுங்கள்

மலைநாட்டிலுள்ள தோட்டப் பாடசாலைகளுக்கு கல்வி கற்பிக்கச் செல்லும் ஆசிரிய ஆசிரியைகள் தங்கள் கடமையைச் சரிவரச் செய்யாமல், தங்கள் சுயகாரியங்களை முடிப்பதில் மாணவ மாணவிகளை ஏவி வருவதாக எண்ணற்ற குற்றச் சாட்டுகள் எமக்குக் கிடைத்துவருகின்றன. இத்தகைய கொரேத் தன்மையிலிருந்து மாறுபட்டு உண்மைச் சேவை செய்து தங்கள் இனத்தவர்களான தமிழ் மாணவர்களுக்கு கல்வி புகட்ட முன் வரவேண்டுமென கட்டுரை ஆசிரியர் இக்கட்டுரையில் அறை கூவுகிறார்.

இன்றைய நிலையில் தோட்டத்து பாடசாலைகளை நோக்கினால் நூற்றுக்கு தொண்ணூறு வீதமான பாடசாலைகளில் படிப்பில்லை, பண்பில்லை, கலை பயிற்சியில்லை, கலைகள் என்றால் என்ன என்று தெரியாத நிலையில் தோட்டத்துப் பிள்ளைகள் இருக்கின்றார்கள் பொது நலசேவை செய்யவந்த ஆசிரியர்கள் தங்கள் சுய நல சேவையில் ஈடுபட்டு தோட்டத்து மக்களிடையே குரோதத்தையும், குழப்பத்தையும் உண்டுபண்ணி, அவர்களின் ஒற்றுமையை குலைத்து வருகின்றார்கள் என்று கூறினால் அதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை.

### இதுவா படிப்பு?

காலை மணி எட்டானதும் தோட்டத்துக் குழந்தைகள் பள்ளியை நோக்குகின்றன. ஆசிரியர்கள் அனேகமாக பிந்தியே வருகின்றனர். சரியாக பதினொரு மணிக்கு பாடசாலை மூடப்படும், இதற்கிடையில் அங்கு நடப்பதென்ன? படிப்பா நடக்கின்றது, இல்லவே இல்லை. ஒரு கோஷ்டி ஆசிரியருக்கு விறகு உடைக்கும். இன்னுமொரு கோஷ்டி தளவாடங்களையெல்லாம் கழுவி சுத்தம் செய்து வைக்கும், மூன்றாவது கோஷ்டி கல்வாத்து காட்டில் 'மிளாறு' (தேயிலை விறகு)கட்டும்.சொல்வதற்கு வெட்கமாக இருக்கின்றது தான். ஆனால் இதை எல்லாம் நேரில் பார்க்கும் போது கண்ணீர் வடிக்க வேண்டிய நிலையில் இருக்கின்றார்கள், மலையகச் சிறார்களின் நல்வாழ்வில் அக்கறை கொண்டோர்.

**டி. வி. துரை**

**நாரளை**

சுயநலத்தை மறந்து பொது நலத்தில் ஈடுபட வந்தவர்கள் ஆசிரியர்கள். ஆனால் பல தோட்டத்து ஆசிரியர்கள் அதற்கு மாறுபட்டு வாழ்ந்து வருகின்றார்கள். அதாவது பொது நலத்தை துறந்து, சுய நலத்தை கருதிவருகின்றார்கள். அவர்களை ஆசிரியர்கள், எழுத்தறிவிக்கும் ஆசான்கள் என்று எப்படி கூறுவது? முறையாகக் கல்வி புகட்டாமல், வருட முடிவில்பரீட்சை வைத்துபிள்ளைகளைப் 'பாஸ்' (சித்தி) என்று கூறிவிடுகின்றார்கள். அத்துடன் தோட்டத் துரையிடம் நல்ல பெயரும், பட்டமும் பெற்றுவிடுகின்றார்கள். இது எமக்கு வேடிக்கையாகவே இருக்கிறது.

### அரசினருக்கு உதவியா?

தோட்டங்களில் வாழும் தொழிலாள சமுதாயம் பல தரப்பட்ட துறைகளிலும் பின்தங்கியே கிடக்கிறது. இந்நாட்டின் மக்களல்லர் என்ற தன்மையில் அரசியல் உரிமை இழந்து பரிதவிக்கின்றனர். 'நாடற்றவர்கள்' என்ற இழிவானபட்டத்தையும் சுமந்து வாழவேண்டிய துர்ப்பாக்கியசாலிகள். சகல துறைகளிலும் பின் தங்கிக் கிடக்கும் இவ்வகுப்பாரின் வாரிசுகள் கல்விகேள்வியிலாவது ஓரளவு முன்னேற அரசினரும் முட்டுக்கட்டைகள் பல போடுகின்றனர். அரசினரின் திட்டங்களுக்கு, இன்று பல தோட்டங்களில் கடமைபுரிய வந்துள்ள ஆசிரிய, ஆசிரியைகள் பேருதவி புரிகின்றனர்போல்தோன்றுகிறது.

### துரோகம் வேண்டாம்

கல்விதேடிச் செல்லும் மலையகத்து தொழிலாளிகளின் செல்வங்களுக்கு உரிய கல்வியினை வழங்க மறுப்பதுடன், அவர்களை இழிவு படுத்தவும் முற்படுகின்றனர். இச்செயல் நீடிக்க விட்டால் தன்னினத்தவர்க்கே தாங்களே குழி பறித்தவர்களாவார்கள்.

தங்கள் இனத்தின்—தங்கத் தமிழ் இனத்தின் ஒரு பகுதியினரான மலைநாட்டுத் தமிழ் மக்களின் கல்வி உரிமைகளுக்கு துரோகம் செய்யவேண்டாம் என்று தமிழ் ஆசிரிய, ஆசிரியைகளைக் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

# மலை நாடு

# உறவாடி உரிமை பெற முடியாது

## போராட்டம் ஒன்றே உரிய வழி

மலை நாட்டு மக்கள் சகல உரிமைகளையும் பறி கொடுத்து விட்டார்கள். தாய் மொழி மூலம் கல்வி கற்கும் வசதியும் தடைப்படுத்தப்படுகிறது. இவற்றை எதிர்த்துக் குரல் எழுப்பினால், அது இனத்துவேசம், வகுப்பு வாதம் என்று விமர்சிக்கப்படுகிறது. மலை நாட்டு மக்களின் உயர்வுக்காக உழைப்பதாகக் கூறிக் கொள்ளும் காங்கிரஸ் இயக்கங்களோ போராட்டம் என்றால் தீயை மிதித்தவர்கள் போன்று திகைக்கிறார்கள். எனவே மலை நாட்டு மக்கள் இத்தகைய சுயநலக்கும்பலை நம்பி வாழ முடியாது. நமது உரிமைக்காக உழைக்கக் கூடியவர்களை அணுகி, அவர்களின் உதவியுடன் உரிமைப் போர் நடாத்துவதே இன்று நம்முன் உள்ள ஒரேவழி.

ஒரு நாட்டிலே உண்மைச் சனநாயகம் நிலவுமேயானால் அங்கு மனித உரிமைப் போராட்டம் என்ற சொல்லுக்கே இடமிராது. ஏனெனில், ஒரு தனி மனிதனின் கருத்துக்கு மதிப்பளித்து, அவனுடைய சுதந்திரத்தையும், உரிமைகளையும் பாதுகாப்பதுதான் சனநாயக நீதியாகும். சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்பவைகளே ஜனநாயகத்தின் அத்திவாரமாக அமைந்துள்ளன. இவைகளில் ஒன்றாவது இன்றி இயங்கும் எந்தச் சனநாயகமும் உண்மைச் சனநாயகமாகாது. அது தனிநாயகம் — சர்வாதிகாரமாகும்.

### சர்வாதிகாரம்

இன்று எமது இலங்காபுரியில் நடைபெற்று வருவது சனநாயக ஆட்சியா, அன்றிச் சர்வாதிகார ஆட்சியா என்பதை இங்கு வாழ் மக்கள் நன்கு அறிவர். இங்கே தனி மனிதனின் சுதந்திரம் மட்டுமல்ல-ஒரு தனி இனத்தவரின் முழுச் சுதந்திரமுமே குழிதோண்டிப் புதைக்கப்பட்டுள்ளது. அடிமைகளைப் போல அடக்குமுறை ஆட்சியிலே நசுக்கப்பட்டு வருகின்றனர் சிறுபான்மையினர். அடக்குமுறை ஆட்சிக்கெல்லாம் தலைசாய்க்கத் துணியாத தமிழினம், இழந்த சுதந்திரத்தை மீண்டும் பெற வேண்டுமென்ற ஒரே இலட்சியத்தோடு சாத்வீகப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளது.

### உரிமையில்லை

ஈழம்வாழ் தமிழினத்தைச் சூழ்ந்துள்ள இன்னல்கள் இவ்வளவுதான் என்று இயம்புவதற்கில்லை. பொதுவாக மொழியுரிமையும், சிறப்பாகப் பிறப்புரிமையும் மறுக்கப்பட்டுள்ளன. கண்களைப்

**ஞா. பெ. அல்பிறட்**

போன்ற இவ்விரண்டையும் இழந்துள்ள இந்நாட்டுத் தமிழர்களின் நிகழ்காலம் மட்டுமல்ல, எதிர்காலமே இருள்சூழ்ந்துவிட்டது. வண்டமிழரை வாழவிடாமல் ஆளவந்தார் புரியும் அட்டூழியங்களுக்கு அளவேயில்லை. தொன்று தொட்டு வாழ்ந்து வந்த தோட்டத்துத் தமிழ் மக்களுக்கு நாட்டிலே உரிமையில்லையாம்.

### ஆட்சியாளர் நிலை

மக்கள் பிரதிநிதிகளைத் தெரிந்து தமது மனக் கருத்துக்களை மாநிலம் அறியச் செய்யும் உரிமை மலைநாட்டு மக்களுக்கு மறுக்கப்பட்டுள்ளது. தாய் மொழியிற் கல்வி பயிலத் தமிழ்ச் சேய்களுக்குத் தடை. உழவுத்தொழில் மூதற் கொண்டு உத்தியோக வசதி வரை தமிழ் வாலிபர்க்குக் கிடைக்காதபடி சிங்களத் தடை. தற்போது, காணி வாங்கிக் கமத் தொழில் புரிவதற்குங்கூட கண்டறியாத சட்டமொன்

(13-ம் பக்கம் பார்க்க)


மூன்பை விட இன்னும் அதிக சக்தி வாய்ந்தது?


அதை ஒழியுங்கள்!

ப்ளெக் ப்ளேக்

பலஇயக்க இருமிநாசினி உங்கள் குடும்ப சுகாதாரத்தைப் பாதுகாப்பதோடு நோய் பரப்பும் விஷப் பூச்சிகளை உடனடியாக அழித்து விடுகிறது.

புதியதும் அதிக சக்தி வாய்ந்த மருந்து வகைகளையும் கொண்ட, பல இயக்க "ப்ளெக் ப்ளேக்" மூன்று வகைகளில் இயங்கக் கூடிய முதலாவது கிருமி நாசினியாகும்.

1. நேரடித்தாக்குதல். ஈக்கள், நுளம்புகள், கரப்பான், தெள்ளு, மூட்டைப் பூச்சிகள் போன்றவைகளை உடனடியாக அழித்து விடுகிறது.
2. பறந்து தாக்குதல் "ப்ளெக் ப்ளேக்" பல இயக்க கிருமி நாசினி தெளிக்கப்பட்ட பின் புகை போன்ற ஆவியாக மாறி, பல பகுதிகளுக்கும் பரவி மறைந்திருக்கும் கிருமிகளையும் அழித்து விடுகிறது.
3. தங்கித் தாக்குதல் "ப்ளெக் ப்ளேக்" பல இயக்க கிருமி நாசினி தெளிக்கப்பட்ட இடங்களில் எல்லாம் கண்ணுக்குத் தெரியாத, ஆனால் கொல்லும் சக்தி வாய்ந்த ஒரு வகை மெல்லிய படலமாக தங்கியிருந்து அதனுடன் சந்திக்கும் சகல பறக்கும் பூச்சிகளையும், ஊர்ந்து செல்லும் கிருமிகளையும் அழித்து விடுகிறது.




டிடிவிபியுடன் (DDVP), கூடிய பல இயக்க "ப்ளெக் ப்ளேக்" கிருமி நாசினியை வாங்கி ஊர்ந்து, பறந்து செல்லும் கிருமிகளை அழித்து விடுங்கள்.

ETB-57/MA


## சந்தியில்

இந்நாட்டின் கலை, கலாச்சார முன்னேற்றத்துக்காக உதவும் பொருட்டு ஒரு அயல் நாட்டு நிறுவனம் இங்கு இயங்கி வருகிறதாம். அந்த நிறுவனத்தின் ஆண்டறிக்கை கடந்த வருடம் சிங்களத்தில் மட்டும் வெளியாகியதாம். பெரும்பாலும் சிங்கள ஸ்தாபனங்களுக்கே இந் நிறுவனம் உதவி புரிந்திருக்கிறதாம். இரு சிங்களப் பத்திரிகைகளுக்கும் கூட இந்த நிறுவனத்தின் உதவி கிடைத்துள்ளதாம்.

இங்குள்ள ஒரு தினசரி, தமிழ் பேசும் மக்களுக்கு இந்த நிறுவனம் உதவத் தவறியதைச் சுட்டிக் காட்டி தலையங்கம் தீட்டியதாம். இதைக் கண்ணுற்ற நிறுவனத்தின் அதிகாரி, எந்த தமிழ் நிறுவனங்களும் தங்களிடம் எதுவித உதவியும் கோரவில்லை என்பதை விளக்கி அப்பத்திரிகைக்கு எழுதினாராம். தங்களிடம் மொழி பெயர்ப்பு வசதிகள் போதிய அளவு இல்லாமையினாலேயே தாங்கள் தமிழில் ஆண்டறிக்கை வெளியிட முடியவில்லை என்றும் அவர் குறிப்பிட்டிருந்தாராம். ஒரு சொல்லு விடுபடாமல் இவ்வறிக்கை' அப்பத்திரிகையில் வெளியாகியதாம்.

இதற்கிடையில் இங்கு வெளியாகும் மாத இதழ் ஒன்றும் இந்த விடயங்களைக் குறிப்பிட்டுவிட்டு, ஒருபடி மேலே சென்று, 'மொழி பெயர்ப்பு வசதி இல்லாவிட்டால் நாங்கள் செய்து தருகிறோம்' என்ற கருத்துப்படத் தலையங்கம் தீட்டியதாம்.

இந்த இரு பத்திரிகைகளும் இத்துறையில் கவனம் செலுத்துவதற்கு ஏதோ காரணம் இருக்க வேண்டாமா? சோழியன் குடுமி சும்மா ஆடுமா?

இரு பத்திரிகைகளிலும் தலையங்கம் எழுதியவர் ஒருவர்தானாம். ஆனால் இந்த பரகசியம் அந்த வெளிநாட்டு நிறுவனத்துக்குத் தெரியாதாம். தினசரியின் ஆசிரியராக இருந்துகொண்டே மாதப்பத்திரிகை ஒன்றை சொந்தமாக நடாத்தும் ஒரு எழுத்தாளர் இருக்கிறாராம். அவர் தமது செல்வாக்கை குறுக்குவழியில் பிரயோகிக்கிறாராம்— ஓரளவு வெற்றியும் பெறுகிறாராம்.

வேறொரு அந்நிய தூதுவரகத்தின் தமிழ் வெளியீட்டில் இதே பிரமுகர் அர்த்தமில்லாமல் பிழைகூறி மூக்குறுபட்ட கதையும் அம்மானுக்கு நன்கு தெரியும்.

★

கடந்த டிசம்பர்மாதம் எஸ். எஸ். ஸி. சோதனை எடுத்தவர்கள், தாங்கள் எடுக்காதபாடங்களிலெல்லாம் சித்தியடைந்து, எடுத்த பாடங்களில் எதிலும் சித்தியெய்தாத விபரீதத்தை பெறுபேறுகப் பெற்றுத் திகைக்கின்றனர். இதற்கான காரணம் என்ன என்பதை அம்மான் அறிவார்.

காகிதத்துக்கு நல்ல கிராக்கி ஏற்பட்டது. கல்வி திணைக்களத்தில் சேமிக்கப்பட்டிருந்த விடைத்தாள்களெல்லாம் பலசரக்குக் கடைகளில் விலையாகிவிட்டன. இதைவிட வேறு காரணம் இத்தகைய தவறுகளுக்கு, கல்வி அமைச்சால் கண்டு பிடிக்க முடியுமா?

அம்மான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்பாட்டின் சிறப்பே மொழியின் உயர்வு

## இனத்தின் நுகர்ச்சிக்கு ஏற்ப மொழி அமைகிறது

முத்துச் சண்முகன்
பிஎஸ். ஸி., எம். ஏ., எம். லிட்

**மொழி மனிதனின் எண்ணத்தை, விருப்பு வெறுப்பை வெளிப்படுத்த உதவும் ஒரு கருவி. இதன் வளர்ச்சியும் சிறப்பும் அது வழங்கும் இடத்தின் சிறப்பையொட்டி அமைகிறது. ஒரு மொழியைப் பேசும் மக்களின் பண்பாட்டைப் பொறுத்தே மொழியின் சிறப்பு அமைகிறது. மொழியில் உயர்வு தாழ்வு காண்பதும் அழகினைக் காண்பதும் அந்த அந்த மொழி சார்ந்த பண்பாட்டின் உயர்வு தாழ்வுகளையும் அழகினையும் காண்பதாகவே முடியும். தமிழ் மொழி சிறந்தது, உயர்ந்தது இனிமையானது என்றால்; தமிழ் மொழிசார்ந்த பண்பாடு உயர்ந்தது, சிறந்தது, இனிமையானது என்று பொருளாகும். மொழியின் வளர்ச்சிக்கு எத்தனை சக்திகள் துணை நின்றாலும் அதுசார்ந்த பண்பாடு சிறந்து நின்றாலே மொழி வளம் பெறும்.**

மனிதன் ஒரு பேசும் மிருகம். மனிதனே பேசும் மிருகம் என்று கூறினாலும் பொருந்தும். உலகில் வாழும் உயிரினங்களில் மனிதன் ஒருவனுக்கே பேசித் தன் கருத்தை வெளியிட முடியும். சில மிருகங்களும் பறவைகளும் குறிப்பிட்ட ஒலிகளால் சிற்சில கருத்துக்களைத் தெரிவிக்கின்றன என்று கூறமுடியாது. ஏதோ சில உணர்ச்சிகளை வெளியிடுகின்றன—அவ்வளவுதான். மற்றக் கோளங்களில் எல்லாம் பெரும்பாலும் புற்பூண்டுகளே இருக்கின்றன. ஏதாவது ஒரு கோளத்தில் நம்மைவிட உயர்ந்த உயிரினங்கள் இருந்தாலும் இருக்கலாம். ஆனால் நாம் அவர்களைக் கண்டுபிடித்து அவர்களோடு பேசிப் பழக இன்னும் எவ்வளவோ காலம் ஆகலாம். மனித இனம் இவ்வுலகிலேயே வாழ்ந்து எப்போதும் பேசிக்கொண்டேத இருக்க வேண்டும்.

### பேசுங்கருவி

மனிதன் பேசுவதற்கு வேண்டியவாறு அவனுடைய உறுப்புக்களும் அமைந்திருக்கின்றன. ஆனால், அவ்வுறுப்புக்களெல்லாம் பேசுவதற்கென்றே அமைந்தவைகள் அல்ல. உதடு, நா, மூக்கு, தொண்டை இவைகளின் அடிப்படைத்தொழில்வேறு. ஒலிச் சவ்வுகளுக்குக் கூட வேறு தொழில்கள் இருக்கின்றன. பளுவான சாமான்களைத்தூக்கும் பொழுது பாடிப் பாருங்கள்; முடியாது. ஒலிச் சவ்வு காற்றைத் தடுத்து நிறுத்த மார்பிலுள்ள தசைகள் காற்றுப் பையை அழுத்திப் பிடித்துப் பாதுகாக்கின்றன. இதைப் போலவே திமிங்கிலத்தின் வாலும், வெளவாலின் இறகும் பல முறைகளில் பயன்படுகின்றன. பரிணாமம் குறிப்பிட்ட ஒரு நோக்கத்தை அடிப்படையாக வைத்துக் கொண்டு அதற்குத் தகுந்தவாறு உறுப்புக்களை வாங்கி ஒன்று சேர்த்துப் படைக்காது. பேச்சுறுப்புக்களும் அவ்வாறே. உண்ணவும், சுவாசிக்கவும் அமைந்த உறுப்புக்களைப் பேசவும் பயன்படுத்திக் கொள்கிறோம்.

### பேசும் மூளை

இதைவிட வியப்பு மற்றொன்று. இவ்வாறு நாம் பேசுகின்ற பேச்சு ஒரு வரன்முறைக்கு உட்பட்டே நடைபெறுகிறது. ஒரு நோக்கத்துடனேயே எழுகிறது. ஒரு நிகழ்ச்சியைத் தூண்டவும், ஒன்றற்குத் துணையாகவும், நம்மைச் சூழ்ந்திருக்கும் சூழ்நிலையை அடிப்படைக் கவும் ப் பேச்சுக்கள் பயன்படுகின்றன. நாம் பேசுகின்ற பேச்சு வரன் முறைக்குட்பட்டே நிகழுகின்றது என்றோம்.

ஆனால் இவ்வரன் முறை நாமாகப் படைத்துக் கொண்ட ஒன்றே. ஒவ்வொரு மொழிக்கும் ஒவ்வொரு வரன்முறை அமைந்திருக்கின்றது. மூளை இவ் வன்முறையை உலக இயல்புகளோடு தொடர்புபடுத்தி வெளியிடச் செய்கிறது. இத் தொடர்புகளை விளக்குவது தத்துவ ஆராய்ச்சியாளர் பொறுப்பு; நம் பொறுப்பன்று. மூளையைப் பற்றி ஆராய்வது நாடி நரம்பு நிபுணர்களுடைய பொறுப்பு. இவர்கள் மூளையைப் பற்றி இப்பொழுது தெளிவான கருத்துக்களைக் கூறுகின்றனர். மூளையில் கோடிக்கணக்கான சுற்றுகள் (சர்க்யூட்) பிறக்கும் பொழுதே அடங்கிக் கிடக்கின்றன. பிறந்த குழந்தைக்குப் பேச இயலாது. இதற்கு உறுப்புக்களைத் தொடர்பு படுத்திச் செயலாற்றும் திறன் மிக வேண்டும், ஆனாலும் அது உறுப்புக்களைத் தொடர்பு படுத்தி எவ்வளவோ காரியங்களைச் செய்கிறது. அது அழுகிறது; சிரிக்கிறது; பால் குடிக்கிறது; கை கால்களை ஆட்டுகிறது. இவைகளுக்கெல்லாம் உறுப்புக்களைத் தொடர்பு படுத்திச் செயலாற்றும் திறன் மிக வேண்டும்.

எனவே பேசுவதற்கு வேண்டிய அடிப்படைத் தேவை குழந்தையோடு பிறந்துவிட்டது. குழந்தைக்கு உறுப்புக்களைத் தொடர்பு படுத்திச் செயலாற்றும் திறன் இருக்கிறது; ஒலியும் இருக்கிறது; ஆனால் பேசத்தான் முடியவில்லை. மூளையிலுள்ள கோடிக்கணக்கான சுற்றுகள் சுமார் ஓராயிரம் சொற்களையும் அச்சொற்களைத் தொடர்புபடுத்திப் பேசும் ஆற்றலையும் உடையன. ஆனால் குழந்தைப் பருவத்தில் இச்சுற்றுகள் எல்லாம் செயலற்றுக் கிடக்கின்றன. மின் கலன்கள் (செல்ஸ்) இருக்கின்றன; அவைகளை இணைக்கும் கம்பிகளும் இருக்கின்றன. ஆனால் இன்னும் அவைகளை இணைக்கவில்லை. இவை இணைந்து செயலாற்றும் முறை நம் ஆராய்ச்சிக்கு அப்பாற்பட்டது. ஒலியும் ஒலி எழுப்பும் ஆற்றலும் நம்மோடு உடன் பிறந்தவை. ஆனால் பேச்சை நாம் கற்றுத்தான் தெரிந்து கொள்ள வேண்டும்.

### பேசுங் குழந்தை

குழந்தை அழும் நிலை மாறி உளறும் நிலைக்கு வளருவதையும், உளறும் நிலை தாண்டிப் பேசும் நிலைக்கு வளர்ந்து வருவதையும் நாம் தினமும் காண்கிறோம். உடல் வளர்ச்சியும் பேசப் பழகும் வளர்ச்சியும் ஒன்றாகவே நடக்கின்றன. இதனால் குழந்தை பேசப் பழகிக் கொள்ளும் முறைகளை நாம் கவனிப்பதில்லை. ஒரு குழந்தையை வாலில்லாக் குரங்கு வளர்த்து வருமாயின் அக் குழந்தை எழுந்து நிற்கவும், நடக்கவும், குதிக்கவும் கற்றுக்கொள்ளும்; ஆனால் பேசக் கற்றுக்கொள்ளாது. பேசுவதற்கென்று அமைந்த மண்டையின் இடது பக்கத்திலுள்ள மூன்று பகுதிகளும் பிள்ளைப் பருவத்தில் இருந்தது போலவே வெட்டை வெளியாகவே இருக்கும். வலது பக்கத்தில் உள்ள இப் பகுதிகள் எப்பொழுதும் வெட்டை வெளியாகவே இருக்கின்றன. சிறு பருவத்தில் இடதுபாகத்தில் ஊனம் ஏற்பட்டுப் பேசும் பகுதிகள் சீரழிந்து போனால்தான் வலது பக்கத்துப் பகுதிகள் செயலாற்றும்.

### பேசும் மனிதன்

மனித இனத்தின் சிறந்த செயல், அவ்வினத்தின் சிறப்பியல்பு பேச்சு. ஆனால் பேச்சு மனிதனோடு உடன் பிறந்ததன்று. அவன் அதனை மற்ற மக்களிடமிருந்து கற்றுக் கொள்கிறான். இது ஒரு

## மொழியும் மொழியியலும்

பெரிய சாதனை. பேசப் பழகிக்கொள்வதே சிறு பருவத்தில் குழந்தை செய்யும் பெரிய செயல், வயதான பின்பும் அவன் பேசப் பழகிக்கொண்டே இருக்கிறான். ஆனால் குழந்தைப்பருவத்தில் ஆறு ஆண்டுகளுக்குள் அவன் மொழியின் அடிப்படையைப் பெரும்பாலும் கற்றுக் கொள்கிறான். பலர் இதற்கு மேல் ஒன்றும் கற்றுக்கொள்ளாமலே இருக்கின்றனர். ஆனால் பேசப் பழகிக்கொண்டதால் மனித சமூகத்தில் அவன் தனக்குரிய இடத்தைப் பெற்றுக் கொள்கிறான். இத்தகைய மொழியைப் பற்றி உண்மையாகத் தெரிந்து கொண்டவர்கள் சிலரே. பெரும்பான்மையோர் தவறான கருத்துக்களையே கொண்டிருக்கின்றனர். மொழி ஆராய்ச்சி இன்று வேகமாக வளர்ந்து வருகிறது. ஆராய வேண்டிய துறைகளும் இன்னும் எவ்வளவோ இருக்கின்றன.

### சமூக நிகழ்ச்சியும் உயிரியல் நிகழ்ச்சியும்

மொழியைப் பற்றி நாம் முதன் முதல் தெரிந்துகொள்ள வேண்டியது அது ஒரு சமூக நிகழ்ச்சி என்பதுதான். அது உயிரைப் பற்றிய நிகழ்ச்சியன்று. நம் உயிரைப் பாதுகாத்து நீண்ட நாள் வாழச் செய்கின்ற எல்லாம் உயிரைப் பற்றிய நிகழ்ச்சிகள். சுவாசித்தல், உண்ணுதல், பிள்ளை பெறுதல், பிள்ளைகளைக் காத்தல் எல்லாம் உயிரைப் பற்றிய நிகழ்ச்சிகள். ஆனால் மற்றவர்களோடு நமக்குள்ள தொடர்பைப் பாதுகாத்து அதனை வளர்க்கப் பயன்படும் எதுவும் சமூகநிகழ்ச்சி எனலாம். இதில் செல்வம், உறவு, கல்யாணம் எல்லாம் அடங்கும். இந்த இரண்டும் நீங்க மேலும் ஒரு நிகழ்ச்சியையும் குறிப்பிடலாம். இதனை உளவியல் நிகழ்ச்சி எனலாம். இதில் மதம், கலை, தத்துவம் எல்லாம் அடங்கும். இத்துறையில் நிகழும் ஆராய்ச்சிகளிலும் மொழி ஒரு முக்கியமான இடத்தைப் பெறுகிறது. ஆனால் இவர்கள் மொழியை ஆராய்கின்ற முறை வேறு. மொழியியலாரைப் போல இவர்கள் ஆராய்வதில்லை. மொழியியல் ஆராய்ச்சியால் இவர்கள் பயன்பெற முடியும். ஆனால் இவர்கள் ஆராய்கின்ற முறையில் இன்னும் இவர்கள் முன்னேறவேண்டி இருக்கிறது.

### இரண்டின் கலப்பு

மனிதன் சமூக நிகழ்ச்சிகளையும் உயிரியல் நிகழ்ச்சிகளையும் எப்பொழுதும் தனித்தனியாகப் பிரித்து வைத்துக் கொள்வதில்லை. உண்பது ஓர் உயிரியல் நிகழ்ச்சி. இதனை ஒவ்வொரு இனத்தவரும் ஒவ்வொரு வகையாக சமூக நிகழ்ச்சிகளோடு இணைத்திருக்கின்றனர். சிலர் சைவ உணவையே உண்பர். சிலர் காய்கறிகளிலும் சிலவற்றைத் தவிர்த்தே உண்பர். ஆட்டிறைச்சியைச் சாப்பிடுகின்றவர்களும், மாட்டிறைச்சி பன்றி இறைச்சி என்றால் தவிர்க்கின்றனர். நாம் கையால் சாப்பிடுகிறோம். அது சௌகரியமாகத்தான் இருக்கிறது. ஆனால் மேற்கு நாட்டார் சாப்பிடுவதற்கு முள்ளும் கத்தியும் பயன்படுத்துகின்றனர். மனித இனம் பெருகப் புணர்ச்சி தேவை. ஆனால் சமூகம் அதற்கு எவ்வளவோ கட்டுப்பாடுகளை வகுத்திருக்கிறது. சிற்சில சமூக நிகழ்ச்சிகளுக்கு நாம் உயிரியல் காரணங்களைக் காண முயலலாம். இருந்தாலும் சமூக நிகழ்ச்சிகளையும் உயிரியல் நிகழ்ச்சிகளையும் எளிதில் பிரித்து விடலாம்.

சுருங்கக் கூறினால் பேச்சு அதன் தோற்றத்திலும் வளர்ச்சியிலும், பயன்படுகின்ற முறையிலும் ஒரு சமூக நிகழ்ச்சி. ஒவ்வொரு மனிதனும் தான்இருக்கின்ற சமூக இயல்புக்குத் தக்கவாறு இதனைக் கற்றுத் தெளிந்து கொள்ள வேண்டும். இது இடத்திற்கு இடம், காலத்திற்குக் காலம் காரணம் இன்றி மாறும். ஒவ்வொரு சமுதாயத்திலும் அது மற்றச் சமூக நிகழ்ச்சிகளோடும் கட்டுப்பட்டே இருக்கிறது. இவைகளெல்லாம் சேர்ந்த ஒன்றே அந்தச் சமூகத்தின் பண்பாடு.

### சில உண்மைகள்

இதுவரை நாம் கூறியவற்றிலிருந்து மொழியைப் பற்றிய சில அடிப்படைக் கருத்துக்கள் புலப்படுகின்றன.

இயற்கையாக நமக்கு அமைந்த ஒலியைப் போல, உறுப்புக்களைப் போல மொழியும் இயற்கையாக அமைந்த ஒன்று என்றால் உலகில் உள்ள மக்கள் அனைவரும் ஒரே மொழியைத் தான் பேசிக் கொண்டிருக்க வேண்டும். ஒவ்வொரு மொழியும் அந்த அந்த இனத்தவர் அமைத்துக் கொண்ட ஒன்று. இதனால் அவ்வினத்தவர் ஒன்றுகூடி, கூட்டம் போட்டு ஆராய்ந்து அமைத்துக் கொண்ட தொன்று என்று பொருள் இல்லை. அம்மக்கள் உணராமலே அவர்களிடையே தோன்றி வளர்ந்த ஒன்று.

### இனத்தின் தேவை

ஒவ்வொரு மொழியும் அந்த அந்த இனத்தின் தேவைக்குத் தக்கவாறு அமைந்திருக்கிறது. நமது மொழியில் குட் மார்னிங், குட் ஈவினிங், குட் நைட் என்பன போன்ற சொற்றொடர்கள் இல்லை. 'ஸ்நோ, ஐஸ், மிஸ்ட், ஃபாக்' இவைகளுக்கெல்லாம் நம்மிடையே தனித் தனிச் சொற்கள்

(15-ம் பக்கம் பார்க்க)

**வேல் படை மருந்து**

வண்டுகடி, தேமல், ஊறல், படர்தாமரை. தழுவணி, பித்த வெடிப்பு, நாட்பட்ட கக்கூஸ்பத்து, தண்ணீர்கடி, கரப்பான்

முதலிய சர்ம வியாதிகளைக் குணப்படுத்தும் ஓர் சிறந்த களிம்பு.

விலை ரூ. 1-50 தபால் சிலவு வேறு

தயாரிப்பவர்கள்:

S. P. S. ஜெயம் அன் கோ.,
மதுரை.

இலங்கையில் சோல் ஏஜண்ட்:

எம். ஏ. ஆர். எஸ். மனுவேல் நாடார் அன் கோ.,
34, செட்டியார் தெரு, கொழும்பு-11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
SUTANTIRAN

1964 யூன் மாதம் 21-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.
தொலை பேசி எண் : 3411 த. பெ. 1183

# இந்தியாவில் பிரச்சாரம்

அமரர் நேருவின் ஆட்சி காலத்திலேயே இலங்கை வாழ் இந்திய வம்சாவழியினரின் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளுமாறு அரசாங்கத்துக்குப் பலர் ஆலோசனை கூறிவந்தனர். ஆட்சியாளரின் பிடிவாதம் அதற்கு இடமளிக்கவில்லை.

"நாடற்றவர்கள்" அனைவரும் இந்தியர்களே என்ற ஆட்சியாளரின் பிடிவாதப் போக்கால் பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து தடைப்பட்டன.

இப்பொழுது இரு நாடுகளிலும் அரசாங்கத்தில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இந்த மாற்றங்கள் பிரச்சினையைத் தீர்க்க உதவுமா என்று கேட்கப்படுகிறது.

லண்டனில் இரு பிரதமர்களும் இது பற்றிப் பேச்சு வார்த்தை நடத்தவிருக்கின்றனராம். "நாடற்றவர்கள்" அனைவரும் இந்தியர்களே என்ற அடிப்படையில்தான் லண்டன் பேச்சுகளும் நடைபெறுமா?

இந்தியாவில் இலங்கை ஹைகமிஷனரான திரு. ஷேர்லி அமரசிங்கா சென்னையில் பேசியிருப்பதைப் பார்த்தால், அந்த அடிப்படை மாறவில்லை என்றுதான் தெரிகிறது. டில்லியிலிருந்து தென்னகத்துக்கு வந்து தமிழர்கள் மத்தியில் பிரஜாவுரிமை, மொழிப் பிரச்சினை பற்றிச் சண்டப் பிரசண்டம் செய்துள்ளார் இலங்கைத் தூதர் திரு. அமரசிங்கா.

இலங்கை அரசாங்கம் தமிழ் மொழியையும் கலாசாரத்தையும் அழிக்க முயலுவதாகச் செய்யும் பிரசாரம் தவறானதென்றும், தமிழர்களுக்கு இலங்கையில் சமசந்தர்ப்பம் அளிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் பறைசாற்றியுள்ளார்.

இங்கு தமிழ் மொழியையும் கலாசாரத்தையும் மட்டுமின்றி தமிழ்பேசும் இனத்தையே அழிப்பதற்குத் திட்டமிட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவது தென்னக மக்கள் அறிந்த விஷயமே. அவர்கள் கண்ணில் மண்ணைத் தூவுவது எளிதன்று.

'நாடற்ற' மக்கள் கொடுமைப்படுத்தப்படுவதாக கூறுவதை மறுத்தள்ளார் இலங்கைத் தூதர். வருங்காலத்திலும் அவர்களைக் கொடுமைப்படுத்தப் போவதில்லை என்றும் அவர் உறுதி கூறியுள்ளார்.

குடியுரிமை, வாக்குரிமை, வேலையுரிமை, கல்வி உரிமை ஆகிய உரிமைகளையெல்லாம் பறித்து மலையகத் தமிழ்மக்களை அரசியல் அனாதைகளாக்கியதை விட வேறு என்ன கொடுமை வேண்டும்? 'கள்ளத் தோணிகள்' என்று இழிவுபடுத்தி, அவர்களைக் கூட்டம் கூட்டமாகக் கைதுசெய்து காவற்கூடக் கொட்டடிகளிற் தள்ளி இம்சிப்பது கொடுமை இல்லையா என்று கேட்கின்றோம்.

மன்னார் பகுதியிலும் இதர சில தமிழ் பகுதியிலும் இராணுவத்தினர் நடுநிசியில் தமிழர்களின் வீடுகளில் புகுந்து கைதுசெய்து, அவர்களைச் 'கள்ளத் தோணி' களென ஒப்புக்கொள்ளுமாறு தாக்கித் துன்புறுத்துவது இன்றும் நடைபெறுகிறதே! இந்தக் கொடுமைகளையெல்லாம் தென்னகத் தமிழ்பேசும்மக்கள் அறியாமல் தடுத்துவிடச் செய்யும் முயற்சி நிச்சயம் பலிக்காது

பிரஜாவுரிமைச் சட்டப்படி பிரஜாவுரிமை பெறத் தவறியவர்கள் "நாடற்றவர்களல்ல" என்று அவர் கூறுகிறார். நாமும் கூறுகின்றோம் அவர்கள் நாடற்றவர்களல்ல—இந்நாட்டுப் பிரஜைகளே என்று.

மலையக மக்களின் குடியுரிமையைப் பறிக்க ஐக்கிய தேசியக் கட்சி ஒரு சதி செய்தது. அச்சதியின் விளைவாக உருவானதே பிரஜாவுரிமைச் சட்டம். இச்சட்டத்தின்படி அவர்கள் குடியுரிமையை இழந்தார்களேயன்றி, உண்மையில் அவர்கள் இந்நாட்டுக் குடிமக்களே.

எனவே இப் பிரஜாவுரிமைச் சட்டத்தின் கீழ் "நாடற்றவர்" பிரச்சினையை என்றுமே தீர்க்க முடியாது. இதில் ஐயமே வேண்டாம். இப் பிரச்சினைக்கு இறுதியான தீர்வு வேண்டுமானால் முதலில் இச்சதிச் சட்டம் அடியோடு கைவிடப்பட வேண்டும்.

இந்திய அரசாங்கத்துடன் அடிக்கடி கண்துடைப்புப் பேச்சு வார்த்தைகள் நடத்துவதால் பயன் ஏற்பட்டதுமில்லை; இனி ஏற்படப் போவதுமில்லை. இப் பிரச்சினையைத் தேசியப் பிரச்சினையாகக் கருதி, இதர கட்சிகளுடனும் இது பற்றிக் கலந்து பேசப் போவதாக அரசாங்கம் அறிவித்தது. இதுவரை அதுவும் நடைபெறவில்லை. அரசாங்கம் ஒரு முடிவைச் செய்தால் அதனை அமுல் நடத்தக்கூடிய ஆக்க சக்தி அரசாங்கத்திடம் இருத்தல் வேண்டும்.

6 பிரதமர்கள் இப் பிரச்சினை பற்றி கடந்த 16 ஆண்டுகளாகப் பேச்சு வார்த்தைகள் நடத்தியுள்ளனர். இது பற்றி "சிம்மாசனப் பிரசங்கங்களிலும்" பன்முறை குறிப்பிடப்பட்டது ஆனால் பிரச்சினையோ என்றும் சிரஞ்சீவியாகவே இருக்கிறது.

குடியுரிமைப் பிரச்சினையை அவசரமாகத் தீர்க்க வேண்டும் என்ற அக்கறை அரசாங்கத் தரப்பில் காணப்படவில்லை.

10,00,00க்கு மேற்பட்ட மக்களை என்றும் அரசியல் அனாதைகளாக வைத்திருக்க முடியாதென்பதை அரசாங்கம் உணரவேண்டும். இன்னும் பல ஆண்டுகளுக்கு இப் பிரச்சினையை இம்மாதிரி தொடர்ந்து இழுத்துக் கொண்டு போகலாம் என்று கருதினால் ஆட்சியாளர் ஏமாந்து போவது திண்ணம். ஏனெனில் தோட்ட மக்களின் அடிப்படை உரிமைகளை அவர்களுக்கு வழங்க வேண்டிய நிர்ப்பந்தத்தை அவர்களே ஏற்படுத்தி விடுவார்கள். அந்த நாள் வெகு தூரத்தில்

# புதிய நிதி மந்திரிக்கு தேவையற்ற வாழ்த்து

## யாழ். நகரசபையின் அவசரம்

புதிய நிதிமந்திரி டாக்டர் என். எம். பெரேராவைப் பாராட்டி யாழ்ப்பாணம் மாநகர சபை தீர்மானம் நிறைவேற்றியிருப்பதும், மேயர் அவரைப் பாராட்டி வாழ்த்துச் செய்தி அனுப்பியிருப்பதும் அவசரப்பட்டுச் செய்த தேவையற்ற செயலாகும். இந்த வாழ்த்துக்களுக்கு டாக்டர் பெரேரா உரியவரோ இல்லையோ என்பது சிறிது காலம் சென்ற பிறகுதான் தெரியும்.

அவர் சுதந்திரக்கட்சி முகாமினுள் சிக்கிக் கொண்டிருக்கிறார் என்றே கூற முடியும். இந்த நிலையில் நல்ல கொள்கைகளை அவர் நிலை நாட்டுவாரோ, மாட்டாரோ என்பதைச் சற்று பொறுத்துத்தான் கூறமுடியும். மக்கள் கொஞ்சம் பொறுத்திருந்துதான் இதனைப் பார்க்கவேண்டும்.

சமசமாஜக் கட்சி அரசாங்கத்தில் சேர்ந்தால் அரசாங்கத்தின் பழைய கொள்கையிலும், போக்கிலும், நடவடிக்கையிலும், மாற்றங்கள் ஏற்படுமா என்றனர் சிலர். ஏற்படாதென்றனர் மற்றும் சிலர்.

இது பற்றிய முடிவை கூட்டாட்சி ஏற்பட்டு பத்துநாட்களில் நாம் திட்ட வட்டமாகக் கூறிவிட முடியாது,

டாக்டர் என். எம். பெரேரா திறமையுள்ளவர் என்பது உண்மையே. அவருக்கென ஒரு கொள்கையும் உண்டு என்பதும் உண்மையே, ஆனால் அரசாங்கத்தில் அவர் தனது சொந்தக் கொள்கைகளை அமுல் நடத்துவதற்காகத் தனது திறமையைப் பயன்படுத்த அனுமதிக்கப்படுவாரா? அல்லது சுதந்திரக் கட்சியின் கொள்கையை அமுல் நடத்த அவர் தன் திறமையை உபயோகிக்க வேண்டிய நிர்ப்பந்த நிலைதான் ஏற்படுமா?

வேறு வார்த்தைகளில் கூறின், திறமையற்ற சுதந்திரக் கட்சித் தலைவர்கள் தங்களின் கொள்கையை அமுல் நடத்த டாக்டர் பெரேராவைப் பயன்படுத்திக்கொள்வார்களா?

### வலிமை மிக்க குழு வெளியே

இடதுசாரிகள் ஒரு வலிமைமிக்க குழுவாக அரசாங்கத்தில் சேரவில்லை. சமசமாஜக் கட்சியில் கூட

சுதந்திரன் அரசியல் நிருபர்

கொல்வின் ஆர். டி சில்வா, லெஸ்லி குணவர்தன, பர்னட் சொய்ஸா, டொரிக் டி சூசா போன்ற தலைவர்கள் வெளியே நிற்கிறார்கள். மற்ற இரு இடதுசாரிக் கட்சிகளும் வெளியே நிற்கின்றனர்.

இந்த நிலையில் டாக்டர் பெரேரா மட்டும் அரசாங்கத்தினுள் சுதந்திரக் கட்சியின் தாக்கத்தை எதிர்த்து நிற்க முடியுமென்று அரசியல் அவதானிகள் நம்ப மறுக்கின்றனர் (மற்ற இரு சமசமாஜ மந்திரிகளும் கட்சியில் இரண்டாந்தர, மூன்றாந்தரத் தலைவர்களே)

ஆகவே அவர் தனது சொந்த நோக்கங்களை நிறைவேற்ற அரசாங்கத்தில் இடம் கிடைக்குமென்று கூறமுடியாது.

### சிறுபான்மையோர் பிரச்சினை

சிறுபான்மையோர் பிரச்சினைகளில் என். எம். தலையிட சுதந்திரக் கட்சித் தலைவர்கள் அனுமதிக்க மாட்டார்கள் என்றே நம்பப்படுகிறது.

குடியுரிமைப் பிரச்சினையும், மொழியுரிமைப் பிரச்சினையும் சமசமாஜக் கட்சியின் பத்து அம்சத் திட்டத்தில் இடம்பெறவில்லை. இவ்விரு பிரச்சினைகளைப் பற்றி அரசாங்கத்தின் கொள்கையை அப்படியே ஏற்று அவற்றை அந்தத் திட்டத்தில் சேர்த்துக் கொண்டுள்ளார் என் எம்.

இதிலிருந்து இவ்விரு பிரச்சினைகளிலும் சுதந்திரக் கட்சி அரசாங்கத்தின் கொள்கைகளை அமுல்நடத்த வேண்டிய நிர்ப்பந்தம்தான் டாக்டர் பெரேராவுக்கு ஏற்பட முடியும் என்பது தெளிவு.

இவை அனைத்தும் சாத்தியக் கூறுகளே! எனவே டாக்டர் பெரேராவின் நடவடிக்கைகள் மீது ஒரு சில நாட்களில் பொறுத்திருந்துதான் தீர்ப்புக் கூற முடியும்.

அவர் தன் நல்ல கொள்கைகளை அமுல் நடத்த முயற்சி செய்கிறாரா, அதற்காக அவர் என்ன அரசியல் உபாயங்களைக் கையாளுகிறார்' என்ன நடவடிக்கைகள் எடுக்கிறார், அவரது உபாயங்களும் நடவடிக்கைகளும் வெற்றி பெறுகின்றனவா என்பனவற்றை ஆராய்ந்து பார்த்தே மக்கள் தீர்ப்பளிக்க முடியும்.

அதற்குச் சிறிது காலம் பிடிக்கலாம். அதுவரை மக்கள் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். அதற்கிடையே—சிறுபான்மையோரின் உரிமைகளைக் காக்க அவர் எந்த நடவடிக்கையும் எடுக்க முன்பே-அவரை வாழ்த்துவதும் பாராட்டுகள் தெரிவிப்பதும் தேவையற்ற செயலாகும். அவசரப் பாராட்டுகள் சிறுபான்மையோர் உள்ளத்தில் ஆதாரமற்ற ஒரு நம்பிக்கை ஏற்பட ஏதுவாகும்.

நிலைமை இன்னும் தெளிவாகவில்லை. தமிழ் பேசும் மக்களின் நியாயமான உரிமைகளை வழங்கி, அவர்களின் நல்லெண்ணத்தையும் ஒத்துழைப்பையும் பெற கூட்டரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பது விரைவில் தெரிந்துவிடும்.

# மொழிப் பிரச்னையில்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சிறுபான்மையோர் பிரச்சினை சம்பந்தமாக எதுவிதமான நடவடிக்கையும் எடுக்கப்போவதில்லை என்றும், பொருளாதாரப் பிரச்சினை மட்டிலுமே கவனம் செலுத்தப் போவதாகவும் கூறினாராம்.

டாக்டர் பெரேராவிடம் கையளிக்கப்பட்ட பொதுச் சேவைத் திணைக்களத்தில் பிரதமரின் கண்காணிப்பு இருக்கவேண்டும் என்றும் வற்புறுத்தப்பட்டு, ஏற்றுக் கொள்ளப்பட்டதன் பேரில் அமைச்சரும், பௌத்த பிக்குவும் சாந்தமடைந்து திரும்பினார்களாம்.

இது இவ்வாறிருக்க, ஆளும் கட்சி சிறுபான்மையோர் பிரச்சினையை ஒட்டி நடவடிக்கை ஏதாவது எடுத்தால், அதற்கேற்றவாறு செயல்பட ஆயத்தமாயிருக்குமாறு சில சிங்கள வகுப்புவாதிகள் பிரசாரம் செய்து வருகின்றனராம். சில மந்திரிமார்களின் மறைமுகமான உதவியுடன் பல இயக்கங்கள் இப் பிரசாரத்தில் ஈடுபட்டிருப்பதாக வெளியூர்களிலிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.

### மந்திரிசபையில்

புதன்கிழமைநடைபெற்ற முதலாவது மந்திரிசபைக் கூட்டத்திலும் சிறுபான்மையோர் பிரச்சினைகள்பற்றி எதுவும் பிரஸ்தாபிக்கப்படவேயில்லை என்றும் வதந்தி அடிபடுகிறது. கட்டாய ஓய்வு சம்மந்தமாக எதுவித புதிய முடிவும் எடுக்கப்படவில்லை என்றும் கூறப்படுகிறது.

'இந்த நிலைமைகளைக் கவனித்துப் பார்க்கும்போது கூட்டு அரசாங்கத்தால், சிறுபான்மையோருக்கு நன்மை ஏற்படுமென எதிர்பார்க்க இடமில்லையென்று அரசியல் அவதானிகள் கருத்து தெரிவிக்கின்றனர்.

# நிதி மந்திரிக்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தலைமையில் நடைபெற்ற தமிழரசு வாலிப முன்னணியின் ஆட்சிக் குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் விபரம் வருமாறு:

சிங்களம் மட்டும் சட்டத்தினால் தமிழ் பேசும் இனத்தின் தன்மானமும் சுதந்திரமும் பறிக்கப்பட்ட நிலையில் தமிழ் பேசும் அரசாங்கஊழியர்களைக் கட்டாய ஓய்வு கொடுத்து வெளியேற்றிக் கொண்டிருக்கும் இவ்வேளையில், தமிழ்ப் பள்ளிக்கூடங்களில் ஆவணி மாதத்தில் சிங்கள ஆசிரியர்களை நியமனம் செய்வதற்குத் திட்டம் போட்டுக் கொண்டிருக்கும் அரசாங்கத்தின் கொள்கைகளை மாற்றுகிறுக்கும்வரைக்கும் அரசாங்கத்தின் எந்த மந்திரியும் உத்தியோகபூர்வமாக இங்கு விஜயம் செய்தால் தமிழ் அரசு வாலிப முன்னணி கறுப்புக் கொடி பிடித்து எதிர்ப்புத் தெரிவிப்பதெனவும் — நிதி மந்திரி திரு. டாக்டர் என். எம். பெரேரா வருகையையிட்டு தீர்மானிக்கிறது.

நிதி மந்திரி டாக்டர் பெரேரா இன்றைய நிலையில் [illegible] டாரென்று தெரியவருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்ப் பிரதேசங்களில்

# விவசாயிகள் புறக்கணிக்கப்படுகின்றனர்

## சலுகைகள் வழங்குவதில் பாரபட்சம் காட்டப்படுகிறது

அரசினர் கடைப்பிடிக்கும் பாரபட்சக் கொள்கையினால் தமிழ்ப் பிரதேசங்களில் காணி பெற்று விவசாயம் செய்யப்புறப்பட்ட தமிழ் விவசாயக் குடும்பங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதாக அறிய வருகிறது. சிங்கள விவசாயிகள் எங்கு குடியேற்றப்பட்டாலும் அவர்களுக்கு வழங்கப்படும் சலுகைகளில் ஒரு சிறு பகுதிதானும் தமிழ் விவசாயிகளுக்கு வழங்கப்படுவதில்லை என்று கூறப்படுகிறது.

பழைய குளங்களை ஆங்காங்கே திருத்திவிட்டு அங்கு விவசாய மக்களைக் குடியேற்றி நெல்லுச் சாகுபடி செய்வதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் செய்துவருகிறது. இப்படிக் குடியேற்றப்படும் விவசாயிகளில் சிங்களவர்களுக்கே விசேட சலுகைகள் வழங்கப்படுவதாகவும், தமிழ்பேசும் விவசாயிகளுக்குப் போதுமான உதவிகள் அரசிடமிருந்து கிடைப்பதில்லை எனவும் குற்றஞ்சாட்டப்படுகிறது.

கல்குடா பிரதிநிதி திரு. பொ. மாணிக்கவாசகரின் முயற்சியினால், கல்குடாத் தொகுதியில் பல குளங்கள் சீர்திருத்தப்பட்டன. பல்லாயிரக்கணக்கான ஏக்கர் பூமியும் விவசாயத்துக்கேற்றபடி பண்படுத்தப்பட்டது. நூற்றுக்கணக்கான விவசாயிகள் குடியேற்றப்பட்டனர். ஆனால் அந்த விவசாயிகளுக்கு போதுமான வசதிகளை அரசு செய்து கொடுக்கவில்லை.

குடியேற்றத்திட்டங்களில் சிங்களவர் குடியேற்றப்படும் பட்சத்தில் அவர்களுக்குக் குடியிருக்க வசதியான வீடுகள், பிள்ளைகள் படிக்கப் பள்ளிக்கூடங்கள், ஆஸ்பத்திரிகள், பிரயாண வசதிகள் போன்ற இன்னோரன்ன வசதிகளைச் செய்து கொடுப்பதுடன், ஒவ்வொரு குடும்பத்தின் சம்ரட்சணைக்காக மாதா மாதம் குறிப்பிட்ட தொகை பணமும், விதை நெல் போன்ற முன் உதவிகளையும் அரசு செய்து கொடுக்கத் தவறுவதில்லை. தமிழ்பேசும் விவசாயிகளுக்கு இத்தகைய சலுகைகள் கிடைப்பதாயில்லை.

> **சென்னை முதல் குமரி வரை**
>
> தவிர்க்க முடியாத காரணங்களால் இம்முறை பிரயாணத் தொடர் கட்டுரை பிரசுரமாகவில்லை. அடுத்த வாரம் தொடர்ந்து வெளியாகும்.

இந்த நிலையில் அரசாங்கம் தமிழ்பேசும் விவசாயிகளை பாரபட்சமாக நடாத்துகிறது என்று ஒரு பிரமுகர் நமது நிருபரிடம் கூறினார். மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கும்போது:

'வசதிக்குறைவுகள் காரணமாகத் தமிழ்பேசும் விவசாயிகள் தங்கள் நிலங்களை விட்டுக் குடிபெயர்ந்தால் அந்நிலங்களைச் சிங்களவர்களுக்குப் பகிர்ந்தளித்து விடுவதற்காகவே அரசாங்கம் இத்தகைய சூழ்ச்சியைச் செய்கிறது என்று நம்பவும் இடமிருக்கிறது' என்று கூறினார்.

கல்லோயாத் திட்டத்தின் கீழ் காணிகள் வழங்கப்படும் போதுஇதே உபாயத்தையே அரசு கையாண்டது என்றும் அப் பிரமுகர் பல உதாரணங்களைக் கூறினார்.

## மக்கள் குரல்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால், அரசினர் நடந்துகொண்ட விதம் நீதி, நேர்மை, மனிதத்தன்மை இவைகளுக்கு அப்பாற்பட்டதாகவே இருந்தது; எந்தச் சட்டத்தின் அடிப்படையில் தமக்கு நியாயம் வழங்கப்படும் என்று நம்பினார்களோ அதே சட்டத்தின் அடிப்படையில் 100க்கு 96 சதவிகிதமான மனுக்கள் நிராகரிக்கப்பட்டன.

முரண்பட்ட சாட்சியங்கள் மனுக்கள் நிராகரிக்கப்படுவதற்கு காரணமாயிருந்தன வென்றாலும் பெரும்பாலும் சட்டம் கையாளப்பட்ட முறைகளையும் குறிப்பிடாதிருக்க முடியாது.

சுருக்கமாக; விசாரணைகளின்போது, 'வார்த்தைப் பரிமாற்ற'த்துக்கே கமிஷனர்கள் முக்கியத்துவம் கொடுத்தனரேயன்றி, மனுதார்களின் உணர்ச்சிகளுக்கல்ல.

ஆரம்பகாலந் தொட்டு, இலங்கையர்களாகத் தங்களைப் பதிவுசெய்துகொள்ள விரும்பாதவர்களை இந்தியா ஏற்றுக்கொள்ளும் என திரு. நேரு கூறிவந்தாரேயல்லாமல், 'பதிவ செய்யப்படாதவர்களை' என்று சொல்லவில்லை. திரு. அமரசிங்கா சொல்லியதைப்போல, 'இலங்கைப் பிரஜைகளாகப் பதிவுசெய்யப்படாதவர்கள் இந்தியர்களாக ஏற்றுக்கொள்ளப்படுவார்கள்' என்று கூறியிருந்தால், உத்தேச 'இலங்கை-இந்தியப் பிரதமர்கள்' மகாநாடு சமீபத்தில் நடந்தேயிருக்கும்.

இந்த மகாநாடு, 'இலங்கைப் பிரஜைகளாகப் பதிவுசெய்யப்படாதிருக்கும் இந்தியர்கள் அனைவரும் இந்தியப் பிரஜைகளே!' என நேரு 'பிரதமர்கள் சந்திப்புக்கு' 'முன் நிபந்தனை'யாக ஒப்புக்கொள்ளவேண்டும் என்ற தோரணையில் இலங்கை அரசாங்கம் பேசிவந்ததையடுத்து, 'அத்தகைய ஒரு நிபந்தனையுடன்' பேச்சுவார்த்தைகள் நடத்த இந்தியா இணங்க மறுத்தமையினால், நிகழாமல் போனதை இதற்குள் மறந்திருக்கமுடியாது.

நேரு. நேர்மை தவருதவர்; வாக்குத் தவருதவர் என்பது உலகறிந்தஉண்மை. 'இலங்கை-இந்தியப் பிரதமர்கள் பேச்சுவார்த்தைகளுக்கு இலங்கை விதித்த நிபந்தனைகளுக்கு உடன்படாததுவும் நேரு ஆரம்பகாலத்தில் இருந்து பிரஜா உரிமை விஷயத்தில்கொண்டிருந்த அபிப்பிராயத்தைத் தெளிவாக்குகிறது.

மூ. ப. சிவப்பிரகாசம்,
'அம்பிகை வாசம்',
ஓல்ட் ஹலோயா,
கலஹா.

## சிங்களவரல்லாதார்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அயல் நாடுகளுக்குச் செல்லாமலிருக்கப் போதிய கண்காணிப்புகளும் கட்டுப்பாடுகளும் விதிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் சிங்களவர்கள் மட்டுமே வெளிநாடு செல்லக்கூடியதாக இருக்கலாம்.

இலங்கையிலுள்ள தனிப்பட்டவருக்கோ, அல்லது நிறுவனங்களுக்கோ வெளிநாட்டு அரசாங்கம் எதுவும் அழைப்பு அனுப்பமுடியாது. எத்தகைய அழைப்பும் அரசாங்கத்தின் வெளி விவகார அமைச்சின் மூலமேயே விடுக்கப்பட வேண்டுமென்று அரசு வெளிநாட்டு அரசாங்கங்களுக்கு வேண்டுகோள்விடுத்திருப்பதாக ஒரு செய்தி கூறுகிறது.

## சேக்கிழார் விழா

கொழும்பு விவேகாநந்த சபையின் ஆதரவில் 20-ம் திகதி சனிக்கிழமை மாலை 5-30 மணியளவில் சபை மண்டபத்தில் சேக்கிழார் விழா நடைபெறும். உலகத் தமிழ் மன்றத் தலைவர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் அருள் தியாகராசா, க. கந்தசாமி ஆகியோர் உரை நிகழ்த்துவார்கள். சி. மாணிக்கராசாவின் பக்திப் பாடல்களும் இடம் பெறும்.

## பதவியின் முன் தத்துவம்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

வும் 25 ஆண்டுகளுக்கு மேலாக அவர்களை நம்பியிருந்த தொழிலாளர்களை ஏமாற்றிவிட்டார்கள். முதலாளித்துவ அடிப்படையில் அமைந்த கட்சியுடன் இணைந்த இவர்களிடம் தொழிலாளர்கள் சலுகைகளை எதிர்பார்ப்பது அவலை நம்பி உரலை இடித்த கதையாகவே முடியும்.

### தத்துவத்திற்கே முழுக்கு

மார்க்சிச தத்துவம் டாக்டர் பெரேரா கூறும் புதுமுறை சமூகவுடைமை அமைப்புப் பற்றி எவ்விடத்திலும் குறிக்கவில்லை. முதலாளித்துவ இயக்கத்துடன் இணைந்து சமூகவுடைமைத் தத்துவத்தை அமுல் நடாத்த முடியுமென்று டிராட்ஸ்கிய வாதம் கூறவில்லை. சிறுபான்மையினரின் உரிமைகளை அபகரித்துத்தான் சமூகவுடைமை அரசை அமைக்க முடியுமென்று மார்க்சிசமோ அல்லது டிராட்ஸ்கியமோ கூறவில்லை. எனவே டாக்டர் பெரேராவும் அவர்தம் தோழர்களும் மார்க்சிசத்தையும், டிராட்ஸ்கியத்தையும் துறந்து விட்டார்கள். ஆகவே அவர்கள் இன்று சுண்டியெடுத்த வகுப்பு வாத முதலாளித்துவ வாதிகள். இதை அரசியல் அறிவு படைத்த எவரும் மறுக்கவோ அன்றி மறைக்கவோ முடியாது. இதுவரை டாக்டர் பெரேராவையும் அவர் தம் தோழர்களையும் நம்பி வாழ்ந்த தமிழ்த்தோழர்கள் வெட்கப்பட வேண்டியவர்களாக, வேதனைப்பட வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

கொம்யூனிச முகாமில் இருக்கும் தனி நபர் வழிபாடு இன்றும் சில தமிழ் சமசமாஜ தோழர்களிடம் காணப்படுகிறது. டாக்டர் பெரேரா மார்க்சிசத்தைக் கைவிட்டுவிட்டார். இவர்கள் மட்டும் டாக்டர் பெரேராவை வழிபடும் தனி நபர் வழிபாட்டு முறையை விடுவதாக இல்லை.

தொழிலாளரின் உயர்வுக்காக உழைத்தவர் டாக்டர் பெரேரா. இன்று அவர் கையில் அரசாங்க பொதுச்சேவை ஒப்படைக்கப்பட்டுள்ளது. பொறுப்பை ஏற்றுப் பத்துத் தினங்கள் கடந்துவிட்டன. இன்றுவரை அவர் செய்ததுதான் என்னே?

தமிழ் பேசும் அரச ஊழியருக்கு வழங்கப்படும் கட்டாய ஓய்வு பற்றி அவர் எடுத்த நடவடிக்கைதான் என்னே? மூன்று ஆண்டுகளுக்கு மேலாக பதவி உயர்வையும், சம்பள உயர்வையும் இழந்து வரும் தமிழ் ஊழியரின் அவல நிலையைப் போக்க இதுவரை எடுக்கப்பட்ட முயற்சிகள்தான் என்ன? தமிழரசுக் கட்சித் தலைவர்கள் சென்று இடித்துரைக்கும் வரை இப் பிரச்சினைகள் டாக்டரின் கண்ணில் படவில்லை. தமிழரசுத் தலைவர்கள் இடித்துரைத்த பொழுதும் கூட முடிவான கருத்து எதையும் கூறவில்லை. 1956ம் ஆண்டு 'சிறுபான்மையினரின் உரிமைகளை நசுக்குவதைவிட வறுந்தரம் செல்வது மேல்' என்று கூறியவரும் இதே டாக்டர் பெரேரா தான். அன்று உமிழ்ந்த நீரை இன்று அவரே மீண்டும் உண்ணுகிறார்.

### அன்றும் இன்றும்

கடந்த சித்திரைத் திங்களில் யாழ் முற்றவெளி மைதானத்தில் நடைபெற்ற சமசமாஜக் கட்சியின் பகிரங்கக் கூட்டத்தில் உரை நிகழ்த்துகையில் 'தமிழரின் உயர்விலும் தாழ்விலும் சமசமாஜக் கட்சி ஒன்று இணைந்திருக்கும்' என்று கூறினார் டாக்டர் பெரேரா. இன்று தனிச் சிங்கள அமுலைத் தீவிரப்படுத்த நடவடிக்கை எடுக்கிறார்.

'மலை நாட்டு மக்கள் இந் [illegible] பெரேரா கூறிய வாசகங்கள் இன்றும் [illegible] முகடு களில் எதிரொலிக்கவே செய்கின்றன. அந்த எதிரொலி ஓய்ந்து விட முன்னரே 'மலைநாட்டு மக்கள் இந்நாட்டவரா?' என்று கேட்கும் நிலைக்கு டாக்டர் வந்து விட்டார்.

### பழைய பாதை

மந்திரிப் பதவியை ஏற்க முன்னர் சுதந்திரக் கட்சியினர் விதித்த நாலு அம்சத் திட்டத்தை டாக்டர் பெரேரா ஏற்றுக் கொண்டுள்ளார். நாலு அம்சத் திட்டமும், தமிழ் இனத்தை ஒழிக்கும் இனவொழிப்புச் சாசனம் இதை அரசியல் அறிவு படைத்தவர் எவரும் மறுக்கமாட்டார்கள்.

தமிழ் பேசும் இனம் ஐக்கிய தேசியக் கட்சியை நம்பியது, சுதந்திரக் கட்சியை நம்பியது. கண்ட பலன் என்ன? ஈற்றில் இடது சாரிகளையும் தொழிலாளர்களின் இரட்சகர்டாக்டர்பெரேராவையும் சிலர் நம்பினார்கள். ஐக்கிய தேசியக் கட்சியும், சுதந்திரக் கட்சியும் சென்ற பாதையிலேயே இடது சாரிக் கட்சிகளும் டாக்டர் பெரேராவும் சென்றுள்ளனர். எனவே நமக்கு நாமே உதவி. இந்த உண்மை என்றுமே அழியாது. நமக்கு விடுதலையையும் விமோசனத்தையும் நாமே போராடிப் பெற வேண்டும். உலக நாடுகளின் விடுதலை வரலாறு கற்பிக்கும் உண்மையும் இதுவே. இதை தமிழ் பேசும் மக்கள் மறந்தால் இனத்தின் அழிவை யாராலும் தடுக்க முடியாது.


**விவேக மீட்டல் பாடங்கள்**

மிகச் சிறந்ததும், தற்காலிகமானதும், புரிந்து கொள்ளக் கூடியதுமாகிய குறிப்புகள், வினைக்கள விடைகள் முதலியன ஒன்று சேர்ந்து கட்டப்பட்ட தொகுதிகள் கீழ்காணும் பரீட்சைக்கு கிடைக்கும்.

ஜி. சி. ஈ. உயர்தரமும் பல்கலைக் கழக புகுமுகத் தேர்வும்

**ஆங்கில மொழி மூலம்**

| | | |
|---|---|---|
| இரசாயனவியல் | ரூபா | 12/- |
| பௌதிகவியல் | ” | 12/- |
| தாவரவியல் | ” | 12/- |
| விலங்கியல் | ” | 12/- |
| தூய கணிதம் | ” | 12/- |
| பிரயோகக் கணிதம் | | 12/- |

**தமிழ் மொழி மூலம்**

| | | |
|---|---|---|
| தமிழ் | ரூபா | 12/- |
| இலங்கை வரலாறு | ” | 12/- |
| ஐரோப்பிய வரலாறு | | 12/- |
| இந்திய வரலாறு | ” | 12/- |
| அரசியல் | ” | 12/- |
| புவியியல் | ” | 12/- |
| சமஸ்கிருதம் | ” | 12/- |

**பாடப் புத்தகங்கள்**

| | | |
|---|---|---|
| பாஞ்சாலி சபதம் | ரூபா | 5/- |
| நளவெண்பா | ” | 5/- |
| திருக்குறள் | ” | 5/- |

தபாற் செலவு பிரதி ஒன்றுக்கு 50 சதம்.
வி. பி. பி. அனுப்பப்படமாட்டா.

**யுனைட்டெட் இன்ஸ்டிடியூட்ஸ்,**
நெல்லியடி — கரவெட்டி
கிளைகள்:
107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
13, முதலாவது சப்பெல் ஒழுங்கை, வெள்ளவத்தை, கொழும்பு-6.



**"யந்திர சக்தியை"**

திருப்பிப்பதற்காக உங்கள் காரணம் எதுவானாலும் நிறைவேற்றித்தர முடியும். உங்கள் காரணத்தை விபரமாக எழுதி அனுப்பவும்.

கவர்மெண்ட் ரிஜிஸ்டர் மாந்திரீக வைத்தியர்


**பி எம். திசாநாயக்க**

நாலு தேவாலய பிரதம தர்மகர்த்தா
அருத எண்ணெய் தலைமை காரியாலயம்
கம்பளை.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

"இறவாமை வேண்டும்
இறப்புண்டேல்—உன்னை
மறவாமை வேண்டும்"
—அன்பு இதயம்.

திரும்பத் திரும்ப எத்தனை முறை படித்தேன் என்பது எனக்கே தெரியாது. ஒவ்வொருமுறை படிந்தபோதும், ஒவ்வொரு சுவை, பல்வேறு விதமான மனக் கிளர்வுகள். அழகாக எழுதி, தெளிவாக அவர்மனதில்லையைக் காட்டியிருந்தார். திரும்பவும் அதைப் படிக்கிறேன். அந்த எழுத்துக்களையே பார்த்துக்கொண்டிருக்கிறேன். அவை ஒவ்வொன்றும், மெல்ல மெல்ல மங்கி மறைகின்றன. அதில் அவர் உருவம் தெரிகிறது. ஆமாம், அவர்உருவம்,அவர் உருவமேதான். அவர் உதட்டிலே ஓர் மெல்லிய புன்னகை எம்பிக் குதிக்கிறது. நீண்டு வளர்ந்து கறுத்திருந்த மீசையை அவர் கை லேசாகத் தடவுகிறது. கம்பீரமாக அவர் நிற்கின்றார். அவரைப் பார்த்துக்கொண்டாலே போதும். நான் பாக்கியசாலிதான்.



எத்தனையோ வாலிபர்கள் என்னை விரும்பியதுண்டு. என் அழகிற்காகத்தான். ஆனால், அதை வெளிப்படையாகக் கூற அவர்களுக்குத் தைரியம் இருக்கவில்லை. அவர்கள்கோழைகள். அதற்குள் ஆசை வேறு ஆசை! அவர்மட்டும் அப்படியல்ல. தனது விருப்பத்தைத் துணிந்து கேட்டுவிட்டார். கேட்டேவிட்டார்.எவ்வளவு கண்ணியமான முறையில் தன் விருப்பத்தைத் தெரிவித்திருக்கிறார், பாருங்களேன்!

அவரது முதற் கடிதமே என்னை அவரிடம் பித்துக்கொள்ளச் செய்துவிட்டது.

'நான் உன்னை விரும்புகிறேன். தயவுசெய்து உங்கள் விருப்பத்தைத் தெரிவிக்கவும். விரும்பாவிடில் இக்கடிதம் எழுதியமைக்காக என்னைமன்னிப்பதோடு என்னை உங்கள் சகோதரனாக ஏற்றுக்கொள்ளவும்.' இப்படிஎழுதியிருந்தார். எவ்வளவு அடக்கமாகவும், அதே நேரத்தில் ஒழுக்கமாகவும் எழுதியிருந்தார்.


விருப்பம் இருந்தும் முதலில் என் விருப்பத்தைத் தெரிவிக்கவில்லை. அதே வேளை அவரை வெறுக்கவுமில்லை என்பதை மறைமுகமாக இப்படிக் காட்டினேன். 'நான் ஒருவரையும் விரும்பவில்லை. தயவுசெய்து என்னைக்கஷ்டப்படுத்தாதீர்கள். நான் ஜீ. சீ. ஈ. பரீட்சைக்குப் படிக்கவேண்டும்.'

இப்படிக் கடிதம் எழுதவில்லை. என் சக வகுப்புத் தோழியிடம் சொல்லியனுப்பினேன். என் தோழிக்கு அவர் 'டியூசன் மாஸ்ரர்.' எங்கள் இணைப்புக்கு அவள் தான் உயிர்நாடி. அதற்கு அவர் பதில் எழுதவில்லை. அவளிடமே சொல்லி அனுப்பியிருந்தார். எவ்வளவுசிறப்பான பதில். 'எனக்கு அதையிட்டுக் கஷ்டமோ, கவலையோ கிடையாது. 'ஒருவன் ஒருத்தியையோ, ஒருத்தி ஒருவனையோ விரும்புவது இயல்பு. அதற்குமற்றவனோ, மற்றவளோ சம்மதிக்கவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. கிடையவே கிடையாது. அதற்காகக் கோபப்படுவது அறியாமை. ஆத்திரப்படுவது அறிவீனம். வெற்றி-தோல்வி-ஏமாற்றம் இவைகளை சரியாக, சமமாக நோக்குவதுதான் அறிவுடைமை. அதுதான் என் வழி. என்னால் ஒருவித கஷ்டமும்வராது. பிறராலும்வராமல் முடிந்தவரை பார்த்துக்கொள்கிறேன்.'

எவ்வளவு கருத்தோட்டமான பதில்.

முன்பு தினசரி நாலுமுறை என்னைப் பார்க்கத் தவறமாட்டார். பாடசாலைக்குப் போகும்போதும் வரும்போதும், மத்தியானம் சாப்பிடப்போகும்போதும், திரும்பிப் பாடசாலைக்குப் போகும்போதும் இப்படி ஒரு நாளைக்கு நாலுமுறை. பதில்தந்த பின் என்னைப் பார்ப்பதேயில்லை, கண்டாலும் ஒளிந்து கொள்கிறார். தான் கொடுத்த வாக்கில் தவறக்கூடாது என்றஉறுதி-அதனால்தான். ஆனால், அவரைக் காணாவிடில், அவருடைய ஆசை முகத்தைப் பாராவிடில் எனக்குப் 'பேய்' அடித்தமாதிரி. நான் ஒரு விசரி. எனக்குள் தானே சிரித்துக்கொண்டேன்.விருப்பத்தைத் தெரிவிக்கவும் விரும்பவில்லை. தெரிவிக்காமல் இருக்கவும் முடியவில்லை.

அன்று ஜீ. சீ. ஈ. பரீட்சை முடிவு வெளியாகியது. அன்று நான் பாடசாலைக்குப் போகவில்லை. முடிவு வெளியாகியது எனக்குப் பின்புதான்தெரியவந்தது.அதற்கு முன் பாடசாலைக்கு டெலிபோன்செய்து அவர்அறிந்துவிட்டாராமே. என்மேல்எவ்வளவு அக்கறை. என்னுடைய மகிழ்ச்சியில் அவ




ரேன் பங்குகொள்கிறார்? என்னை அறியாமலேயே ஒருவித சக்தி அவரை நோக்கி என்னை இழுத்துச் செல்கிறது. இதுதான் அதுவோ? இப்படி நடந்தும் நானேன் மௌனியாய் இருக்கிறேன்? இந்தப் பெண்களே இப்படித்தானா? அல்லது நான்மட்டும் இப்படியா? என் மனதைக் குடைவது என்ன?

இதன்மேலும் என்னால் தாமதிக்க முடியவில்லை. ஆனால் எப்படி அவரிடம் என் நிலையை எடுத்துக் காட்டுவது? முன்பு மறந்தேன். இப்போ...? எனக்கு ஒரு யோசனைதோன்றியது. கைச்சாத்துப் புத்தகம் ஒன்றை என் தோழிமூலம் அவருக்கு அனுப்பிவைத்தேன். என்ன பதில்வரும் என ஆவலுடன் காத்திருந்தேன்.

பதில் வந்தது. கைச்சாத்துப் புத்தகத்தைப் பிரித்தேன், படித்தேன். அதில் கண்ட வசனங்கள் என்னைக் கிறங்க வைத்தன. வையி [illegible] இதயத்தில் பதித்த அன்பு விதைகள். தமிழில் ஒன்றும், ஆங்கிலத்தில் ஒன்றும் எழுதியிருந்தார்.

இறவாமை வேண்டும்
இறப்புண்டேல்-உன்னை
மறவாமை வேண்டும்
—அன்பு இதயம்.

தமிழில் இப்படிஇருந்தது.

மூத்திற்கு அழகு அதன் தூய்மை

பெண்ணிற்கு அழகு அவள் பெண்மை (கற்பு.)

இப்படி ஆங்கிலத்தில் இருந்தது.

தன் அன்பின் ஆழத்தைத் திறம்படவும், நான் எப்படி இருக்கவேண்டும் என்பதை நாசூக்காகவும் வெளியிட்டிருந்தார்.

என்னுடைய ஜீ. சீ. ஈ. முடிவு எனக்கு ஓரளவு துன்பத்தைத் தந்தது. நான் சித்திெயய்தியதும் என்னைச் சென்னைக்குப்படிக்க அனுப்புவதாக என் பெற்றோர் முடிவு செய்தனர்.

வெண்ணெய் திரண்டு வருகையில் தாழி உடைந்த கதையாகியது என்வாழ்வு. இந்த முடிவை அவருக்கும் தோழிமூலம் தெரியப்படுத்தினேன். தெரியப்படுத்தியே விட்டேன்.

எப்படியும் அவரைச் சந்தித்து நேரில் என்மனதில் தேங்கிக் கிடப்பவைகளைக் கொட்டிவிடவேண்டும் என எனக்குப்பட்டது. அப்படியே அவரைச் சந்தித்து விட்டேன்.

பேசினேன்—பேசினார்—பேசினோம்.

என்னுடைய விருப்பத்தைத் தெரிவித்து, என்னை மறக்கமாட்டீர்கள் தானே எனக் கேட்டேன். கேட்டே விட்டேன். அதற்கு அவர்,

'கல்யாணம் செய்வதில்லை என்ற உறுதிப்பாட்டுடன் தான் வாழ்ந்துவந்தேன். இடையில் நீ குறுக்கிட்டாய். அப்போது என் மனதில் ஒரு சலனம். கலியாணம் செய்து தான் வாழவேண்டும் என்ற முடிவுக்கு வந்தேன். அப்போதுதான் வாழ்க்கை ஒரு முழுவட்டமாகும் என்பதை உணர்ந்தேன்.உணர்த்தினாய் நீ. அந்த அடிப்படையில் தான் என் விருப்பத்தைத் தெரிவித்தேன். அதுவும் கிடைக்காவிட்டால், மீண்டும் பிரமச்சாரியம். அரை வட்டமாகவே இருந்து கொள்ளுவேன்.'

'என்னைவிட்டு வேறொருவளைக் கல்யாணம் செய்யும்படி ஏற்பட்டுவிட்டால்?' இப்படிக் கேட்டேன். எனக்குச் சரியான பயம். என்றாலும் கேட்டேவிட்டேன். நேர்மை உள்ளம் கொண்ட அவரிடம் கேட்டது தவறு என்றாலும் நியாயம் கோரி நிற்கலாம் என்ற நம்பிக்கையில் துணிந்தேன். ஆனால் பயந்து, பயந்துதான் கேட்டேன். ஆத்திரமாகத்தான் பதில் தருவார் என நினைத்தேன். ஆனால், மாறாகத்தான் நடந்தது. கேட்டதுதான் தாமதம் என் கண்கள் நீரைப் [illegible]த்தன.

'சீ, பயித்தியம், ஏன் அழுகிறாய்' என் கண்ணீரைத் தன் அன்புக் கரத்தால் துடைத்துக்கொண்டே கூறினார்.

'என் உள்ளத்திற்கு உரியவள் ஒரே ஒருத்திதான்.'

அந்த ஒருத்தி நான்தான் எனத் தெரிந்ததும், அவர் பொன் அதரங்கள் அதைச் சொல்லட்டும் என ஆவலுடன், எதிர்பார்த்தேன். அவர் தொடர்ந்தார்.

"வேறு யாரையாவது எந்தச் சூழ்நிலையிலாவது திருமணம் செய்ய வேண்டிய அவசியம் எழாது. அப்படி ஏற்பட்டாலும் வருபவள் என் உடலுக்குரியவளாவாளே தவிர உள்ளத்திற்கு ஒருபோதும் உரிமையுடையவளாக முடியாது." அவர் பேச்சில் அழுத்தம் இருந்தது.

'அந்த உள்ளத்திற்கு உரிய ஒரே ஒருத்தி...'

மீண்டும் அவர் வாய்மொழிக்காகக் காத்திருந்தேன்.

'அந்த ஒருத்தி...'

என் தாடையைப் பிடித்து உயர்த்தி என் விழிகளைப் பார்க்கின்றார். நான்கு விழிகளும் கதை பேசுகின்றன.

என்விழிகளில்அவர். அவர் விழிகளில் நான். எவ்வளவு நேரம் அப்படியிருந்தோம். சே! இந்தக் காலத்திற்கும் சந்தர்ப்பம் தெரியாது.

என்னுடைய பிரிவைக் கூறினேன். அவர் அசந்துவிட்டார்.

'வேணி! நீயில்லாத ஊரில் நான் இருப்பேன் என்றா நினைக்கிறாய். நீ இல்லாத ஊர் நிலா இல்லாத வானம். உன் பாதம் படாத பூமி—பாவம் செய்த பூமி. உன் பார்வை படாத வீதி ஒளியிழந்த வீதி'.

'நீயில்லாவிடில் பார்க்கும் பொருள்—பேசும் மொழி—பழகும் இடம் எல்லாம்—வெறுமை விரக்தி—'

இப்போ அந்தப் பட்டணத்தில் அவரும் இல்லை. நானும் இல்லை. இருவரும் இல்லை. நான் சென்னையில் பாடசாலையில் பயில்கிறேன். அவர் வவுனியாவில்—தொழில் புரிகிறார். இனி எப்போது சந்திப்போம்.

அவர் எப்போது இவர் ஆவாரோ?

என் மனதில் பாரம் ஏறிக்கொண்டே போகிறது. என்னால் நிற்க முடியவில்லை. இருக்க முடியவில்லை. படுக்க முடியவில்லை. உண்ண முடியவில்லை. உறங்க முடியவில்லை. பைத்தியமாயிருக்கிறது.

மறுபடியும் கைசாத்துப் புத்தகத்தை எடுத்துப் படிக்கிறேன்.

இறவாமை வேண்டும்.
இறப்புண்டேல்—உன்னை
மறவாமை வேண்டும்
—அன்பு இதயம்.

எழுத்துக்கள் மறைகின்றன. அவர் உருவம் தோன்றுகிறது. வழமையான அதே புன்னகை. கை மீசையைத் தடவுகின்றது. அவர் அவரேதான். அவர் வரவை எதிர் நோக்கி நான் நிற்கின்றேன். கையிலே ஒரு மாலையுடன் என்னை நோக்கி வருகின்றார். கிட்டக் கிட்ட வருகின்றார். அதோ வெகு சமீபத்தில் வந்துவிட்டார்.

மாலையுடன் கைகள் உயர்கின்றன.

என் கண்கள் பனிக்கின்றன.

இதுதான் ஆனந்தக் கண்ணீரோ? கண்களை மூடி விழிக்கிறேன். என்ன ஆச்சரியம். அங்கே அவரில்லை. என் கண்களிலிருந்து பிரிந்த இரண்டு சொட்டுக் கண்ணீர், அவர் எழுதிய முத்தான எழுத்துக்களில் பட்டு எழுத்துக்களைக் கரைக்கின்றன.

எப்போது அவர் என்னுடையவர் ஆவார்?

(யாவும் கற்பனை)


# 'சுதந்திரன்'
## புதிய சந்தா விபரம்

தபால் கட்டணம் அதிகரித்திருப்பதன் காரணமாக, பின்வருமாறு சந்தா உயர்த்தப்பட்டிருக்கிறது.

ஒரு வருடம் ரூபா 14-00
ஆறு மாதம் ரூபா 7-50

நிர்வாகி
'சுதந்திரன்'


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் வாழ தமிழுணர்ச்சி வேண்டும்

## என்றுமழியா இவ்வுணர்ச்சி புத்துயிர் பெறட்டும்

—சற்சொரூபவதி நாதன் பி. எஸ்சி.—

**உலகின் மூத்த மொழி தமிழ். மூவாயிரம் ஆண்டுகளாக இனிமையும் இளமையும் குன்றாது வாழ்ந்து வரும் மொழி தமிழ். இடைக்காலத்தில் தோன்றிய பல இன்னல்களையும், இடர்ப்பாடுகளையும் வெற்றியுடன் முறியடித்து முடியுடை வேந்தரின் முடி தொட்டு அடிவரை பவனிவந்த மொழி தமிழ். தமிழோடு மோதிய மொழிகள் தரணியிலிருந்து தகர்த்தப்பட்டுவிட்டன. உலக மொழியாம் ஆங்கில மொழியும் தமிழுடன் மோதியது. என்றாலும் தமிழ் வாழுகிறது. காரணம்; தமிழுணர்ச்சியாகும். இன்று தமிழ் மொழிக்குப் புது எதிரிகள் சிலர் தோன்றியுள்ளார்கள். இவர்களை முறியடிக்க வேண்டுமானால் தமிழுணர்ச்சி என்ற அணையா அகல் விளக்கின் திரியினைத் தூண்டினால் போதும்என்கிறார் கட்டுரையாசிரியர்.**

கோபம் தாபம், மகிழ்ச்சி துயரம் இது போன்று உணர்ச்சிகள் பலவகை. இவையெல்லாவற்றிற்கும் மேம்பட்ட தனிப்பட்ட உணர்ச்சி ஒன்று உண்டு. அதுதான் அனற்பிழம்பாய்த் தோன்றிய இவ்வுலகத்தில், அனல் முதல் மூதல் தணியத் தொடங்கிய தமிழ் நாட்டில் பிறந்த தமிழனுக்கே உரித்தான தனி உணர்ச்சியாம் தமிழ் உணர்ச்சி. இந்தப் பழமை வாய்ந்த தமிழுணர்ச்சி இருக்கிறதே அது தன்னையுடையோரை அரும்பெரும் காரியங்களைச் செய்வித்துத் தனக்குத்தானே பெருமை தேடிக்கொள்ளும் சக்தி வாய்ந்தது. இந்த வல்லமை வாய்ந்த தமிழுணர்ச்சி பண்டைத் தமிழரை எப்படியெல்லாம் ஆட்டிப் படைத்தது என்பதைச் சிறிது ஆராய்வோம்.

### தமிழ் தந்த திருக்குறள்

உலகுக்கு என்று ஒரு பொதுவான சிறப்பு நூலை அளித்தாரே திருவள்ளுவர், அவரின் வான் புகழுக்கு வழியமைத்துக் கொடுத்தது அவரிலே வளமாக அமைந்திருந்த இந்தத் தமிழுணர்ச்சியே. அவ்வக் காலங்களில் உலகைப் புரக்கும் கருத்துக்களை, அவ்வப்போது வழங்கும் சுரங்கமாம் திருக்குறள், அவரின் தமிழுணர்ச்சியின் உருவகமே. 'உலகம் ஒரு குலம்' என்ற பொதுவுடைமைக் கருத்தும், 'மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறன்' என்று மனத்தின் முழுத் தூய்மையே அறம் என்று பகரும் அறிவுரையும் தமிழுணர்ச்சியின் பிரதிபலிப்புகள்.

### முடிக்குரிய இயல்புகள்

கம்யூனிஸம், சோஷலிசம் அது, இது என்று தற்காலப் புரட்சி முறை அரசியலைப் பற்றிப் பேசுகிறோம். ஆனால் திருவள்ளுவரின் தமிழுணர்ச்சியோ, புது உலகைப் படைக்க வல்ல அறப்புரட்சியைப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே எழுத்தாணி மூலம் நூலில் வடிக்க வகை செய்துவிட்டது. இது மாத்திரமா, முடியாட்சி விளங்கிய அந்தக் காலத்திலேயே, திருவள்ளுவரைக் குடியாட்சி பற்றிப் பேசத் தூண்டி விட்டிருக்கிறது. அரசனின் இயல்புகள் பற்றிக் கூறுமிடத்து, ஊர் மக்களையும், மன்றத் தலைவர்களையும், அமைச்சர்களையுமே முக்கியமாக மனதில் கொண்டுள்ளார் வள்ளுவர். 'இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன் கெடுப்பார் இலானும் கெடும்' என்று அமைச்சர் கடமையை அறிவுறுத்துகிறார். அவர் ஒரு அரசனுக்கு அமைய வேண்டிய இயல்புகள் என்று குறிப்பிட்டவை எல்லாம் பொதுப் படையாக, அரசியலை நடாத்தும் எவருக்கும் பொருந்துமாறு அமைகிறது.

அரசியலைப் பற்றிக் கூறுமிடத்தில், ஓர் குறிப்பிட்ட அரசனின், அல்லது அரசர்களின் பெருமையை, செல்வத்தை அவர் பாடவில்லை. ஓர் நாட்டின் நல்லாட்சிக்கான அடிப்படைக் கருத்துக்களையும், வழிவகைகளையுமே அலசி ஆராய்கிறார். தீர்க்க தரிசியாம் திருவள்ளுவரின் தமிழுணர்ச்சி பல ஆண்டுகளை . முன்னேக்கிச் சென்று எமக்குத் தேவையான கருத்துக்களைக் குறள் வடிவில் அமைத்துத்தந்துள்ளது.

### அரசு கட்டிலில் புலவர்

அடுத்து இலக்கிய ஏடுகளில் இடம் பெற்றுவிட்ட முரசு கட்டில் கொடுத்துத் தமிழின் பெருமையைக் காத்த அரசனிடத்தில் தமிழுணர்ச்சி ஒளிபெற்றுத் திகழ்ந்ததைக் காண்கிறோம். தமிழ்ப்பற்று மிகுந்த அவ்வரசனிடத்தில் ஆட்சி செலுத்திய இந்த விநோதமான தமிழுணர்ச்சி அவனைச் சிறப்புறும்செயலொன்றைச் செய்யத் தூண்டியது. தமிழ்ப் புலவர், தரணியாளும் அரசனின் கட்டிலில் அதற்கு இகழ்ச்சியமையும் வகையில் துயின்றபொழுது அவ்வரசன் அதை இழுக்கெனக் கருதாது, அப் புலவருக்குச் சாமரம் வீசினான். புலவரின் புகழ் மொழிகளுக்கும், பலரின் பாராட்டுதல்களுக்கும் அவன் ஆளானமைக்குக் காரணம், தமிழை நன்கு கற்று அதனால் அவன் தன்னுள் வளர்த்திருந்த தமிழுணர்ச்சியே.

### கொடைவள்ளல்கள்

இனிக்கொடைவள்ளலாம் எல்லப்பர் காலத்திற்கு வருவோம். 'ஆலமரம் இருக்குமிடத்தில் பறவைகளைக் காணலாம். அதுபோல் எல்லப்பர் இருக்குமிடத்தில் இரவலரைக் காணலாம்' என்று புலவர் வாய்மொழியாற் புகழப்பெற்ற எல்லப்பர் காலத்தில் ஆனூர்ச் சர்க்கரை என்று இன்னொரு உபகாரி இருந்தார். அவரின் உபகாரத்தில் தமிழ் வளர்த்த புலவர் பலர். அவர்களில் ஒருவர் தொண்டைநாடு சென்று எல்லப்பரின்பெருமையையும்,பொறுமையையும் சோதிக்க எண்ணினார். போனார், எல்லப்பரைக் கண்டு பேசினார். திரும்பும் பொழுது எல்லப்பர் புலவருக்குப் பரிசில் வழங்கினார். இங்குதான் புலவர் ஒரு இடுக்குப் பண்ணினார். தன் இடக்கையை நீட்டிப் பரிசிலைப் பெற்றார். எல்லப்பரும் சினந்தார். புலவரோ, வலக்கை ஆனூர்ச்சர்க்கரையாரின் அன்புப் பரிசிலைப் பெறும் தனியுரிமையுடையதென்றும் பிறர்முன் நீட்டப்படாதகை என்றும், ஆனூர்ச்சர்க்கரை புலவர் தவறு செய்யினும் பொறுக்கும் தமிழுணர்ச்சி வாய்ந்தவர் என்றும், அவரிடத்தில் பழகியவர்களுக்கு இடக்கையென்றும், வலக்கை யென்றும் தெரிவதில்லை என்றும் விடை பகர்ந்தார்.

### பொறுமையின் பெருமை

உபகாரியாம் எல்லப்பர் இவ்விடை கேட்டு அமைதி பெற்றார். எல்லப்பரின் அரண்மனையைச் சேர்ந்த ஆஸ்தானப் புலவரின் மனமோ அமைதி பெறவில்லை. தமிழுணர்ச்சியால் பொறுமையின் சிகரமாக விளங்குபவர் என்று புகழப்பட்ட ஆனூர்ச்சர்க்கரையின் உண்மைத் தன்மையை அறிய இவர் முற்பட்டார். கொங்குநாடு சென்று ஆனூர்ச்சர்க்கரையின் வீட்டில் விருந்தாளியாக நுழைந்தார். உணவு பரிமாறப்பட்டது. பரிமாறியவர் சர்க்கரையின் அன்னையார். திடீரென்று புலவர் ஒரு காரியம் செய்தார். அன்னை குனிந்து பரிமாறுகையில் அவள் முதுகின்மேல் ஏறி அமர்ந்தார். அனைவரும் திடுக்குற்றனர். அன்னையோ சர்க்கரையின் பக்கம் திரும்பிப் பார்த்தார். சர்க்கரையோ "என்னை அன்போடு பத்து மாதம் சுமந்தாயே இத் தமிழ்க் குழந்தையை ஒரு நிமிடம் சுமப்பதில் வருத்தமென்ன?" என்று அமைதியுடன் அன்னையை வினவினார். இது கேட்டுப் புலவர் கீழே குதித்தார், பிழையைப் பொறுத்தருள வேண்டினார். எல்லப்பரிடம் திரும்பிச் சென்று தமிழுணர்ச்சி சர்க்கரையிடத்தில் வளர்த்துள்ள பொறுமையின் பெருமையை எடுத்துக் கூறினார்.

மனுநீதி கண்ட மாபெரும் அரசன் வரலாறு நமக்கெல்லாம் தெரிந்ததே. தமிழுணர்ச்சியால் ஊக்குவிக்கப்பட்ட அந்தச் சோழ மன்னன் எவரும் செய்யத் தயங்கும் சீரிய செயலைச் செய்து காட்டினான். கன்றை இழந்து அலறிய தாய்ப் பசுவிற்காகத் தன் குழந்தையைத் தேர்க் காலில் செலுத்த அவனுக்கு உதவியது இப் பண்புள்ள தமிழுணர்ச்சியே.

### தமிழுணர்ச்சி அழிந்து விட்டதா?

இவ்வாறு பண்டைத் தமிழகத்தில் பலவாறுகச் சிறப்புற்றிருந்த தமிழுணர்ச்சி, இன்றும் தமிழரிடையே தன் ஆதிக்கத்தைச் செலுத்துகிறதா? அல்லது மடிந்து மறைந்து விட்டதா? இந்தக் கேள்வியைத் தமிழராகிய நாம் நம்மை நாமே கேட்டுக் கொள்ளும் நிலையேற்பட்டிருக்கிறது. ஆழ்ந்து சிந்தித்தால் இதற்குரிய விடை கிடைத்து விடும். ஆம் தமிழுணர்ச்சி அழிந்துவிடவில்லை. இன்றும் அது அணையா விளக்காகத் தமிழரிடையே சுடர் விடத்தான் செய்கிறது. ஆனால் அது குன்றின் தீபமாக இல்லாது, குடத்துள் விளக்காக ஒளி மங்கிச் சுடர் விடுகிறது என்ற பதில் எமக்குக் கிடைத்துவிடும். ஏன் இன்று தமிழன் பல இன்னல்களைப் பொறுமையுடன் அனுபவித்துக் கொண்டிருக்கிறானே, அது எதனால்? ஆனூர்ச்சர்க்கரை போன்றோரிடத்தில் காணப்பட்ட தமிழுணர்ச்சியின் சாயலாம் பொறுமை அவனிடத்தில் இன்றும் காணப்படுவதாலேயே. இவ்வுணர்ச்சி உண்மையாக இன்றும் இருக்குமானால் தமிழன் எதற்காக மகத்தான செயல்கள் புரியத் தயங்கும் கோழையாக மாறி நிற்க வேண்டும்?என்ற கேள்வியும் தொடர்ந்து எழுகிறது.

சூழ்நிலையும், மாறுபட்ட கருத்துக்களும், வாழ வழியில்லையே என்ற ஏக்கமும், அவனுள் உள்ள உணர்ச்சியின் ஒலியை மங்கச் செய்து விட்டதுதான் இன்றைய தமிழரின் உறக்கத்திற்குக் காரணம். இவ்வுணர்ச்சி திரும்பவும் ஒளி பெற வேண்டுமாயின், அது வாழ அடிப்படைக் காரணமாக அமையும் தமிழ் சிறப்புற்று வாழும் வழி வகை

(13-ம் பக்கம் பார்க்க)

## சங்கப் பலகை

### எழிலி

வெளியீடு: பாலன்வெளியீடு, செட்டிகுளம்.
விலை: ஒரு ரூபாய்.

காலத்துக்கும் கருத்துக்கும் ஏற்ற வகையில் எழுகின்ற இலக்கியங்களே வாழ்கின்றன; வளம் பெறுகின்றன. மக்கள் மத்தியில் காணப்படும் பிரச்சனைகள் அல்லது சிறப்புற்றிருக்கும் பழக்க வழக்கங்களை அடிப்படையாகக் கொண்டெழும் இலக்கியங்களே மக்களைக் கவருகின்றன. இந்நிலைமையைத் தமிழ் இலக்கிய வளர்ச்சியின் கண் நாம் காண முடிகின்றது.

கவிஞர் பஞ்சாட்சரத்தினுடைய காவியமான 'எழிலி' பண்பாடு, வழக்குத் தவறாமல் எழுந்துள்ளதென்றே கூற வேண்டும். காலத்துக் கேற்ற பிரச்சினையை நிலவளத்துடன் பின்னி வாழ்க்கை முறையை கூடியளவு பயன்படுத்தி இச் சிறிய காவியத்தை இயற்றியுள்ளார்.

கவிஞரால் கைக் கொள்ளப்பட்டுள்ள காவியக் கரு சாதாரணமாகவே இருந்த போதிலும் நமது தமிழ்ப் பண்பாட்டுக் கேற்ற வகையில் பெண்மையின் சிறப்பை இயன்றவரை திறம்படக் கூறியுள்ளார்.

காவியக் கதாநாயகியின் தோற்றம் தூய செயலில் பிறப்பதுபோன்று மறைவும் தூய்மையான உள்ளக்கிடக்கையை ஒட்டியே ஏற்படுகின்றது.

இயல்பான எளிய நடையில் பிறப்பையும் இறப்பையும் காவியத்தில் கண்டு நுகர முடிகின்றது. கவிதைக்கேற்ற கற்பனைச் சிறப்பும் இயற்கை வர்ணனை மூலம் இதயக் குமுறலும் சொல்லப்பட்டிருக்கும் முறைமைதாராதரம் பெற்ற கவிஞனுக்கே கைவரக் கூடியது. 'எழிலி' காவிய நூலின் மூலம் முழு வெற்றியடையாவிட்டாலும் முயற்சிக் கேற்ற பரிசு கவிஞருக்கு உண்டென்றே கூற வேண்டும்.

மரபு தவறாத புதிய நடை அவருடைய தனித் திறமைக்கு ஒரு எடுத்துக்காட்டாகும். பழமைக்கும் புதுமைக்கும் ஓர் பாலம் போல் ஒரு சாரருடைய விருப்பு வெறுப்புக்கும் ஆளாகாமல் பழமையும் புதுமையும் கலந்த நடையில் காவியத்


(13-ம் பக்கம் பார்க்க)


இன்றைய அதிசயமான பைப் எஸ்-லொன்

உங்கள் வீட்டில், ஸ்டோரில், அல்லது தொழிற்சாலையில் தண்ணீர் வசதி அமைத்துக்கொள்ளும் உத்தேசம் உங்களுக்கு உண்டானால் எஸ்-லொன் பைப்புகள் மிகக் குறைந்த செலவில் மேலானபயன் தரவல்லவை என்பதை மறந்து விடாதீர்கள். இவை வளையக்கூடியவை, கனக்குறைவானவை, நேரத்தையும் கூலியையும் மிச்சப் படுத்தும் - இணைப்பதும் வெகு சுலபம்-நீங்களே செய்யலாம். எஸ்-லொன் உக்காது கறையானை அண்டவிடாது, அரிப்பு ஏற்படுத்தாது, இருமி, கறள், அழுக்குப்படல எதிர்ப்புடையது.

ஆகவே பணத்தை மிச்சம் பிடிக்க வேண்டுமானால், உங்கள் எஸ்-லொன் பைப் தேவைகளை எந்த பெரிய ஹார்ட்வெயர் [illegible] இன்றே வாங்குங்கள்.

[illegible] லிமிட்டெட்
மகாராஜா கட்டிடம், பேங்ஷால் வீதி, கொழும்பு-11.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடகப் போட்டி முடிவுகள்

நடந்த ஆண்டு நடைபெற்ற தமிழ் நாடகங்களில் சிறந்த நாடகங்கள் எவை? பங்குபற்றியவர்களில் சிறந்த கலைஞர்கள் யார்? என்பதனை இரசிகர்களின் வாக்குகளைக் கொண்டே வரிசைப் படுத்தியுள்ளோம். முதல் மூன்று இடங்களையும் கைப்பற்றிய நாடகங்களையும் கலைஞர்களையும் மட்டுமே இங்கு தருகிறோம்.

இங்கு தரப்படும் தீர்ப்பு சுதந்திரனின் தீர்ப்பாகாது என்பதை மீண்டும் வலியுறுத்த விரும்புகிறோம். இரசிகர்கள் அனுப்பிவைத்த வாக்குச் சீட்டுகளைக்கொண்டே இத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந் நாடகப்போட்டியினை வெற்றிகரமாக நடாத்தி முடிப்பதற்கு உதவிய இரசிகர்களனைவருக்கும் எமது இதயம் கலந்த நன்றி உரித்தாகுக.

பரிசளிப்பு விழாவும், கலைவிழாவும் நடைபெறவிருக்கும் திகதி விரைவில் வெளியாகும்.

## முடிவுகள்

நாடகம்:

| | |
|---|---|
| விந்தியத்தின் விளிம்பிலே | —572 |
| சிங்கமுழக்கம் | —536 |
| ஸ்புட்னிக் சுருட்டு | —451 |

நடிகர்:

| | |
|---|---|
| லடீஸ் வீரமணி | —428 |
| இராஜேஸ்வரன் | —417 |
| வரணியூரான் | —392 |

நடிகை:

| | |
|---|---|
| சந்திரகலா | —842 |
| கிருஷ்ணகுமாரி | —628 |
| இராஜேஸ்வரி சண்முகம் | —414 |

நகைச் சுவையாளர்:

| | |
|---|---|
| சி. ஆறுமுகம் | —571 |
| ராஜரத்தினம் | —436 |
| எஸ். எச். ஹுசைன் | —328 |

கதாசிரியர்:

| | |
|---|---|
| வெற்றிவேந்தன் | —635 |
| கே. எம். வாசகர் | —628 |
| சி. சண்முகம் | —612 |

இயக்குநர்:

| | |
|---|---|
| முத்தழகன் | —481 |
| ஆர். ஜெகசோதி | —469 |
| எஸ். இராஜரத்தினம் | —418 |

தயாரிப்பாளர்:

| | |
|---|---|
| எஸ். சண்முகநாதன் | —745 |
| அறிவொளி-கலை அரங்கம் | —689 |
| திருப்பாலை-நாடகமன்றம் | —681 |

வெளியூர் நாடகப்போட்டி முடிவுகள் அடுத்தவாரம் தொடரும்.

—போட்டி ஆசிரியர்.




# 'பீஸ் சால் பாட்'

(இந்தி)

சரியாக இரவு 9-30—அமைதியைக் குலைக்கும் ஓர் அபலையின் அழுகுரல்—சிந்தனையைக் கிளறும் சதங்கை நாதம்—தேனினுமினிய கானம்!

ஜமீன்தார் ஒருவரின் வீட்டில் நடைபெறும் தினசரி நிகழ்ச்சிகளில் இவையும் உள.

இக் குழப்பங்களை விளைவிக்கும் இம் மங்கை யார்? பெண்ணா? பேயா? காரணமென்ன?

முன்னைய ஜமீன்தார் ஒருவரின் காமப் பசிக்கு இரையாகி உயிர் நீத்த மங்கையொருத்தியின் ஆவி இந்த ஜமீன் குடும்பத்தை வேருடன் அறுக்க முயலுகிறாள் என்று கிராமமே நம்பிற்று.

ஜமீனின் கடைசி வாரிசான குமார் வெளி நாட்டிலிருந்து வருகிறான், தன் பூர்வீக உரிமையை நிலை நாட்டவும், கொலைகளுக்கு காரணத்தை அறியவும்—முனைகிறான். நடைபெறும் சம்பவங்கள் யாவும் முன்னைய ஜமீந்தார்களின் முடிவையே குமாருக்கும் . சுட்டிக்காட்டின.

இந்நிலையில் கவிராஜின் மருமகள் ராதாவின் மேல் காதல் கொள்கிறான் குமார். ஒரு பெண்ணின் வஞ்சம் ஒருவனை நிர்மூலமாக்குமானால் மற்றொரு பெண்ணின் தூய காதலும் அச்சாபத்தைத் தகர்த்தெறியலாம்



என்று சங்கல்பம் செய்கிறாள் அவன் காதலி ராதா.

இத்தனை புதிர்களுக்கும் யாம் விடை பகர்ந்தால் படத்தின் விறுவிறுப்பும், மர்மமும் வீணாகிவிடாதா? ஆனால் ஒரு சில கதாபாத்திரங்களின் உருவ நெருக்கத்தினால் ஏற்படும் குழப்பங்களைத் தவிர்த்திருக்கலாம் என்பது நம் அபிப்பிராயம்.

தொடக்கமுதல் முடிவுவரை திகைப்பூட்டும் சம்பவங்களும், புரியாத மர்மங்களும் அடங்கியுள்ள சிறந்த கதை. மிகையென்று கூற முடியாவிட்டாலும் தரமான நடிப்பு. ஒலி, ஒளி, பின்னணி, புகைப்பட நுணுக்கம் ஆகியன நன்கு கையாளப்பட்டுள்ளன. திரைக்குயில் லதா மங்கேஷ்காரின் சிறந்த பாடல்கள் அமைந்த இப்படம் மொத்தத்தில் யாவரும் பார்க்க வேண்டியதோர் ஹிந்திச் சித்திரம் என்பது எம் முடிவு.

—இரத்தினம்.



தென்னகத்தில் நூறு நாட்களுக்கு மேல் வெற்றி முழக்கமிட்டு வரும் ஸ்ரீதரின் 'காதலிக்க நேரமில்லை' வர்ணப்படம் விரைவில் சினிமாஸ் திரைகளுக்கு வருகிறது அப்படத்தில் காஞ்சனாவும், முத்துராமனும் இப்படி குஷியாக 'ரொக் அன்ட் ரோல்' ஆடுகிறார்கள்.

## நடக்கவிருப்பவை

### முத்தமிழ் விழா

இலங்கைச் சட்டக் கல்லூரி தமிழ் மன்றத்தாரின் 'முத்தமிழ் விழா' 21-6-64 ஞாயிறு மாலை 5-30 மணிக்கு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறுகிறது. "தமிழில் வழக்குரைத்தல் சாத்தியமா?" என்ற தலைப்பில் பட்டி மன்றம் நடைபெறும்.

செல்வி கௌரீஸ்வரி கனகரத்தினம்,இன்னிசை வழங்குகிறார். செல்வி பத்மினி தகநாயக்கா நடன விருந்து அளிக்கிறார். இறுதியில் 'உண்மையே அன்றி வேறில்லை' என்ற நாடகமும் நடைபெறுகிறது.

### 'அவமானம்'

திங்கட்கிழமை (22-6-64) அச்சுவேலியில் கொழும்பு ராஜ் நகைச்சுவை நாடக மன்றத்தினர் தயாரித்து அளிக்கும் 'அவமானம்' என்னும் நாடகம் நடைபெறும். இதைத் தயாரித்து அளிப்பவர் திரு. எஸ். ராஜரத்தினம்.

### துரோகி

நடமாடி எழுதித் தயாரித்த 'துரோகி' நாடகம் விண்ணொளி மன்றச் சிறுகதைத் தொகுப்பு நூல் வெளியீட்டு நிதிக்காக திருகோணமலையில் 28-6-64 ல் அரங்கேற்றப் படவிருக்கிறது.



கொழும்பு லிபேர்ட்டி திரைக்கு வரும் வார்ணர் பிரதர்ஸ் 'எவ் பி ஐ கோட் 98' (FBI CODE 98) என்ற ஆங்கிலப் படத்தில் ஜாக்கெலி, ரே டான்டன் இருவரும் தோன்றும் உணர்ச்சிகரமான கட்டம்.

# ம. பொ. சிக்கு படத்தில் நடிக்க பெரும் ஆசை?

"சினிமா நடிகர்களுக்கு இன்று ஏற்பட்டு வரும் மகத்தான மதிப்பைக் கண்ணுறும்போது எனக்கும் சினிமாவில் நடிக்க ஆசை ஏற்படுகிறது." என்று தமிழரசுக் கழகத் தலைவர் திரு. ம. பொ. சிவஞான கிராமணியார் கூறினார்.

கடந்த 7ம் திகதி வாசவன் எழுதிய 'திருமண வேலி' என்ற நாடகம்



திரு. ம. பொ. சி.

சென்னை ராமக்கிருஷ்ண கலாமன்றத்தினரால் அரங்கேற்றப்பட்டது. இந்த நாடகத்துக்குத் தலைமை தாங்கிய ம.பொ. சி மேலும் கூறும்போது: "அரசியல் வாதியாகிய நாங்கள் மேடையில் நடிக்கிறோம். நடிகர்கள் அரங்கத்தில் நடிக்கிறார்கள். அவ்வளவு தான் வித்தியாசம். நடிக்கத் தெரியாத எவரும் மேடையில் ஏற முடியாது.

பலர் நாடக மேடையையும் சினிமாவையும் சொற்பொழிவு மேடைகளாகப் பயன் படுத்தி விடுகின்றனர். அடுக்கு வசனங்களை அள்ளி வீசுவதே கலையெனப்பட்ட காலம் போய்விட்டது. இப்பொழுது நடிப்புக்கு மேன்மை ஏற்பட தொடங்கி விட்டது. நல்லதாயிற்று" என்று கூறினார்.

## நடந்தவை

### எம். ஜி. ஆர். மன்றம்

எம். ஜி. ஆர். மன்ற நடப்பு வருட நிர்வாகிகள்:-

போஷகர்: திரு. சி. கே. சண்முகம், தலைவர்: திரு. தாமரைச் செல்வன், துணைத் தலைவர்: செல்வி ஆமீனு பேகம், பொதுச்செயலாளர்: திரு. கம்பனைதாசன், தலைமை நிலையச் செயலாளர்: திரு. அழகேசன், பொருளாளர்: திரு. அன்பெழில். திருவாளர்கள், சிக்கந்தர், மணிமாறன், மில்டன், முருகேசன் ஆகியோர் ஆட்சிக் குழுவினராகத் தெரிவு செய்யப் பட்டனர்.

**நடந்தவை**
**நடக்கவிருப்பவை**
கலைப்பூஞ்சோலை,
த. பெ. இலக்கம் 1183,
கொழும்பு-12.

# ஏரியில் சவாரி செய்யும் நேருஜி

## தமிழ் நாடு தகவல் இலாகா தயாரித்துள்ள படம்

ஒரு பெரிய ஏரியிலே கன வேகமாக ஒரு மோட்டார் படகு ஓடுகிறது. படகிலிருந்து இரு நீளமான கயிறுகள் பின்புறமாக இழுபடுகின்றன. கயிற்று முனையில் ஓர் உருவம்—நமக்குத் தெரிந்த உருவம் வலுலாகவமாகச் சவாரி செய்வதைக் காண்கிறோம். நீச்சல் பலகைக்குமேல் நின்று கொண்டிருந்த அவ்வுருவம் திடீரெனக் கையைவிட்டு விடுகிறது. ஐயோ என்று நாம் அலறிப்புடைக்கிறோம். நீருள் மூழ்கிய அந்த உருவம் எதுவுமே நடக்காதது போல் ஒரு சிறு புன்னகையுடன் மேலே யேறுகிறது.

முரட்டுக் குதிரை ஒன்றைத் தட்டிக் கொடுத்துவிட்டு அந்த உருவம் குதிரைச் சவாரி செய்கிறது.

**நமது சென்னை நிருபர்**

நமக்கு அந்த வேகத்தைப் பார்த்தே பதட்டம் ஏற்படுகிறது.

பல நாட்டுப் பிரமுகர்கள் வருகிறார்கள். அந்த நபருடன் கைகுலுக்குகிறார்கள். உளவளாவி மகிழ்கிறார்கள். வித விதமான உடைகளையும் அணிந்து காட்சி தருகிறது அந்த உருவம்.

பல மாடிகள் கொண்ட தனது அலுவலக மாடிப் படிகளைத் தாவி ஏறி, காலை 8 மணி முதல் இரவு 2 மணி வரை அலுவல்களைக் கவனிக்கிறார், குழந்தைகளுடன் கொஞ்சி விளையாடுகிறார்.

இத்தகைய புதுமைகளையெல்லாம் செய்து விடும் விந்தை மனிதர் வேறு யாருமல்ல. பண்டிதர் நேருஜி தான்.

'நேருஜியின் வாழ்க்கை வரலாறு' என்ற தலைப்புடன் தமிழ் நாட்டு அரசின் தகவல் இலாகாவின் திரைப்படப் பிரிவு ஓர் திரைப்படத்தைத் தயாரித்துள்ளது. இப் படத்தில்தான் நேருஜியை மேற்படி கட்டங்களில் காண முடிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவாடி உரிமைபெற முடியாது

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

றியற்றி வண்டமிழர்க்குத் தடை போடப்பட்டுள்ளது. அந்த அழகோடுதான் இலங்கையில் நடைபெற்று வருகின்றது சனநாயக ஆட்சி. இழைக்கப்படும் அநீதிகளை எதிர்த்துக் கேட்டால், அது இனத்துவேசம், வகுப்புவாதம் என்று வர்ணிக்கப்படுகின்றது. எதிர்ப்புக்குரல் எழுப்பக் கூடாது என்ற எண்ணத்தோடு அவிழ்த்து விடப்பட்டுள்ளது இராணுவப்படை. இவைகளையெல்லாம் கண்டு அஞ்சிவிடாது துஞ்சத் துணிந்த தமிழினம் மிஞ்சிய வீராவேசத்தோடு புரியும் அறப் போராட்டத்தையுங் கூட அழித்துவிடக் கங்கணம் கட்டுகின்றனர் ஆட்சியாளர்.

### உறவாடி உரிமை பெற முடியாது

இலங்கை வாழ் இந்தியத் தமிழருக்கு இடப்பட்ட அடிமைத் தளை இன்னுமே அகற்றப்படவில்லை. அடிப்படை உரிமைகள் எதுவுமேயின்றி அடிமைகளாக வாழும் இவர்களைப் பகடைகளாக வைத்துப் பணந் தேடியவர்கள் தான் அநேகம் பேர். இவர்கள் இழந்த உரிமைகளையெல்லாம் மீண்டும் பெறுவதற்குக் கிளர்ந்தெழுவார்களேயானல், வளந்தரும் வாழ்வுரிமைகளனைத்தும் வலியவே வந்து சேர்வது உறுதி. போராட்டமின்றி உரிமைகளைப் பெறலாமென்பது பகற்கனவு. இதற்குக் கடந்த காலங்களில் நடந்தேறிய சம்பவங்களே நமக்குச் சான்று கூறுகின்றன. ஆனல் 'போராடி உரிமைகளைப் பெற்று வாழ்வதைவிட, உறவாடி அடிமைகளாகவாழ்வதேமேல்' என்று, கூட்டங்களில் கூடி நின்று கூவிப் பிதற்றும் சில தலைவர்கள், கடந்த கால் நூற்ருண்டு காலமாக அடைந்த உயர்வுதான் என்ன என்ருல் பணமும் பதவியும், பட்டமும் பவிசும் தான் என்று மனந்திறந்து சொல்லலாம்.

### காங்கிரஸ் இயக்கங்களின் நிலை

"நாட்டில் அவமதிப்பும் தாணின்றி இழி செல்வத் தேட்டில் விருப்புமுற்ற" தலைவர்கள், தோட்டத்து மக்களைக் காட்டிக் கொடுத்துக்கொண்டே காலத்தை ஓட்டி வருகின்றனர். ஒருமித்து நின்று போராட்டத்தைத் தொடக்கிவிட்டால், அது உரிமைகளனைத்தையும் தருவித்து விடுமல்லவா? உரிமைகளை நாம் பெற்றுவிட்டால், அதையே சொல்லி உயிர் வாழும் பெரிய தலைவர்கள் எல்லாம் என்னவது? பிரஜாவுரிமைப் பிரச்சினையை அத்திவாரமாகக் கொண்டு கட்டப்பட்ட மாளிகைகள் தானே இந்தத் தொழிலாளர் காங்கிரசுகள். அத்திவாரமே யகற்றப்பட்டால் எத்தகைய நிலையையும் இந்த மாளிகைகள் என்பதை நாம் எண்ணிப் பார்க்கவும் வேண்டுமா?

### ஏமாற்று நாடகம் எத்தனை நாளைக்கு?

எனவேதான் தங்கள்— வருங்கால வாழ்வைப் "பாழடிக்கத்" துணியாது, வருமுன் காக்கும் முன் யோசனையுள்ள தன்னலங்கருதும் தலைவர்கள், இன்னல்களால் வருந்தும் மலையக மக்களை, இன்னமும் 'இருங்கள் இருங்கள்' என்று அமர்த்திக் கொண்டு வருகின்ருர்கள். உறவாடி உரிமைகளைப் பெற முடியாது என்ற உண்மையை இவர்கள் உணர்ந்துள்ள போதிலும், மறைவாகத் தம்முளவே வைத்துக்கொண்டு மலைநாட்டு மக்களை ஏமாற்றி வருகிருர்கள். இதை இன்னமும் புரியாத எம்மவரிற் சிலரும் ஏமாறத்தான் செய்கிருர்கள்.

மலையகமே உன் நிலையதனை நீ எண்ணிப் பார்ப்பது தான் எபோது? உறவாடி உறவாடி உரிமைகளைப் பறிகொடுத்த மலையகமே! இனியாவது போராடத் துணிவது எப்போது?

உன் நிலையை நீ உணர்ந்து, ஒன்றுபட்டு நின்று உயர்ந்த உள்ளமும் சுதந்திர் தாகமுங் கொண்ட தலைவர்களோடு சேர்ந்து, உரிமைப் போர் தொடுக்கும் போது தான் உன் நிலை மாறி உயர்வு பெறுவாய் என்பதை உறுதியாக நம்புவாயாக. வந்தித்து வந்தித்து வாழ்வைப் பறி கொடுத்தது போதும் வளமார் தமிழா! இனியாவது சிந்தித்துப்பார், தீர யோசனை செய். வீரச் செயலில் இறங்கு. வெற்றி நடை போடு. கடத்திக் கொண்டிருக்கக் காலம் போதாது. நடத்த வேண்டிய போராட்டத்துக்கு நடை போட வேண்டியது உனது கடன்.

வெற்றிப் போர் தொடுத்து, வீர சுதந்திரம் பெற்று மகிழ்ந்திடுவோம்.

'இதந்தரும் மனையின் நீங்கி,
இடர்மிகு சிறைப்பட்டாலும்,
பதந்திரு இரண்டும் மாறிப்
பழி மிகுந்திழிவுற்ருலும்
விதந்தரு கோடி இன்னல்
விளைந்தென்னை
அழித்திட்டாலும்
சுதந்திர தேவி தன்னைத்
தொழுதிடல்
மறக்கமாட்டேன்'.

—பாரதி.

## தமிழ் வாழ...

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் முதலில் அமைய வேண்டும்.

### தனிச் சிறப்பு

மூவாயிரம் ஆண்டுகளாகத் தமிழுக்கு எவ்வளவோ ஆபத்துகள் ஏற்பட்டிருக்கின்றன. படையெடுப்பாளரின் ஒவ்வொரு மொழியும் நாகரிகமும் தமிழ் மொழியோடு மோதியெழுந்திருக்கின்றன. ஆனல் தமிழ் பிழைத்திருக்கிறது. பாரசீகமும், கிரேக்கமும், முகலாயமும், டச்சும், பிரெஞ்சும், ஆங்கிலமும் தமிழோடு மோதியிருக்கின்றன என்ருலும் தமிழ் இன்றும் வெற்றியுடன் பவனிவந்துகொண்டு தான் இருக்கிறது. அதுதான் அதற்குள்ள தனிச் சிறப்பு. இந்தச் சிறப்பு நம் மொழிக்கு ஒரு காரணமுமில்லாமல் ஏற்பட்டு விடவில்லை.

தமிழர் தம்மிடையே நீங்காது கடைப்பிடித்த தமிழுணர்ச்சி அவர்களை நிதானமாக எதிர்ப்புக்களைச் சமாளிக்க அவர்களுக்கு உதவியிருக்கிறது. இன்று நம் மொழிக்கு எதிரி நம் நாட்டிலேயே தோன்றியுள்ளது. இதனை எதிர்க்க வல்ல ஒரே ஒரு ஆயுதம் தமிழுணர்ச்சி. அந்த விளக்கின் திரியைத் தமிழராகிய நாம் தூண்டிவிட்டுவிட்டால், எம் மொழி இந்தப் புது எதிரியையும் வெற்றிகரமாகச் சமாளித்து விடும் என்பதில் ஐயமில்லை.

## சங்கப்பலகை

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

தை அமைத்திருக்கும் பாணியும் தங்கு தடையற்ற முறையும் குறிப்பிடத்தக்கவை. ஓசை நயத்துடன் உணர்ச்சிக் கலப்புக் கொண்டதாக உள்ள இக்காவியத்தில் 'ஓடாதே இன்பமே!', 'கனவில் வந்த காரிகை' போன்ற பகுதிகள் சிறப்பாகக் கூறக் கூடியவை.

ஒருசில பகுதிகளில் சிறு சிறு முறிவு நெளிவுகள் காணப்பட்ட போதிலும், அவருடைய முதல் முயற்சியென்பதால் நாம் அவற்றை மறந்து விடுகின்ரேம்.

கருப்பொருள் சாதாரணமாக இருக்கலாம். ஆனல் நயம்பட கவித்துவத்திறத்தினல் சிறந்த இலக்கியப் படைப்பாக ஆக்கும் வழக்கம் உயர்ந்த கவிஞருடைய தன்மையாகும். நமது முன்னேருடைய இலக்கியங்கள் பலவும் இத்தன்மையானவையே.

கவிஞர் பஞ்சாட்சரத்தினுடைய இந்தப் படைப்பு உயர்ந்த தரமுடையதென்று கூற முடியாவிட்டாலும் வளர்ந்துவரும் கவிதை இலக்கியத்துக்கு ஒரு அடிக்கல் என்று துணிந்து கூறலாம். கற்பனை வளத்துடன் இடைஇடையே காணப்படும் சிறந்த கவிதைகளால் பொலிவு பெறும் இக்காவியம், படிப்பவர் உள்ளத்தை ஈர்த்து, உள்ள குறைகளைப் பெரிதுபடத் தோற்ருமல் செய்கின்றன. கவிஞருடைய கன்னிப்படைப்பான 'எழிலி' காவியத்தை ஒவ்வொருவரும் வாங்கிப் படிப்பதன் மூலம் தரமான கவிஞர் ஒருவரை வளர்த்தவர்களாவோம்.

ஈழத்தின் பிரபல கவிஞர்கள் பலருடைய அணிந்துரையுடன் வெளிவந்திருக்கும் இச்சிறிய காவியம் நூலை சிறந்த முறையில் வெளியிட்டு உதவியுள்ள பாலன் வெளியீட்டு நிலையத்தினருடைய முயற்சி போற்றக் கூடியதே. ஒரு முறைக்கு இரு முறை படித்துச் சுவைப்பதற்கேற்ற இக் காவிய நூலை எல்லோருமே கட்டாயமாகப்படித்துப்பார்க்க வேண்டும்.

—கலைச் செல்வி.

## கல்லூரிகளில் அறிவியற் கூடம்

கல்லூரிகள் அரசாங்க உடைமையாக்கப்பட்ட பின்னர், கல்லூரிகளில் உள்ள அறிவியற் கூடங்கள், கலையியற் கூடங்கள் கவனிக்கப்படாதனவாகி வருகின்றன. கல்லூரிகள் தனித்தியங்கும் காலங்களில் பல ஆயிரம் ருபாய் செலவிட்டுக் கட்டப்பட்ட இக் கூடங்கள் இன்று அரசாங்கத்தால் பராமரிக்க முடியாத நிலை தோன்றியுள்ளதாம். மேலும் அறிவியற் கூடங்களைப் பராமரிப்பதற்கு அரசாங்கம் வழங்கும் வருட மானியம் நூறு ருபாவுக்கும் குறைந்ததாக உள்ளதாம்.

அரசாங்கம் வழங்கும் சில ருபாக்கள் மானியத்தைக் கொண்டு அறிவியற் கூடத்திற்கு இரசாயனப் பொருட்களை வேண்டவோ, அல்லது பழுதடைந்த உபகரணங்களைச் சீர்செய்யவோ, உடைந்த உபகரணங்களுக்குப் பதிலாக புதிய உபகரணங்கள் வேண்டவோ முடியாத நிலையில் கல்லூரி முதல்வர்கள் திண்டாடுகிருர்களாம்.

கட்டைவேலி ஞானசாரியார் கல்லூரியிலுள்ள அறிவியற் கூடம், கல்லூரி தனித்தியங்கிய காலத்தில் அப்பகுதி மக்களின் உதவியுடன் 25,000ருபாய் செலவில் கட்டப்பட்டதாம். இப்பொழுது அக்கல்லூரி அறிவியற்கூடத்தை மாணவர்கள் உரிய முறையில் பயன்படுத்த முடியாது இருக்கிருர்களாம். அறிவியற்கூடத்திற்குவேண்டிய இரசாயனப் பொருட்களோ, உபகரணங்களோ, கல்லூரி அரசாங்க உடைமையாக்கப்பட்ட பின்னர் புதிதாக வழங்கப்படவில்லையாம். இக்கல்லூரி அறிவியற் கூடத்திற்கு அரசாங்கம் கொடுத்திருக்கும் மானியம் ஐம்பது ருபாவுக்கும் குறைவாக உள்ளதாம்.

## தேர்தலை...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பிடத்தக்கது. இவ்வாரம் வெளியான சோவியத் சார்புள்ள கொம்யூனிஸ்ட் கட்சியின் சிங்கள வாரப் பத்திரிகையான 'மவ்பிம' கூட்டு அரசாங்கத்தைப் பற்றி ஒரு சொல் கூட, பிரசுரிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது)

# சமுதாய மாற்றத்திற்கு....

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

அனுப்பிக் கொண்டு சிலர், நெஞ்சு நிமிர்த்தி 'ஆகா ஊகூ' எனப் பெரியகடை முடுக்குகளில் நின்று இரவு பகலாகப் பேசித் தீர்த்த நேரம், தனது கதை பிரசுரம் பெறுதற்கு, பத்திரிகை ஆசிரியருக்குக் காவடி தூக்கி, லஞ்சம் கொடுத்து வந்த எழுத்தாள பூபதிகளை யானறிவேன். இன்றும் இப்படியான எழுத்தாள பூபதிகள் பலரைக் காணலாமே!

### சூழ்நிலை

என்னைப் பொறுத்தவரை எழுதிய கதையை யனுப்புவேன். பிரசுரமானலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, கவலை கிடையாது. ஆனல் இரண்டொரு கதை தவிர மற்றவை பிரசுரம் பெற்ற கதைகளே யான் எழுதியவை என்று பெருமைப் பட முடியும். சுதந்திரன், ஈழகேசரி, தினகரன் முதலிய பத்திரிகைகளில் அக்காலங்களில் அடிக்கடி எழுதினேன். எழுத எழுத, எழுத வேண்டுமென்ற அவா மிகக் கொண்டேன். அப்போது, இன்று கதையோ, கட்டுரையோ எழுதாது விமர்சனம் எழுதும் விமர்சனப் புலி(லி)கள் கிடையாது. முற்போக்கு, பிற்போக்கு, நற்போக்கு யதார்த்தம் எனக் கூறி ஆளுக்காள் முதுகு சொறியும் விவகாரம் கிடையாது. பட்டங்கள், விழாக்கள், மணிப் பட்டங்கள் கிடையா. மவித பலவீனத்தைக் கிளறி மகிழும் எழுத்தாளர்கள் சூழ்ந்த இக்காலத்தை விட அக்காலம் இலக்கியம் வாழ்ந்தது எனக் கூறுவதில் கூட அர்த்தம் இருக்கிறது இன்று இலக்கியமா வளர்கிறது? ஐயகோ! ஈழமே!.........!

### பெருமை


அன்று எழுத்தாளன் என்பதில் பெருமைப்பட்டேன். இன்று பெருமைப்பட என்ன உண்டு? கூழ் முட்டை எறிபவன் எழுத்தாளன்...பெரியகடை [illegible]யில் குடித்துவிட்டு [illegible] போடுபவன் எழுத்தாளன்... சண்டித்தனம் செய்பவன் எழுத்தாளன்...சீச்சி! எழுத்துலகம் தூய்மையிழந்து விட்ட காலமிது!

பெருமை மிக்க அக்காலத்தில் எழுதினேன். முதல் கதையையே, பலரை எழுத்தாளராக்கிய சுதந்திரனில் எழுதினேன் என்ற பெருமை என்றும் என்னை எழுதத் தூண்டச் செய்யும்.........

### ஏன் எழுதுகிறேன்?

ஏன் எழுதுகின்றேன்... இக் கேள்வியைக் கேட்டால் வரும் விடை என்ன? தன்னம்பிக்கையும், உயர் கொள்கைகளும் கொண்ட சமுதாயமாக எங்கள் சமுதாயம் மாற வேண்டும், எண்ணப் புரட்சி கொள்ள வேண்டும் என்ற ஆவலினல் எழுதினேன்.

இடைக்காலத்தில் பாட நூல்களுடன் முழு நேரத்தையும் செலவு செய்வதால் எழுத நேரம் இடைப்பதில்லை. பொருளாதார பலத்தைப் பாட நூல்கள் தருமே! ஆனல் எழுத வேண்டும் என்ற ஆவல் மடியவில்லை; தூண்டல் முன் போன்றே இருக்கின்றது.



பாட்டாளி முதல் பணக்காரன் வரை
எல்லோரும் புகைப்பது
கமலா பீடி
ஒரு முறை வாங்கி உபயோகித்தால் அதன் உண்மை விளங்கும்
கமலா ஸ்டோர்ஸ்,
நெ. 15, செட்டியார் தெரு, கொழும்பு-11
தொலைபேசி 3597—6522

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## சின்ன வயதில்...(11)

நடுநிசி, இரவு 2 மணியிருக்கும், உட்குவிந்த முகத்துடனும் அழுக்கேறிய உடலுடனும் நடந்துவருகிருள் ஒரு கிழவி. அவளுடைய ஏழ்மை அவளுடைய முகத்தில் தெள்ளெனத் தெரிகின்றது. அவள் பல நாட்கள் சுத்தம் செய்யாத அழுக்குப் படிந்த சேலையை உடுத்திக் கொண்டு கடையோரமாக வருகின்ருள். அவளுடைய கண்கள் தெருவில் தெரியும் ஒவ்வொரு கடை மீதும் செல்லுகின்றது. அந்த நள்ளிரவில் எல்லாக் கடைகளும் பூட்டப்பட்டிருந்தன. ஆனல் ஒரு கடையில் மட்டும் தான் ஒரு பலகைக்குள்ளால் வெளிச்சம் தெரிந்தது. அங்கு மெல்ல நடந்து செல்கிருள் அந்தக் கிழவி — அங்கு சென்று...

'தம்பி...!'

'என்ன பாட்டி?'

'அரை ருத்தல் சீனி தா தம்பி...!'

'இதோ தருகிறேன்.' என்று சொல்லிய சிறுவன் சீனியை அளந்து கொடுத்துவிட்டுத் தூங்கிவிட்டான். கிழவியும் சென்றுவிட்டாள்.

விடிந்தது. பறவைகள் எல்லாம் தமது குரல்களை எழுப்பின. காகம் காகா என்று கத்தியது. சேவல் கொக்கரக்கோ, கொக்கரக்கோ என்று கூவியது. கோயில் மணி 'டாங்! டாங்!' என அடித்தது. அந்தக் கடைக்காரப் பையன் நித்திரை விட்டு எழும்பித் தனது கண்களைத் திராசின் மீது செலுத்துகின்ருன். அதற்குள் கால் ருத்தல் படி மட்டும் கிடக்கக் கண்டு மனம் வருந்தி மிகுதிச் சீனியையும் கொண்டு புறப்பட்டு தேடித் தேடி அலைந்து கடைசியில் நண்பகல் 12 மணியளவில் அக்கிழவியின் குடிசையை அடைந்து, மிகுதிச் சீனியையும் கொடுத்து அக்கிழவியிடம் மன்னிப்புக் கேட்டான்.

அந்தப் பையன் யார் தெரியுமா?

அவன்தான் அமெரிக்காவில் அடிமைத் தனத்தை ஒழித்த ஆப்ரகாம் லிங்கன்.

—காவலூர் சிவகாருண்யம்.

## மருமகன் வாழ்த்து

சென்ற சில மாதங்களாக 'வளர்மதி' சுதந்திரன் மாணவர் மன்றம் சிறப்பாக வெளிவருகின்றதை யிட்டு மாணவ எழுத்தாளஞகிய நான் என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் அன்ரனி பெர்னுண்டோ எழுதும் 'புதுமைகள் பாரீர் பாரினிலே' என்ற பகுதி நல்லாக இருக்கின்றது. மூளைக்கு வேலை கொடுக்கும் கணக்குகளைப் பிரசுரித்து சரியான பதில் அனுப்பும் மாணவர்களுக்கு பரிசுகள் வழங்குவது வளர்மதி மாணவர் மன்றம் சிறப்புடன் விளங்கு மென்பதற்கு ஒரு எடுத்துக் காட்டாகும் என்று கூறி, வளர்மதி மாமாவுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வணக்கம்.

—காவலூர்க. சிவகாருண்யம்,
கரம்பன் மேற்கு,
ஊர்காவற்றுறை.

## ஹி...ஹி...ஹி! என்ன நடந்திச்சு?

மகன்:- அப்பா 1914-ஆம் ஆண்டில் என்ன நடந்திச்சு சொல்லு பார்ப்பம்?

அப்பா:- நான் பிறந்தேண்டா கண்ணு.

## என் முன் கடவுள் வந்தால்...

—சி. சிவசக்தி, பண்ணுகம்—

எனக்கு முன்னே கடவுள் வந்தால் எந்த நேரமும் திருவைந்தெழுத்தை இடைவிடாது எந்த இடர் வந்தபோதிலும் சொல்லும் வரத்தைக் கேட்பேன். செல்வம் வேண்டும் என்ற வரத்தைக் கேட்டால், கள்வர்கள் களவெடுத்துச் செல்வார்கள். இராசாவாக வரும் வரத்தைக் கேட்டால், அபாயமும் ஆபத்தும் சூழும்.

ஆகவே......

நான் அறிவையும், கடவுள் பக்தியையும், யார் கேட்டாலும் இல்லை என்ஞது கொடுக்கும் வல்லமையையும் கேட்பேன். நான் இறக்கும் பொழுது திருக்கரங்கள் இரண்டையும் தொழப்பண்ணி திருவைந்தெழுத்தை ஓதவும், கர்ணனைப் போல் யார் எதைக் கேட்டாலும் இல்லை என்ஞது கொடுக்கும் வரத்தையும் கேட்பேன்.

## புதுமைகள் பாரீர் பாரினிலே-(6)

—அன்ரனி பெர்னுண்டோ, இரிலப்பனே—

### கள்ளனைக் காட்டிக் கொடுக்கும் கருவி

சமீப காலத்திற் கார் திருட்டுகள் இங்கு பெருமளவில் நடைபெற்றுள்ளன. இப்பொழுது தெருவில் ஒரு காரை நிறுத்திவிட்டு அப்படி இப்படி நகரக் கூடப் பயமாக இருக்கிறது. எப்பொழுதும் சுறுசுறுப்பாகவிருக்கும் பட்டணத்தில் கூட பட்டப் பகலிலும் பயமின்றி ஒரு காரை விட்டுச்செல்ல முடியாமலிருக்கிறது. நன்ருகப் பூட்டிவிட்டோமே என்ற நம்பிக்கையில் ஒருவர் தன் காரை ஓரிடத்தில் நிறுத்திவிட்டு சாவியைப் பத்திரமாக வைத்துக் கொண்டு ஒரு கடையினுள் புகுந்து வெளியே வருவதற்குள் அவருடைய கார் மாயமாய் மறைந்துவிடும். கள்ளர்கள் கள்ளச் சாவி போட்டுத் திறந்து கார்களைக் களவாடிச் சென்றுவிடுகின்றனர். இப்படியான கார் திருட்டுக்கள் கார் சொந்தக்காரர்களுக்குப் பெருத்த தலைவலியைக் கொடுத்து வருகின்றன.

கார்கள் மலிந்து காணப்படும் நாடான கனடாவிலும் சில காலமாக இந்தத் தலைவேதனை இருந்து வந்தது. இந்த வேதனையைப் போக்குவதற்கு அங்குள்ள ஒரு நிறுவனம் (ஸ்தாபனம்) எடுத்துக்கொண்ட முயற்சியின் பயனுய், கள்ளனைக் காட்டிக்கொடுக்கும் கருவியொன்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

இந்தச் சிறிய கருவி 5 அங்குல நீளமும் $3\frac{1}{4}$ அங்குல அகலமும் கொண்டது. இதைக் காரினுள் ஓரிடத்தில் பொருத்தி, கம்பிகளைக் காரின் முன் விளக்கோடும், 'ஹார்ன்' உடனும் இணைத்து விட வேண்டும். இக்கருவியை இயக்கும் விசையைக் காரின் உள்ளேயோ வெளியிலோ எங்கு வேண்டுமானுலும் பொருத்தலாம்.

திருடன் அல்லது திருடனுக இருக்கக் கூடிய ஒருவன் காரைத் திறக்க முயலும்போது உண்டாகும் மிகச் சிறு அசைவு கூட இக் கருவியை இயக்குவதற்குப் போதுமானதாகும். இவ்வாறு அசைவினுல் இக் கருவி சுமார் பதினைந்து விநாடிகள் காரின் 'ஹாரனை' சப்திக்கும். சில நிமிடங்கள் அல்லது சில மணி நேரம் கழித்து மீண்டும் திருட முயன்ருல், அக் கருவியும் சளைக்காது இயங்கித் தன் கடமையைச் செய்யும். 'ஹார்ன்' சத்தம் கேட்டுத் திருடன் பறந்துவிடுவான்; கார் சொந்தக்காரன் எங்கிருந்தாலும் தன் காரின் 'ஹார்ன்' சப்தத்தை அடையாளம் கண்டு கொண்டு ஓடி வந்துவிடுவான். கார் காப்பாற்றப்பட்டுவிடும்.

கனடா உற்பத்தி செய்யும் இந்தப் புதுமையான கருவி உலக நாடுகள் பலவற்றில் இப்போது பாவனைக்கு வந்துள்ளது. விரைவில் [illegible] போல் தெரிகிறது. கார் [illegible]

## சௌக்கியமா?

கடன் கொடுத்தவர்:- எப்படி சார் சௌக்கியமா இருக்கிங்களா?

கடன் வாங்கியவர்:- இவ்வளவு நாளும் சௌக்கியமாகத்தான் இருந்தேனுங்க. நீங்க வந்தப்புறம்தான் சௌக்கியமெல்லாம் போயிடிச்சு!

அனுப்பியவர்:-

ஜெ. திருநாவுக்கரசு,
பதுளை.

தொடர் கதை:

## சோலை மண்டபம்

—'மாவிட்டபுர ஆனந்தன்'—

(7)

மனம் 'திக் திக்' என்று அடித்துக்கொண்டிருந்தது. 'எங்கள் ஐவரையும் தந்திரமாக இங்கே அடைத்துவிட்டுப் போய்விட்டார்களே அந்தச்செவ்வாய் மனிதர்கள். இந்த இருட்டறையிலிருந்து நாங்கள் எப்படி வெளியேறுவது? எமது எதிர்காலம் என்ன? சொல்லுங்கள்...மிஸ்டர் எட்வர்ட்'— —மெல்லிய குரலிலே கேட்டேன் நான். எனது விஞவுக்கு எந்த விடையும் கிடைக்கவில்லை. எங்கும் ஒரே மௌனம்! எங்கும்ஒரே இருள்! இரவு, பகல் என்று வித்தியாசம் தெரியவில்லை; காலை, மாலை என்று வேறுபாடு காண முடியவில்லை.

ஆம்; எங்களுக்கு எந்த நேரமும் இரவாகத்தானிருந்தது.

நேரம் போகப் போக வயிறு 'கடிக்க' ஆரம்பித்தது. தாங்க முடியாத பசி— —தாகம்! 'இது தானு நரக வேதனை?' என் மனதுக்குள்ளேயே கேட்டுக்கொண்டேன். பூவுலக இரவு பகல் கணக்கின்படி, மூன்று இரவுகளும் மூன்று பகல்களும்— —அதாவது மூன்று தினங்கள்—கடந்துபோயிருக்குமென்றுஊகிக்கிறேன். இருட்டறையின் வெளியேயிருந்து ஒரு குரல் கேட்டது.

'கேளுங்கள் நெட்டைமனிதர்களே! உங்களுக்கு உணவு வேண்டுமா?'—நாங்கள் எவரும் பதிலளிக்க முன்வரவில்லை. குரல் இரண்டாவது முறையும் கேட்டது. நாஞ் மேலும்பேசாதிருக்க விரும்பவில்லை.

'ஆம்; எங்களுக்கு நல்ல பசி!'

'நல்ல பசியா? மிகவும் நல்லது. உங்களுக்குநான்உணவு தருவேன். ஆனுல் ஒரு நிபந்தனை.'

'என்ன அது?'--ஆவலுடன் கேட்டேன்.

'இதோ, இங்கேயுள்ள துவாரத்தின் வழியாக உங்களிடமிருக்கும் ஐந்து துப்பாக்கிகளையும் போட்டுவிட வேண்டும். அவ்வளவுதான்.'

நிபந்தனைக்கு எங்களைக் கட்டுப்பட வைத்தது பசி. ஐந்து துப்பாக்கிகளையும் வெளியே போட்டோம்.

மறுகணம்...கதவு திறந்தது! ஒருவன் உணவும் நீரும் கொண்டு உள்ளே வந்தான். எங்களுக்கோ கடவுளைக்கண்டதுபோல இருந்தது. அவ்வளவு உணவையும் வயிறு களிற் 'திணித்து' முடித்தோம். மீண்டும் கதவுகள் பூட்டப்பட்டன. எமது அறை இருளில் மூழ்கியது.

(8)

இப்படியே பல நாட்கள் சென்றன. எமக்குத் தினமும் உணவு கொண்டு வருபவனிடம் ஒருநாள் பேச்சுக் கொடுக்கலானேன். அவன் எம்மீது அனுதாபம் கொண்டுள்ளது போற் தோன்றியதே அதற்குக்காரணமாகும். அவனது கருணை கலந்த பார்வையும், உணவு தந்துவிட்டுச் செல்லும் போது எம்மை நோக்கி உதிர்க்கும் புன்னகையும் என்னை வெகுவாகக் கவர்ந்திருந்தது.

'உன்னிடம் யாரப்பா தினமும் உணவு கொடுத்து அனுப்பிவைக்கிருர்கள்?'

'எங்கள் மன்னன்—அந்தக் கொடியவன்—தான் உணவு கொடுத்து அனுப்புகிருன். நான் அவனது பணியாள்.'

இவ்வாறுகூறிவிட்டு அன்பு ததும்பச் சிரித்தான்.

'உன்னிடம் எனக்கு இனந்தெரியாத ஒரு பாசம் உண்டாகிறது, தம்பீ.'

'எனக்கும் உங்களிடம் இரக்கம் பிறக்கிறது. உங்களுக்காக நான் மிகவும் அநுதாபப் படுகிறேன். உங்கள் நிலையை எண்ணி எண்ணி வேதனையுறுகிறேன்...'

'நாங்கள் இங்கிருந்து தப்பவே முடியாதா? எங்களின் எதிர்காலம் எப்படியிருக்கும்?'

'உங்களின் எதிர்காலமா? ஐயையோ, அதை நான் எப்படிச் சொல்வேன்...உங்களை...உங்களை மன்னன் சிரச்சேதம் செய்யவிருக்கிஞன்!'

'ஆ!...சிரச்சேதமா?என்ன கொடுமை இது?'—நான் அலறி அழுதேன். நெஞ்சிலே இடி இடித்ததுபோல இருந்தது.

(தொடரும்)

## நேரு பற்றி மருமகன் கடிதம்

தல்முனை மருமகள் செல்வி நா. இராசம்மா பின்வரும் கடிதத்தை மாமாவுக்கு அனுப்பியுள்ளார்:

'மதிப்பிற்குரிய வளர்மதி மாமா!

பணிவான வணக்கம்.

பாரதஜோதி திரு. நேருஜீ மறைந்த செய்தி யாவரையும் துக்கத்தி லாழ்த்தியது. அதிலே மாணவர்களாகிய நாங்களும் அவரின் சேவையை உலகம் உள்ளவரையும் போற்றக் கடமைப் பட்டுள்ளோம்.

மாமா! எமது பாடசாலை (இராமகிருஷ்ண மிஷன்) மாணவர்களும் ஆசிரியர்களும் ஆசிய ஜோதிக்கு அஞ்சலி செய்யுமுகமாக 28-5-64-ல் ஒரு மா பெரும் ஊர்வலத்தை நடாத்திஞர்கள். வெண் துகிலுடுத்துக் கறுப்புக் கொடியேந்தி நாங்கள் உள்ளம் உருகிப் பாடிச் சென்ற காட்சி எல்லோர் மனதையும் உருக்கியது. இதை 'வளர்மதி' மன்ற மருமகள் என்ற முறையில் நான் மாமாவுக்குக் கூறக்கடமைப் பட்டிருக்கிறேன்.'

## பொன் மொழி

ஒரு மனிதனில் ஊறியிருக்கும் குணதிசயங்கள் நல்லவையா அல்லது கெட்டவையா என்பதை அவன் தன் விரோதிகளிடம் எவ்வாறு நடந்து கொள்கிருன் என்பதில் இருந்து தான் அறிந்து கொள்ள முடியும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கழகச் செய்திகள்

## நேருவுக்கு அஞ்சலி

'மறைந்த மாபெரும் தத்துவ ஞானிகளில் முதன்மையிடம் பெற்றவர் இந்திய பிரதமர் நேருவாகும். அன்னாரின் காலத்திலேயே ஈழம் வாழ் இந்தியத் தமிழர்களின் உரிமைப் பிரச்சினை தீர்க்கப்படாமல் விட்டது துரதிர்ஷ்டமாகும். புதிய பிரதமர் சாஸ்திரி அவர்கள் இந்தியாவின் ஆட்சி மொழி விஷயத்தில் மிகவும் தீவிரவாதி என்பதைப் பத்திரிகைகள் வலியுறுத்துகின்றன. நாடற்றவர்களின் பிரச்சினையில் அவர் கருணை உள்ளத்துடன் நடந்து கொள்வார் என்பதில் நாம் நம்பிக்கை வைத்து ஏமாறக்கூடாது'.

இவ்வாறு காரைதீவு விவேகானந்த வாசிக சாலையில் நடைபெற்ற அனுதாபக் கூட்டத்தில் திரு. கே. கே. ஆறுமுகம் குறிப்பிட்டார். கூட்டத்திற்கு திரு.க. இளையதம்பி தலைமை வகித்தார். மற்றும் பலர் பேசினர். செல்வி. பரமேஸ்வரி தமிழ்ப்பா பாடினர்.

---

## முரசொலி கலா மன்றத்தின் அனுதாபம்

கடந்த 31-5-64 அன்று மாலை நாலு மணியளவில், நவபாரதத்தின் சிற்பி, ஜவஹர்லால் நேருவின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கு முகமாக, வெள்ளவத்தை அண்ணா இல்லத்தில் முரசொலி கலா மன்றத்தின் சார்பாகக் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

கூட்டத்திற்கு மன்றத்தின் பொருளாளர். திரு. வி. கே. பி. திராவிடச் செல்வம் தலைமை வகித்தார். கூட்ட ஆரம்பத்தில் திராவிட முன்னேற்றக் கழகக் கொடியும், காங்கிரஸ் கொடியும் அரைக் கம்பத்தில் பறக்க விடப்பட்டன. கர்மவீரன் நேருவின் மறைவிற்கு அனுதாபம் தெரிவிக்குமுகமாகத் தலைவர்களும், மன்ற உறுப்பினர்களும் இரண்டு நிமிட நேரம் மௌனம் அனுஷ்டித்தனர். கூட்டத்தில் பேசியவர்கள்: மன்றத் தலைவர் புரட்சியழகன், துணைத் தலைவர் வி. கே. தேவன், உதவிச் செயலாளர் ஏ. பி. லிங்கப், மற்றும் செல்விகள்: வசந்த மலர், தமிழ்ச் செல்வி, பொற்கொடி, புரட்சியழகி. தலைவர் வி. கே. பி. திராவிடச் செல்வம் நன்றி உரையுடன் கூட்டம் முடிவுற்றது.

---

## மலையக சமூக சீர்திருத்த சேவா மன்றம் அங்குரார்ப்பணம்

மலையக சமூக சீர்திருத்த சேவா மன்றத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் கடந்த 30-5-64-ல் சனிக்கிழமை மதியம் பிற்பகல் 4-30 மணியளவில் பசுமலை ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் மண்டபத்தில் கூடியது.

ஆசிரியர் திரு. கதிரைவேல் அவர்கள் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்கள். திரு. லிங்கதாசன் அவர்களின் தேவாரப் பாடலுடன் கூட்டம் ஆரம்பமாகியது.

முதலில் மறைந்த தலைவர் ஆசியஜோதி நேருவுக்கு அனுதாபம் தெரிவித்து சபையோர்கள் மூன்று நிமிட மௌனம் அனுஷ்டித்தனர்.

அடுத்தபடியாக மன்றத்திற்கு சபையோர்கள் ஏகமனதாக ஏற்றுக் கொண்டதன்படி ம. ச. சீ. சே. மன்றம் என நாமம் இடப்பட்டு, தலைவராக திரு. எம். சுப்பையா (செல்வம்) அவர்களையும், உப தலைவர்களாகத் திருவாளர்கள்: எம். ஞானசேகரம், வி. பி. ராமசாமி, எம். ராஜ் ஆகிய மூவர்களையும், காரியதரிசியாக திரு. லிங்கதாசனையும், உப காரியதரிசியாக திரு. பி. முத்துசாமியையும், தனாதிகாரியாக திரு. மலரையும், கணக்குப் பரிசோதகராக ஆசிரியர் திரு. சிவனடியான் அவர்களையும், போஷகர்களாகத் திருவாளர்கள்: ஏ. ரி. முத்துசாமிப்பிள்ளை, வை. கந்தையாபிள்ளை, பி ஓ. சிவன், ஆசிரியர், பி. செல்வராஜ், கே. பெருமாள் (கனகம்) ஆகிய ஐவர்களையும், இன்னும் ஒவ்வொரு தோட்டத்திற்கும் ஒவ்வொருவராக பதினேழு செயற்குழு அங்கத்தினர்களையும், சபையோர்கள் தேர்ந்தெடுத்தனர்.

---

## வருடாந்தக் கூட்டம்

திருகோணமலை கடற்படை இந்து சமய பரிபாலன சபையின் ஐந்தாவது வருடாந்தக் கூட்டம் 3-6-64 புதன்கிழமை பிற்பகல் 4-15 மணியளவில் கடற்படை சிவிலியன் விளையாட்டு மண்டபத்தில் திருவாளர் சு. விசுவநாதன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. திரு. கே. ரி. இரத்தினதுரை அவர்களின் பக்திப் பாடலுடன் கூட்டம் ஆரம்பமாயிற்று. காரியதரிசியினதும் தனாதிகாரியினதும் அறிக்கைக்குப் பின் தலைவர் அவர்கள் டொக்யாட் பிள்ளையார் கோவில் கட்டிட வேலைகள் முடிவடையும் பருவத்தில் இருப்பதாகவும், இத் திருப் பணி வேலைக்கு உதவி புரிந்த எல்லோருக்கும் நன்றி தெரிவிப்பதாகவும் கூறினர். அதன் பின் உத்தியோகத்தர் தெரிவு நடைபெற்றது.

தலைவர்: திரு. எஸ். விசுவநாதன், உப தலைவர்: திரு. கே. முத்துலிங்கம், காரியதரிசி திரு. ஏ. குருநாதன், உப காரியதரிசி: திரு. எஸ். சின்னத்துரை, தனாதிகாரி: திரு. எஸ். கே. இராசரத்தினம், கணக்குப் பரிசோதகர் திரு. கு. நமசிவாயம். அத்துடன் 21 பேர்களையும் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

---

## புதிய நிருவாகிகள் தெரிவு

தாராக்குண்டு முஸ்லீம் மகா வித்தியாலயப் பழைய மாணவர் கழகத்தின் பன்னிரெண்டாவது வருடாந்தக் கூட்டம் கழக நூல் நிலைய மண்டபத்தில் நடைபெற்றது. மேற்படி வித்தியாலய அதிபர் ஜனாப் எம். என். ஐயூப் அவர்கள் பேசுகையில் பாடசாலையின் சகல முயற்சிகளுக்கும் உதவும் பண்பு இக் கழக அங்கத்தினரிடம் காணப்படுகின்றமை கண்டு மகிழ்ச்சியடைகிறேன்" என்று குறிப்பிட்டார்.

பின்னர் பின் வருவோர் கழகத்தின் புதிய நிருவாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: ஜனாப் எம். ஏ. அர்முகம்மது, செயலாளர்: ஜனாப் எம். யூனூஸ்; துணை செயலாளர்: ஜனாப் எம். கப்ப நெயினு. பொருளாளர்: ஜனாப் எம். எம். இபுருகீம், இவர்களுடன் ஒன்பது பேர் கொண்ட நிருவாக சபையும் அமைக்கப்பட்டது. கணக்குப் பரிசோதகராக ஜனாப் ஏ. அமா[illegible] தெரிவு செய்யப்பட்டார்.

---

## கழகச் செய்திகள் அனுப்புவோருக்கு

★ நடைபெறவிருக்கும், நடைபெற்ற நிகழ்ச்சிகள் பற்றிய செய்திகளைச் சுருக்கமாகவும், தெளிவாகவும் எழுதி அனுப்பவும்.

★ நடைபெறவிருக்கும் நிகழ்ச்சிகள் பற்றி எழுதும் போது, துண்டுப் பிரசுரங்களை மாத்திரம் அனுப்பி வைத்தால் போதாது.

இன்ன திகதியில், இன்ன இடத்தில் நிகழ்ச்சி நடைபெறுமென்பதையும், இன்ன இன்னர் அதில் பங்கு பற்ற விருக்கிறார்களென்பதையும் கையெழுத்தில் செய்தியாக எழுதி அனுப்ப வேண்டும். நிகழ்ச்சி எக்காரணம் கொண்டும் ரத்துச் செய்யப்பட்டால், அதை எமக்கு உடனடியாகத் தெரிவிக்கவும் வேண்டும்.

★ கழகச் செய்திகள் முழு நீள புல்ஸ்காப் தாளின் ஒரு பக்கத்தில் அடங்க வேண்டும். விசேட செய்திகளானால், ஒன்றரை அல்லது இரண்டு பக்கங்களுள் அடங்க வேண்டும்.

★ கழகச் செய்திகள் அனுப்புவோர் தாளின் ஒரு பக்கத்தில், மையினால் தெளிவாக எழுதி அனுப்ப வேண்டும். மறு பக்கத்தில் எழுதக் கூடாது.

★ கழகச் செய்திகளை, ஆசிரியர், 'கழகச் செய்திகள்', சுதந்திரன், த. பெ. இல: 1183, கொழும்பு—12, என்று தமிழில் முகவரியிட்டு அனுப்ப வேண்டும். செய்திகளும் தமிழிலேயே முற்றுமுழுதாக எழுதப் பட்டிருக்க வேண்டும்.

★ கழகச் செய்திகள் அனுப்புவோர் மேற்காணும் விதிகளை அனுசரிப்பதன் மூலம், அவர்கள் தமக்கும், தமது கழகத்துக்கும் நன்மை செய்தவர்களாவர்.

★ இவ்விதிகளுக்கடங்கிய செய்திகளே பிரசுரத்துக்கு ஏற்கப்படும்.

# பண்பாட்டின் சிறப்பே .... ....

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

இல்லை. பனி, பனிக் கட்டி, மூடுபனி என்று விளக்குகிறோம். எஸ்கிமோ மொழியில் 'ஸ்நோ' என்பதற்குப் பொதுவான சொல் கிடையாது ஆனால் ஒவ்வொரு வகையான 'ஸ்நோ'வுக்கும் ஒவ்வொரு வகையான பெயர் இருக்கிறது. அவரவர் வாழ்க்கை முறைகளைப் பற்றியும், சூழ்நிலைகளைப் பொறுத்தும் இவ் வேறுபாடுகள் அமைந்திருக்கின்றன. ஒவ்வொரு மொழியும் அந்த அந்தச் சமூகத்தின் தேவையைப் பூர்த்தி செய்கிறது.

## உயர்வும் தாழ்வும்

முன்பு கூறிய இரண்டு கருத்துக்களையும்அடிப்படையாகக்கொண்டு காணும் பொழுது மொழிகளிடையே உயர்வு தாழ்வு காண்பது பொருத்தமற்ற கொள்கை என்பது புலனுகிறது. ஒவ்வொரு மொழியும் அந்த அந்தப் பண்பாட்டுக்குப் பொருத்தமானது. அந்தப் பண்பாட்டை விளக்க இதைவிடச் சிறந்த மொழி ஒன்று அமைந்திருக்கலாம். ஆனால் மனிதன் செய்யும் எதுவுமே குறையற்றதாக இருக்கமுடியாது. ஆங்கில மொழி செம்மையானது. ஜப்பானியருக்கு ஜப்பான் மொழி செம்மையானது. தமிழனுக்குத்தமிழ் மொழி செம்மையானது. மொழிகளை ஒப்பிட்டுஉயர்வு தாழ்வு காணும்பொழுது நாம் உண்மையிலேயே அந்த மொழிகளால் விளங்கும் பண்பாடுகளை ஒப்பிட்டு அவற்றிடையே உயர்வு தாழ்வுகாண்கிறோம். பிரஞ்சு ஆங்கிலத்தைவிடச் சிறந்தது என்றால், பிரஞ்சு பண்பாடு, கலை இவை ஆங்கிலப் பண்பாடு, கலை இவைகளை விடச் சிறந்தன என்பது தான் பொருள். மேற்கு நாடுகளில் சிறந்த உணவுகளுக்கெல்லாம் பிரஞ்சுப் பெயர்கள் தான் வழங்குகின்றன.

## அழகும் அழகின்மையும்

இதைப்போலவே மொழிகளிடையே அழகினைக் காண்பதும் பொருளற்றசெயலேயாகும். அழகினை அளக்கப் பொதுவான அளவுகோல் இருக்கிறதா என்பதே ஐயப்பாடு. தமிழனும், ஆங்கிலேயனும், ஜப்பானியனும் அழகிய பெண் என்றால் வெவ்வேறு வகையான அழகையே காண்கின்றனர். எனவே அழகு என்பதும் அந்த அந்தப் பண்பாட்டால் கட்டுப்பட்டே இருக்கிறது. இக்கட்டுப்பாடுகளைக் கடந்து அழகினைக் காணமுடியும். ஆனால் எந்த மனிதனும் பிற எதுவும் தன்மொழியின் அழகுக்கு ஒவ்வாது என்ற எண்ணத்தை அறவே விட்டுவிட முடியுமா என்பது ஐயப்பாடே. மொழியில் காணும் அழகெல்லாம் அம்மொழி தரும் பொருளிலேயே அமைந்திருக்கிறது. தமிழில் 'பீ' என்றால் அருவருக்கும் சொல்; அவையடக்கச் சொல். ஆனால் 'பீலி' என்பதில் வருகின்ற பீ என்ற ஒலியைக் கேட்டு நாம் அருவருப்பு அடைவதில்லை. எனவே இத்தகைய விருப்பும் வெறுப்பும் பொருளில் இருக்கிறதே ஒழிய மொழியில்—அதன் ஒலிகளில் இல்லை.

## மொழியின் வெற்றி

இறுதியாக மொழியின் வெற்றி அது அந்தச் சமூகத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்வதைப் பொறுத்தே அமைந்திருக்கின்றது என்பதையும் நாம் உணரவேண்டும். தமிழ், தமிழன் தமிழ் மக்களிடையே மயக்கமின்றிப் பேசி பழகப் பயன்பட்டதாயின் அதன் வேலை முடிந்துவிட்டது எனலாம். நான் என் அடுத்தவீட்டுக் காரரோடு தமிழில் பேசுகிறேன். அவரும் என்னோடு தமிழில் பேசுகிறார். ஒருவர் பேசுவதை மற்றொருவர் திரிபின்றி உணர்ந்து கொள்கிறோம். எங்கள் சமூகத் தொடர்புக்குத் தமிழ் பூரணமாகப் பயன்பட்டு விட்டது. இதுதான் தமிழின் வெற்றி.

யாழ்ப்பாணத் தமிழர் ஒருவரோடு பேசுகிறேன். ஒருவர் பேசுவதை மற்றொருவர் ஓரளவுதான் புரிந்துகொள்ள முடிகிறது. எங்கள் சமூகத் தொடர்பில் இப்பொழுது இடர்ப்பாடுகள் உண்டாகின்றன. இப்பொழுது தமிழில் உயர்வு தாழ்வு காண முயலுகிறோம். எது நல்ல தமிழ்? எது கெட்ட தமிழ்? யாழ்ப்பாணத்தவருக்கு அவருடைய தமிழ் போதும். நம் தமிழ் பயன்படாது. நமக்கு அவர் தமிழ்பயன்படாது. நமக்கு நம் தமிழ் போதும். தமிழ் தோன்றிய இடம் நமது; சங்கம் இருந்த இடம் நமது; பெரும் புலவர்கள் வாழ்ந்த இடம் நமது; ஆகையால் நம் தமிழே சிறந்தது என்கிறோம். ஆனால் இப்பொழுது உயர்வு தாழ்வு காண மொழியியலை நாடவில்லை; பிற காரணங்களையே நாடுகிறோம்.

மொழிக்கு ஏற்படுகின்ற பெருமை எல்லாம் ஆளைப் பொறுத்தது. காமராசர் பேசும் தமிழும், அண்ணாத்துரையார் பேசும் தமிழும், கிராமணியார் பேசுந் தமிழும் ஒவ்வொரு வகை. அவ்வகை அவரவருக்கு எனச் சிறப்பாக அமைந்தது. அந்த நடைக்குப் பெருமை காமராசர் பேசுவதால், அண்ணாத்துரையார் பேசுவதால், கிராமணியார் பேசுவதால் ஏற்பட்டது. ஆளைப் பொறுத்து அந்தத் தமிழுக்குப் பெருமை ஏற்படுகிறது. நமது சமுதாயத்தில் படித்தவர்கள் திருத்தமாகப் பேசுகின்ற தமிழ் சிறப்பிடம் பெறுகிறது. ஆனால் இன்னொரு சமுதாயத்தில் படிக்காதவர் பேசுகின்ற மொழியே சிறப்பிடம் பெறலாம். எனவே மொழிக்கு ஏற்படுகின்ற பெருமைகளெல்லாம் அந்த அந்தப் பண்பாட்டைப் பொறுத்ததே ஒழிய வேறில்லை.

இதுவரை மனிதன் வாழ்வில் மொழி பெறுகின்ற இடத்தைக் காண முயன்றோம். உயிரியல்நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டு பார்த்தால் மொழி இரண்டாவதான இடத்தையே பெறுகிறது என்பதைக் கண்டோம். வேறொன்றற்கெனப் படைக்கப்பட்ட உறுப்புகள் இதற்கும் பயன் படுத்திக்கொள்கிறோம். உளத் தத்துவ முறைப்படி பார்த்தால் மொழி இயற்கை நிகழ்ச்சியன்று, செயற்கை நிகழ்ச்சி என்பது பெறப்படும். மொழியைஒவ்வொருவனும் கற்றுத்தான்தெரிந்து கொள்ளவேண்டும். மொழி தோன்றிய முறை, பயன்படுகின்ற முறை எல்லாம் சமூக நிகழ்ச்சிகளேயாகும். மானிட இயல் வல்லுநர் கூறுகின்ற பண்பாட்டில் மொழியும் ஒன்று. மொழியில் உயர்வு தாழ்வு காண்பதும் அழகினைக் காண்பதும் அந்த அந்தப் பண்பாட்டின் உயர்வு தாழ்வுகளையும், அழகினையும் காண்பதாகவே முடியும். மொழி அப்பண்பாட்டைவிளக்கப்போதுமா என்பதைப் பொறுத்தே அது வெற்றி பெறுகிறது. தன் வேலையைப் பூரணமாகச் செய்து முடிக்கிறது.

—அனுமந்[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காட்சிக்குக் காட்சி கொட்டகை கொள்ளா ஜனத்திரள்





டைரக்ஷன்: A.C.திருலோகசந்தர் M.A.
வசனம்: ஆரூர்தாஸ் இசை: R.சுதர்சனம்

MB

5வது வாரமாக வெற்றி முரசு கொட்டுகிறள்

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
விஜிதா (அட்டன்) வெம்பிளி (கண்டி) ஸ்ரீ கிருஷ்ணு (திருகோணமலை)
மொடேர்ன் (பதுளை) சீதா (பலாங்கொடை)

எஸ். எஸ். ராஜேந்திரன்—விஜயகுமாரி
ரங்கராவ்—சுப்பையா—ராஜன்—புஷ்பலதா
நடிக்கும்

## நானும் ஒரு பெண்

வெகு விரைவில் திரையிடப்படவிருக்கிறது!
மனேகர்—மனேரமா—கருணநிதி
மற்றும் பலர் நடிக்கும்
மொடர்ன் தியேட்டர்ஸ்

## கொஞ்சும் குமரி

தரத்தில் உயர்ந்த தீந்தமிழ் சித்திரமென நாடும் ஏடும் போற்றிய நல்ல படம்
மீண்டும் உங்களை மகிழ்விக்க வந்திருக்கிறது!

## 2-வது வெற்றி வாரம்!

### சென்ட்ரல் (மருதானை)



புரட்சி நடிகர்
எம். ஜி. ராமச்சந்திரன்,
சரோஜாதேவி, அசோகன், எம். ஆர். ராதா,
எம். ஆர். ஆர். வாசு, காலஞ்சென்ற பி. கண்ணும்பா,
ஆகியோர் தோன்றும்
தேவர் பிலிம்ஸ்

## தாயைக் காத்த தனயன்

## 2வது ஜனரஞ்சக வாரம்!

செல்லமஹால் (கொட்டாஞ்சேனை) வின்ஸர் (யாழ்ப்பாணம்) இம்பீரியல் (மட்டக்களப்பு)
நெல்சன் (திருகோணமலை) அசோகா (புத்தளம்) ரீகல் (நீர்கொழும்பு)

கல்யாண் குமார்—தேவிகா
சந்திரபாபு - ராஜஸ்ரீ - புஷ்பலதா
மனேகர் - பி. எஸ். சரோஜா
எஸ். வி. சுப்பையா
மற்றும் பலர் நடித்த



மொடர்ன் தியேட்டர்ஸ்

## யாருக்கு சொந்தம்

சிலோன் தியேட்டர்ஸ் திரைகளில்
விரைவில்!

சிவாஜி கணேசன்-ஜெமினி கணேசன்
எஸ். வி. ரங்கராவ்-சந்திரபாபு
வி. கே. ராமசாமி-சாவித்திரி-தேவிகா
எம். வி. ராஜம்மா சந்திரகாந்தா
நடித்த



## பந்த பாசம்

இசை : விஸ்வநாதன் — ராமமூர்த்தி
பின்னணி : ஸ்ரீனிவாஸ், சுசிலா, ஜானகி, சௌந்தரராஜன், சீர்காழி கோவிந்தராஜன், சந்திரபாபு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்க வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1964-ம் வருடம் யூன் மாதம் 21-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.